# பக்கம் வரத் துடித்தேன்

விஜி பிரபு



# பக்கம் வரத் துடித்தேன்

## 1

"திருப்பதி மலை வாழும் வெங்கடேசா...

திருமகள் மனம் நாடும் – சீனிவாசா..."

அவுட் ஹவுசில் ஒலித்த பாடலைக் கேட்டுக்கொண்டே அந்த பெரிய மாளிகையில் இருந்து வெளியே வந்தான் தீபன்.

அனைவராலும் தீபன்ராஜ் என்று மரியாதை மற்றும் பயத்துடன் அழைக்கப்படும் தீபன் மிகவும் சாதாரணமாக தோற்றமளிக்கும் வெண்ணிற டிராக் சூட்டில் இருந்தான்.

அவன் வெளியே வந்தவுடன் வேகமாக ஓடிவந்து அவன் அருகே நின்றுகொண்ட வேலாயுதம் சுற்று முற்றும் பார்த்துக்கொண்டே மெல்லிய பவ்யமான குரலில் தீபனைக் கண்டித்தான்.

''என்ன பாஸ் இது? எத்தனை முறை சொன்னாலும் கேட்க மாட்டேன் என்கிறீர்களே?''

''நீ சொல்லி எதையாவது நான் இதுவரை கேட்காமல் இருந்திருக்கிறேனா வேலாயுதம்?'' மெல்லிய புன்முறுவல் ஓடும் முகத்துடன் கேலியாகக் கேட்டான் தீபன்.

''விளையாடுற விசயமா பாஸ் இது...?''

''என்ன விசயத்தைப் பற்றிச் சொல்றே?''

''ஐயோ பாஸ்... கேலியெல்லாம் அப்புறமாச் செய்து கொள்ளலாம் பாஸ். நீங்க முதல்ல உள்ளே போங்க. அதான் ஒரு புளோர் முழுக்க ஜிம்மா மாத்தி அமைச்சுருக்கோமே? நீங்க வாக்கிங் போகணும்னா டிரட்மில்லில ஏறி நடக்கலாமே? சொன்னாக் கேளுங்க பாஸ்?''

''இப்ப எதுக்காக இவ்வளவு டென்ஷன் ஆகிற வேலாயுதம்? கோழைங்கதான் பயந்துகிட்டு வீட்டுக்குள்ளயே உட்கார்ந்திருப்பீங்க. உங்க பாஸ் வீரன் வேலாயுதம்...'' அழுத்தமாக வெளிவந்தது தீபனின் குரல்.

''நீங்க வீரன் இல்லைன்னா இந்த உலகத்துல வீரம் என்ற பேச்சுக்கே அர்த்தம் இல்லாமல் போய்விடும்



பாஸ். நான் அதுக்குச் சொல்லலை. நீங்க வீரமா யாரையும் நேருக்கு நேர் நின்று ஒரு கை பார்த்துடுவீங்க. ஆனால் உங்க எதிரிகள் யாரும் அப்படியில்லையே?''

''அதுக்குப் பயந்துகிட்டு வெளிக்காற்றைக் கூட சுவாசிக்காமல் வீட்டுக்குள்ளே முடங்கச் சொல்கிறாயா?'' தீபனின் பார்வையில் இதயம் பயத்தில் சில்லிட வாயை மூடிக்கொண்டு சிறிது தள்ளி விறைப்பாக நின்றுகொண்ட வேலாயுதத்தின் பார்வை முன்னைவிட வேகமாக சுற்றும் முற்றும் சுழன்றது.

''கவலைப்படாதே வேலாயுதம். நீ இருக்கும் வரை என்னை ஒரு காற்றுகூட நெருங்க முடியாது'' என்று வேலாயுதத்தை சமாதானம் செய்யும் விதமாக அவர் தோள்களை தட்டிக் கொடுத்த தீபன் மெதுவாக தோட்டத்தைச் சுற்றிப் போடப்பட்டிருந்த சிமிண்ட் நடை பாதையில் நடக்க ஆரம்பித்தான்.

வேகமாக பின்னால் திரும்பிய வேலாயுதத்தின் கண்ணசைவில் நான்கு திடகாத்திரமான செக்யூரிட்டி ஆண்கள் தீபனைச் சுற்றி பாதுகாப்புடன் அவன் கூடவே நடக்க ஆரம்பித்தனர்.

வேலாயுதத்தின் அன்பை எண்ணிப் புன்னகை செய்த தீபன், அவனுடன் மேற்கொண்டு எதுவும் பேசாமல் வேகமாக நடைப்பயிற்சியை ஆரம்பித்தான்.

'தீபன்ராஜ்' பெங்களூர் சிட்டியே பயத்துடன் உச்சரிக்கும் பெயர் இது. அந்தப் பயம் கூட அடாவடித்தனம் செய்யும், அநியாயம் செய்யும் ஒருவரைப் பற்றிக்

குறிப்பிடும் அருவெறுப்பான பயம் அல்ல. நியாயமான எதற்கும் நேர்மையாக, எப்பேர்ப்பட்ட தாதாவாக, அரசியல்வாதியாக, பெரும் பெரும் பணக்காரராக இருப்பினும் அவர்களை நேருக்கு நேர் எதிர்த்து நின்று அவர்கள் இருந்த சுவடுகூடத் தெரியாமல் அழித்து விடும் வீரத்தைப் பார்த்து ஆச்சரியத்துடன் வெளிவரும் பயம்.

''தீபன் சார். என்னோட புது அபார்ட்மெண்டிற்கு வெளியே கட்சி போர்டு போட்டுக்கிட்டு அந்த அரசியல்வாதியின் ஆட்கள் செய்யும் அட்டூழியங்களுக்கு அளவே இல்லாமல் போயிட்டிருக்கு சார். இதனால அந்த அபார்ட்மெண்டை யாரும் விலைக்கு வாங்க மாட்டேங்கறாங்க. எனக்கு இதனால கோடிக்கணக்குல நஷ்டம் சார்'' அழாத குறையாக தன்முன் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கும் பெரிய மனிதரை அளவெடுத்தபடியே அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தான் தீபன்.

''அந்தக் கட்சி தலைவரிடம் போய் பேசிப் பார்க்க வேண்டியதுதானே சார்?''

''இப்படி அடாவடி செய்யச் சொல்றதே அவர்தானே சார்.''

''எதற்காக?''

''பத்து கோடி வேணுமாம். அந்த ஏரியாவுல அவங்ககிட்ட கேட்காம யாரும் வீடு கட்ட மாட்டாங்களாம்?''



''ஏன் நீங்களும் முதலிலேயே அவங்ககிட்டக் கேட்டு இருக்க வேண்டியதுதானே?'' கேட்ட தீபனின் குரலில் கோபமாக நிமிர்ந்தார் எதிரில் இருந்தவர்.

''நான் எதுக்கு சார் இவங்ககிட்டப் பர்மிஷன் கேட்கணும்? நான் யாரோ காசிலயும் தொழில் பண்ணல. எங்க அப்பன், பாட்டன் சேர்த்து வைச்சிருந்த காசைப் போட்டுத் தொழில் பண்றேன். நேர்மையா பைசா பாக்கியில்லாம அரசாங்கத்துக்கு டாக்ஸ் கட்டறேன். அப்புறம் எதுக்கு சார் நான் யாருக்கும் பயப்படணும்?''

''சரி இப்ப மட்டும் எதுக்கு என்கிட்டக் கம்ப்ளெயிண்ட் பண்றீங்க.''

''இந்த அபார்ட்மெண்ட் விசயம் என் சொந்த காசு சம்பந்தப்பட்டது இல்லை சார். மொத்தம் ஐம்பது வீடுகள் கொண்ட அபார்ட்மெண்ட் அது. அதுல இருபது வீடுகள் வரை சேல்ஸ் ஆகியிருக்கு. வாங்குனவங்க யாரும் பெரிய வசதி படைச்சவங்க இல்லை சார். நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த சாதாரணமானவங்க. பொண்டாட்டி புள்ளைங்களோட நகையையும், வாழ்நாள் முழுவதும் அவங்க உழைச்சு சேர்த்த காசையும் போட்டு சொந்தமா ஒரு வீடு வாங்கிறணும்கிற கனவுக்காக இது வாங்கினவங்க. அவங்கள்ளாம் இன்னைக்கு அந்த வீட்டுல குடியேற முடியாமல் தவிக்கிறாங்க. சரி பணத்தைத் திருப்பித் தர்றேன்னு நான் சொன்னாலும் கேட்க மாட்டேன் என்கிறாங்க. ஏன்னா இந்த சிட்டியிலேயே குறைஞ்ச லாபத்துக்கு நியாயமான முறையில் வீடுகட்டி விக்கிறவன் நான் மட்டும்தான்.''

மெதுவாகத் தலையைத் திருப்பி வேலாயுதத்தைப் பார்த்தான் தீபன். அவன்,

'ஆமாம்' என்பதற்கு அர்த்தமாக லேசாகத் தலை யசைத்தான்.

''அதான் சார். உங்களைப் பார்த்தால் நீங்க நியாயமா எதாச்சும் சொல்யூசன் சொல்வீங்கன்னுதான் உங்களைப் பார்க்க வந்தேன். இந்த உதவியை நீங்க செய்தீங்கன்னா அதற்கும் கைமாறாய் என் உயிரைக் கூடத் தரத் தயாராக இருக்கிறேன்'' ஏனென்றால் தீபன் பணத்திற்காக வேலை செய்பவன் கிடையாது என்பது அவருக்குத் தெரியும்...

''நீங்க போங்க சார். நான் என்னால ஏதாவது செய்ய முடியுமான்னு பார்க்கிறேன்'' அமைதியாக ஒலித்தது தீபனின் குரல்.

மறுநாள் காலையில் அபார்ட்மெண்ட வாசலுக்குப் போனவர் திகைத்துப் போனார். வாசலில் இருந்த கட்சி ஆபீஸ் இருந்த சுவடு தெரியாமல் காணாமல் போயி ருக்கும். காத்திருந்த காரில் இருந்து இறங்கிய அரசியல்வாதியின் செயலாளர், ''நீங்க என்ன தேதியில் இங்கே ஆரம்ப நாள் விழாவை நடத்தப் போறீங்கன்னு ஐயா கேட்டுவரச் சொன்னார். அன்னிக்கு அவரே வந்து ஆரம்பிச்சு வைக்கிறாராம்'' என்று கூறியதைக் கேட்ட அபார்ட்மெண்ட் ஓனருக்கு ஆச்சரியத்தில் நெஞ்சு அடைப்பதைப் போல இருக்கும். நடந்த எதையும் நம்பமுடியாமல் கைகூப்பி மனதுக்குள் தீபனுக்கு நன்றி சொல்வார் அவர்.





# 2

''என்ன வள்ளி, பூஜையெல்லாம் முடிஞ்சிருச்சா?'' அவுட் ஹவுசில் இருந்து வெளிவந்த வள்ளி தீபனைப் பார்த்து பாசத்துடன் சிரித்தாள் வள்ளி.

''என்னண்ணா பெரிய பூஜை? மனசு சுத்தமாக அந்த சாமி முன்னாடி நின்னு பத்து நிமிசம் கண்மூடிக் கும் பிடுறேன் அவ்வளவுதான்.''

''என்னை மாதிரி ஆட்கள் அதைக்கூடச் செய்ய மாட்டேன் என்கிறோமே?''

''அதுதான் உங்களுக்கும சேர்த்து அந்த ஆண்ட வனிடம் தினமும் நான் வேண்டிக்குறேனேண்ணா?'' கேட்ட வள்ளியின் தலையை பாசத்துடன் தடவிக் கொடுத்தான் தீபன்.

''இந்த அண்ணன் மேல் உனக்கு இவ்வளவு பாசம் இருக்குதா?''

''என்னண்ணா இப்படிக் கேட்டுட்டீங்க. எங்களுக்கு நீங்க அந்த ஆண்டவனுக்கு ஒப்பானவர் அண்ணா?''

''பெரிய மனுசி! பெரிய பெரிய பேச்செல்லாம் பேசுற. எனக்குத்தான் இது ஒண்ணுமே புரிய மாட்டேங்குது?'' கேலியாகச் சிரித்தான் தீபன்.

''உங்களுக்காண்ணா புரியாது. நீங்கதான் பெரிய நடிப்புக்காரராச்சே.''

''இந்த தீபனை நடிப்புக்காரன்னு சொன்ன ஒரே ஜீவன் நீதான்மா.''

''மத்த யாருக்கும் சொல்ல தைரியம் இல்லே. எனக்கு உங்ககிட்ட என்ன பயம். அதான் சொல்லிட்டேன்'' வெகுளியாக கூறிவிட்டு மாளிகைக்குள் ஓடினாள் வள்ளி.

தீபனுக்கு சொந்தம் என்று சொல்லிக்கிற ஒரே உறவு இந்த ஊரில் வள்ளியும் அவளது பெற்றோர்களும் தான். இருபத்தோரு வயதான தீபனின் பெற்றோர் இறக்கும் பொழுது பதினைந்து வயதுப் பாலகன் அவன். ஓரளவிற்கு வசதியான அவனது பெற்றோர் கிராமத்தில ஒரு பெரிய வீட்டையும், பத்து ஏக்கர் நிலத்தையும், பேங்க்கில் ஓரளவிற்கு சேமிப்பையும் விட்டுச் சென்றிருந்தாலும் சொந்தமென்று சொல்லிக் கொள்கிற அளவிற்கு நெருக்கமான உறவுகளையோ உடன் பிறப்புக்களையோ அவனுக்காக விட்டுச் செல்ல வில்லை.

அவனது சொத்திற்காகவும், பெற்றோர் அவனுக்காக விட்டுச் சென்ற சேமிப்பிற்காகவும் அவனை நெருங்கி வந்த தூரத்து உறவுகளையும் தன்னிடம் சேர்க்கவில்லை அவன். அதுசமயம் அவனுக்கு இருந்த ஒரே ஆதரவு அவன் அன்னையுடன் ஆத்மார்த்தமாக பழகி வந்த பொன்னம்மாள் குடும்பம் மட்டும்தான்.



''கலங்காத சாமி. உனக்கு நாங்க இருக்கோம். உன் தங்கையைப் போல வள்ளியிருக்கா. நீ எதுக்கும் பயப்படாத... நாங்க இங்க பக்கத்துல தான் இருக்கோம்?'' ஆதரவாக அணைக்கும் பொன்னம்மாள் மேல் மட்டற்ற பாசம் பெருகுகிறது தீபனுக்கு.

''அதெல்லாம் ஒண்ணுமில்ல சித்தி. ராத்திரியில தனியாய் படுக்கத்தான் பயமாயிருக்கு. அம்மாவும் அப்பாவும் எப்பவுமே எனக்கு ரெண்டு பக்கத்திலயும் படுத்துத்தான் தூங்குவாங்க'' அழுகையை அடக்கிக் கொண்டு பேசும் அந்த பாலகனை நெஞ்சோடு அணைத்துக் கொள்வாள் அவள்.

''பயப்படாதே ராசா. இப்பவும் அம்மாவும் அப்பாவும் தெய்வமா உன்னோட ரெண்டு பக்கத்திலயும் காவலா நிப்பாங்க.''

''நெசமாவா சித்தி. இப்பவும் இருப்பாங்களா?''

''இப்ப மட்டுமல்ல ராசா... எப்பவுமே இருப்பாங்க. நீ அவங்களை கண்ணாலதான் பார்க்க முடியாதே தவிர அவங்க உன்கூடவே இருப்பதை உணர முடியும்யா... அதனால உனக்கு என்னிக்கும் மனசுல பயம் தோணக் கூடாது. நீ ஆம்பிளை சிங்கம்யா.''

அன்று இரவு கண்மூடிப் படுத்தவனுக்கு தன் இருபுறமும் பெற்றோரின் மூச்சுக்காற்று கேட்பதுபோல இருந்தது. அன்றிலிருந்து இன்றுவரை அவனுக்கு பயம் என்பதே வந்ததில்லை. எதையுமே நேருக்கு நேராய் சந்திக்கும் துணிச்சலையும், தன்னம்பிக்கையையும் தனக்குத் தானே வளர்த்துக் கொண்டான் தீபன்.

பெற்றோர் தனக்காக விட்டுச்சென்ற நிலங்களை குத்தகைக்கு விட்டுவிட்டு அதனை மேற்பார்வை பார்க்கும் பொறுப்பை பொன்னம்மாளிடமும் அவள் கணவன் மாரிமுத்துவிடமும் கொடுத்தான் தீபன்.

''நான் பெங்களூர் போறேன் சித்தி. அங்க ஏதாச்சும் தொழில் தொடங்கலாம்னு நினைக்கிறேன்.''

''அதுக்கு ஏன் ராசா பெங்களூர் போகணும். இங்கன பக்கத்து டவுனிலேயே ஆரம்பிக்கலாமே.''

''யாருமில்லாத எனக்கு பக்கத்து டவுனும் பெங் களூரும் ஒண்ணுதானே சித்தி.''

''அப்படிச் சொல்லாத ராசா... அப்ப நாங்க உனக்குச் சொந்தமாத் தெரியலியா?'' முந்தானையால் கண்களில் பெருகிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டே கேட்டாள் பொன்னம்மாள்.

''நீங்க மட்டும் தான் சித்தி எனக்கு சொந்தம்னு இந்த உலகத்திலேயே இருக்கீங்க. நான் அங்க போய் கொஞ்சம் நல்லா வந்திட்டேன்னா உங்களையும் என்னோடவே கூட்டிட்டுப் போய் வெச்சுக்குவேன் சித்தி.''

''அதெல்லாம் வேணாம் ராசா. நீ மேல மேல வளர்ந்து பெரிய ஆளானால் அதுவே எனக்குப் போதும். உன்னைப் பெத்தவங்க ஆத்மாவும் அப்பத்தான் சாந்தியடையும்.''

''கண்டிப்பாய் பெரிய ஆளாய் வருவேன் சித்தி. நீங்க அதைப் பார்க்கத்தானே போறீங்க'' உறுதியுடன் கூறிய



அவன் அந்த உறுதியுடனேதான் பெங்களூர் மண்ணில் கால் வைத்தான்.''

தன்னைச் சுற்றித் தெரிந்த அறிமுகமில்லாத முகங் களை பார்த்த அவன் மனதிற்குள் பயத்திற்கு பதில் உற்சாகம் பொங்கியது. இவர்கள் அனைவராலும் அடையாளம் கண்டுகொள்ளப் படும் ஒருவனாக தான் மாறவேண்டும் என்ற உத்வேகம் அவன் உள்ளத்தில் தோன்றியது. அவனுடன் படித்த அமிர்தராஜ் பெங்க ளூரில்தான் இருந்தான். அவன்தான் தீபனைப் பெங்க ளூருக்கு வரச்சொல்லித் தூண்டியது. இருவரும் இணைந்து தொழில் செய்து பார்க்கலாம் என்று கூறி யிருந்தான் அவன். சென்னையைச் சேர்ந்த அவன் பெற்றோரைப் பிரிந்து அவன் மட்டும் பெங்களூரில் வீடு எடுத்துத் தனியாகத் தங்கி இருந்தான்.

''வாடா தீபா. உனக்காகத்தான் காலையில் இருந்து வெயிட்டிங். பசி வயித்தைக் கிள்ளுது. வா முதலில் டிபன் எதையாவது வயித்துக்குள்ள தள்ளுவோம்'' தீபன் கைகளில் இருந்த பெட்டியினை வாங்கிக் கொண்டே அவனை வரவேற்றான் அமிர்தராஜ்.

''சரியான சாப்பாட்டு ராமன்டா நீ. வந்தவுடன் சாப் பாட்டுத் தட்டுல உட்காரச் சொல்றியா'' வீட்டிற்குள் நுழைந்த தீபன் அந்தச் சிறிய வீட்டைச் சுற்றிப் பார் வையை ஓட்டினான்.

''நீ சுத்திப்பாக்குற அளவிற்குப் பெரிய மாளிகை எல்லாம் இல்லைடா இது.''

"இப்ப என்னடா? கூடிய சீக்கிரமே மாளிகையை வாங்கிட்டால் போச்சு" கூலாகக் கூறிய தீபனை வாய் பிளந்து பார்த்தான் ராஜ்.

"எப்படிடா இவ்வளவு கான்பிடென்ட்டா பேசுற!" ஆச்சர்யத்துடன் கேட்டவனைப் பார்த்து புன்னகைத்தான் தீபன்.

ஆனால் அவன் சொன்னபடியே இந்த ஐந்து வருடங்களில் ஒரு பெரிய மாளிகைக்கும், இரண்டு பெரிய அபார்ட்மெண்ட்டுகளுக்கும், பெரிய கார்மெண்ட் பேக்டரி, மற்றும் நான்கு கம்ப்யூட்டர் நிறுவனங்களுக்கும் சொந்தமான ஒருவனாக உயர்ந்து நிற்கிறான் தீபன். ஆனால் இத்தனை சொத்துக்களுக்கும் பின்னணியில் சில இருண்ட பக்கங்களும் அடங்கியிருப்பதை அவனை அறிந்த அனைவரும் அறிந்தே இருந்தனர். ஆனால் அந்த இருண்ட பக்கங்களும், அதில் அவன் கண்ட ரத்த சகாப்தங்களும் அவனுக்கு நம்பிக்கையான மனிதர்களையும், எதையும் சாதித்துக் கொள்ளும் வல்லமையையும் கொடுத்து இருப்பதை அவனை அறிந்த அனைவரும் தயக்கமின்றி ஒப்புக் கொள்வாக்ள். இன்று இந்த பெங்களூரில் அவனுக்கு எதிரிகள் எத்தனை பேரோ... அதைவிட அதிகமாக உண்மையான நண்பர்களும் விசுவாசமான வேலைக்காரர்களும் அதிகம். அவனது கம்பெனியின் கிளைகள் தென்னிந்தியாவில் உள்ள பெரிய நகரங்களிலும் கிளை பரப்பி விரிந்து நிற்கின்றன.





# 3

"ஈசனடி போற்றி..."

கண்மூடிக் கரம் குவித்து தன் நிலை மறந்து இறைவனை எண்ணிப் பாடிக்கொண்டிருக்கும் தன் மகளைப் பெருமையுடன் பார்த்தபடி இறைவன் சந்நிதியில் கைகூப்பி நின்றிருந்தார் அருணாச்சலம். தன் மகள் நிகிதாவைப் பார்க்கும் பொழுது என்றுமே தோன்றும் மனநிறைவு இன்றும் அவருக்குத் தோன்றியது. மெல்லத் திரும்பி தன் அருகில் நின்றிருந்த மனைவி பர்வதத்தை நோக்கினார். அவர் சொல்ல வருவதை அறிந்துகொண்ட பர்வதம் 'உஷ்' என்ற சத்தத்துடன் அவரை அடக்கினாள். அதைக் கண்ட அருணாச்சலத்தின் இளைய மகள் வாய்பொத்தி தந்தையைப் பார்த்துக் கேலியுடன் சிரித்தாள்.

சென்னையின் ஸ்டேட் பேங்கின் கிளை மேனேஜர் பொறுப்பில் இருப்பவர் அருணாச்சலம். உயர்ந்த வருமானம் என்று சொல்ல முடியாவிட்டாலும், 'அப்பர் மிடில் கிளாஸ்' என்று பெருமையாகச் சொல்லிக் கொள்ளும் அளவிற்கு சம்பாத்தியம் கொண்டவர். ஆனால் தன் பொருளாதார நிலையை விட தன்

குடும்பத்தை உயர்வாக என்னும் குணம் படைத்தவர் அருணாச்சலம். அதிலும் தன் இரண்டு பெண்களுமே அழகிலும் புத்திசாலித்தனத்திலும் வைரங்களாக ஜொலிப்பதினால் தன் பெண்களின் மேல் ஒரு விதமான கர்வமே அவருக்கு உண்டு. மூத்தவள் நிகிதா யுனிவர்சிட்டி கோல்டு மெடல் வாங்கி ஒரு பெரிய தனியார் நிறுவனத்தில் உதவி மேனேஜர் பொறுப்பில் இருந்தாள்.

''இந்தச் சின்ன வயசுல என் மகள் சாதிச்சதுல பாதி கூட இந்த வயசுல நான் சாதிக்கலைய்யா'' என்று தன் நண்பர்கள் அனைவரிடமும் மார்தட்டிக் கொள்வார் அருணாச்சலம்.

இளைய மகள் நித்யா பனிரெண்டாம் வகுப்புப் படித்துக் கொண்டு இருந்தாள்.

''என் சின்னப் பொண்ணும் யாருக்கும் சளைச்சவள் இல்லை. பார்த்துக்கிட்டே இரு. அவ எவ்வளவு பெரிய ஆளாக வரப்போறான்னு'' மனைவியின் கண்டிப்பிற்குப் பயந்து தன் மடியில் அடைக்கலமாகும் இளைய மகளை அணைத்துக் கொண்டே மனைவியிடம் பெருமையாகக் கூறுவார் அருணாச்சலம்.

''இப்படி பெருமை பேசிக்கிட்டேயிருங்க. இதுக ரெண்டும் நல்லா திமிரெடுத்துத் திரியட்டும். வீட்டுல ஒரு வேலை செய்றதில்ல. எதைச் சொன்னாலும் எதிர்த்து வேற பேசறாளுங்க.''

''என் பொண்ணுக எதுக்குடி வீட்டு வேலை எல்லாம் செய்யணும்? அப்புறம் உனக்கும், வேலைக்காரிக்கும் என்ன வேலை?''



''நல்லா வந்திரும் வாயில... என்னையும் வேலைக் காரியையும் சரிசமமாவா பேசறீங்க?'' மனைவி பல்லைக் கடித்தபடி முறைக்கும் போதுதான் தன் தவறே அவருக்குப் புரியும்.

''ஹி... ஹி... சாரிடி. பிள்ளைகளைக் குறை சொல் லிட்டியேன்னு அவசரத்தில் பேசிட்டேன். சாரிடி... ப்ளீஸ்'' மனைவியிடம் குழைவார் அவர்.

''இங்க பாருங்க. இதுக்கெல்லாம் என்கிட்ட சாரி கேட்கணும்கிற அவசியம் இல்லை. ஆனால் பிள்ளைகள் விசயத்துல நீங்க ரொம்ப ஆடுறீங்க. அதைக் கொஞ்சம் கண்ட்ரோல் பண்ணிக்குங்க.''

''அப்படி என்னடி நான் ஆடுறேன். என் பொண் ணுங்களை பத்தி நான் பெருமையா நினைக்காம வேறு யாரு நினைப்பா?''

''ஊருக்கு ராணின்னாலும் வீட்டுக்குப் பொண்டாட்டி தாங்க. ஒரு பொண்ணுன்னா எவ்வளவு உயரத்துக்குப் போனாலும் அவ கால் தரையிலதான் ஊன்றியிருக் கணும். வெளியில் அவள் எத்தனை சாதித்தாலும், வீட்டையும், பிள்ளைகளையும் சேர்த்து நன்றாக கவனித்தால் தான் அவள் சாதனைகளுக்கு அர்த்தம் இருக்கும்.''

மனைவியின் பேச்சைக் கேட்டு முகம் சுளிப்பார் அருணாச்சலம்.

''போதும் பர்வதம். இன்னும் பத்தாம்பசலித்தனமாவே இருக்காதே. உலகம் எவ்வளவோ முன்னேறிப் போச்சு.

பெண்கள் அடுக்களையே உலகம்னு வாழ்ந்த கால மெல்லாம் மாறிப்போச்சு. அதனால உன்னோட இந்தப் பேச்சுக்களை இனிமேல் நீ என் முன்னால் பேசாதே'' கண்டிப்புடன் பேசம் கணவனை முறைப்பாள் பர்வதம்.

''நான் சொல்ல வர்றதையே புரிஞ்சுக்க மாட்டேன் என்கிறீர்களே? நான் என்ன என் பொண்ணுங்களை அடுப்பங்கரையிலேயே கிடக்கணும்னா சொல்றேன். வீட்டையும் கொஞ்சம் கவனிச்சுப் பழகுங்கன்னுதான சொல்றேன்.''

''என் பொண்ணுங்களுக்கு எதை எப்பச் செய்யணும் என்பது நன்றாகத் தெரியும். அவர்கள் எந்தப் பொறுப் பையும் எப்பவுமே தட்டிக் கழிக்க மாட்டாங்க. ஆனா இப்ப நீ அவர்களை ப்ரீயா இருக்க விடு'' என்றபடியே நகர்ந்து விடுவார் அருணாச்சலம்.

அவர் தன் பெண்களின் மேல் இத்தனை நம்பிக்கை கொண்டு இருப்பதிலும் அர்த்தம் உண்டு. அவரின் இரண்டு பெண்களுமே வீட்டில் அன்னையிடம் மட் டுமேதான் வாயடிப்பார்கள். வெளியில் யாரிடமும் அதிர்ந்து கூடப் பேச மாட்டார்கள். தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருப்பவர்களுக்கு முன் உதா ரணம் இவர்கள் இருவரும்தான்.

கோவிலை விட்டு வெளிவந்து பிரகாரத்தைச் சுற்றிக் கொண்டே கணவனைப் பார்த்துப் பல்லைக் கடித்தாள் பர்வதம்.



''ஏங்க... ஆண்டவன் சந்நிதானத்தில் கூட உங்க பெண்ணின் பெருமையைத்தான் பேசணுமா?''

''ஏன்டி... நிகிதா இன்னிக்குப் பாடினதைக் கேட் டேல்ல? எவ்வளவு இனிமையா ஆத்மார்த்தமா அந்த ஆண்டவனை நினைச்சுப் பாடினா? இந்த வயசுல இறைவன் மேல் இருக்கற பக்தியாகட்டும், வீட்டுல காட்டுற பொறுமையாகட்டும், வெளியில் பார்க்கிற வேலையாகட்டும் எதிலயாவது ஒண்ணுல நிகிதாவை யாராவது குறை சொல்ல முடியுமா? இப்படிப் பெண்ணைப் பெத்த யாருக்குமே தன்னால பெருமை வந்திடுமே?'' மகளைப் பாசத்துடன் பார்த்தபடிக் கூறிய கணவனின் பேச்சில் இருந்த உண்மையை உணர்ந்த பர்வதம் மேற்கொண்டு பேசாமல் நிமிர்ந்து தங்களுக்கு முன்னால் சென்று கொண்டிருந்த மகள்கள் இருவரையும் பார்த்தாள்.

சந்தன நிறமும், அகன்ற பெரிய விழிகளும் கூர்மை யான மெல்லிய நாசியும், முல்லைப் பற்களை மூடிய மென்மையான அளவான இதழ்களுமாய் நேர்த்தியாய் செய்த சிற்பம் போன்ற அழகுடன் நடந்து சென்று கொண்டு இருந்த நிகிதாவின் இடையைத் தாண்டி முழங்கால்களுக்கு சற்று மேலே இருபுறமும் அவளது நடைக்குத் தக்கவாறு அசைந்து கொண்டிருந்தது அடர்த்தியான பின்னல். இத்தனை அழகு கொண்ட வளாக இருந்தும் அதனை உணராத, பெரிதாக எண் ணாத அலட்சியமே நிகிதாவிற்கு மேலும் அழகு சேர்த்துக் கொண்டு இருந்தது. கோவிலுக்குள் இருந்த அனைவரும் தன்னை ஒருகணம் திரும்பிப் பார்ப்பதைக்

கூட உணராதவளாய் எதையும் கண்டு கொள்ளாமல் தங்கையின் கைகளைப் பற்றிக் கொண்டு அரட்டை அடித்தபடியே சென்று கொண்டு இருந்த நிகிதாவைப் பார்க்கையில் பெற்றவளான பர்வதத்திற்கும் மனதில் பெருமை உண்டானது. வெளியில் சொன்னால் அரு ணாச்சலம் மேலும் ஆட ஆரம்பித்து விடுவார் என்று அந்தப் பெருமையையும் மனதிற்குள்ளேயே மறைத்துக் கொண்டாள் அவள்.

''இறைவா... என் பொண்ணை அவ மனசறிஞ்சு ராணியாட்டம் நடத்தற புருசனை அவளுக்குக் கொடுத்த வாழ்நாள் முழுவதும் மனசு நிறைஞ்ச வாழ்க்கையை அவ வாழறதுக்கான வரத்தையும் கொடு ஐயா''' மானசீகமாக ஆண்டவனைப் பிரார்த்தித்துக் கொண்டாள் பர்வதம்.



## 4

''பாஸ் இன்னிக்கு ஈவ்னிங் வின்சென்ட்டோட பார்ட்டிக்கு நீங்க போய்த்தான் ஆகணுமா?'' கவலை யுடன் கேட்ட வேலாயுதத்தை நிமிர்ந்து கேள்வியுடன் பார்த்தான் தீபன்.

''ஏன்... எதற்காக இப்படியொரு கேள்வி?''

''இல்லை பாஸ்...''



''முதல்ல என்னை பாஸ்னு கூப்பிடறதை நிறுத்து வேலாயுதம். நீ கூப்பிடுவது ஏதோ கொள்ளைக் கூட்டத் தலைவனைக் கூப்பிடுவது போலவே இருக்கு'' தீபன் கூறிய பாவனையில் தன்னைப் பார்த்துக் கேலியாகச் சிரித்த வள்ளியை முறைத்தான் வேலாயுதம்.

''அதுக்கில்லை பா... வந்து... வந்து... ஓகே... சார். நான் சொல்ல வந்ததையே சொல்லவிட மாட்டேன் என்கிறீர்களே?''

''சரி இப்ப சொல்லு... கேட்கறேன்'' கையில் இருந்த ஃபைலை மூடி வைத்துவிட்டு சோபாவில் நிமிர்ந்து அமர்ந்தான் தீபன்.

''இல்லை பா... சார். நாம போனவாரம் டீல் பண்ணின பிரான்ஸிஸ்சோட கூட்டாளிதான் இந்த வின்சென்ட்.''

''எனக்கு இதுகூடத் தெரியாதுன்னு நினைச்சியா வேலாயுதம்?''

''உங்களுக்கு தெரியாததுன்னு எதுவுமில்லைன்னு நான் நன்றாகவே அறிவேன் சார். ஆனால் எல்லாம் தெரிஞ்சுக்கிட்டே ஏன் இந்தப் பார்ட்டியில் கலந்துக் கணும்?''

''ஏன்னா இந்தத் தீபன் யாருக்கும் அஞ்சாதவன் வேலாயுதம்.''

''அதுதான் இந்த ஊருக்கே தெரியுமே சார்.''

''ஆனால் இந்தப் பார்ட்டிக்கு வின்சென்ட் பர்சனலா இன்வைட் பண்ணியும் நான் போகலேன்னா நீ சொல்லி

இதே ஊர் என்னைப் பயந்தவன்னு நினைச்சிடாதா?''

''இருந்தாலும் சார்... நீங்க தெரிஞ்சுக்கிட்டே ரிஸ்க் எடுக்கறீங்களோன்னு கவலையாயிருக்கு'' தயங்கிய படியே கூறிய வேலாயுதத்தின் தோள்களைத் தட்டினான் தீபன்.

''என்னிடம் எதைப்பற்றிப் பேசவும் நீ தயங்க வேண்டியதே இல்லை வேலாயுதம். எனக்கு என்னைவிட உன்மேல நம்பிக்கை அதிகமாய் இருக்கு. அத்தோட அந்த வின்செண்ட் நேரடியா என்மேல கை வைக்கத் துணிய மாட்டான். ஏன்னா அவனோட பார்ட்டியில எனக்கு ஏதாவது ஒண்ணு ஆச்சுன்னா அவனோட நிலை என்ன ஆகும்றது அவனுக்கு நல்லாத் தெரியும்.''

''அப்புறம் எதுக்காக பாஸ் உங்களைக் கூப்பிட்டிருக்கான்?''

''இப்பத்தானே அப்படிக் கூப்பிடாதேன்னு சொன்னேன்... லெட் அஸ் ஸீ... போய்த்தான் பார்ப்போமே?'' தீபனின் அலட்சியமான வார்த்தைகளை ரசித்துச் சிரித்தான் வேலாயுதம்.

''உங்க கட்ஸ் யாருக்கும் வராது சார்.''

சொன்னபடியே மாலையில் பார்ட்டிக்குக் கிளம்பி விட்டான் தீபன்... கார்க் கதவைத் தீபனுக்காக திறந்து விட்ட வேலாயுதம் தீபன் காரின் பின்னிருக்கையில் அமர்ந்தவுடன் கதவை அடைத்துவிட்டு முன்னிருக்கையில் வேகமாகவும், பணிவாகவும் அமர்ந்தான்.



''என்ன வேலாயுதம், நீயும் வர்றியா?''

''என்ன சார் கேள்வி இது? உங்களைத் தனியா அனுப்ப நான் என்ன பைத்தியமா? நம்ம பின்னாடியே செக்யூரிட்டிக்கு ஒரு காரையும் வரச் சொல்லி இருக்கேன்.''

''நீ செய்யுறதையெல்லாம் பார்க்கிறப்போ எனக்கு ஏதோ சினிமா பார்ப்பதுபோலவே இருக்கு வேலாயுதம். எதுக்கு இப்படிப் பண்றே.''

''தேவையிருக்கே சார்?''

''ஒரு தேவையும் இல்ல. என்னைப் பார்த்துக்க எனக்குத் தெரியும்'' நான் என்ன மாஃபியா கூட்டத் தலைவனா? சாதாரண பிஸினஸ்மேன் வேலாயுதம். என்னைத் தாதா ரேஞ்சுக்கு ட்ரீட் பண்ணாதே? முதல்ல செக்யூரிட்டி எல்லாத்தையும் கேன்சல் பண்ணு'' தயங்கிய வேலாயுதத்தை பார்வையால் விரட்டினான் தீபன்.

வேலாயுதத்தின் கையசைவில் பின்னால் கிளம்பிய கார் நின்றுவிட, வேகமாக கிளம்பிய தீபனின் வெளிநாட்டுக் கார் அந்த ஐந்து நட்சத்திர ஹோட்டல் வாசலில் சென்று வழுக்கிக்கொண்டு நின்றது.

''நீங்க காரிலேயே வெயிட் பண்ணுங்க சார். நான் போய் பார்ட்டி எந்த புளோரில் நடக்குதுன்னு ரிசப்சன்ல கன்பார்ம் பண்ணிட்டு வந்துடறேன்'' கீழே இறங்கி விரைந்த வேலாயுதம் ஐந்தே நிமிடங்களில் திரும்பினான்.

"ஃபோர்த் புளோரில் பார்ட்டியாம் சார்" தீபனுக்கு கார்க் கதவைத் திறந்து கொண்டே கூறினான் வேலாயுதம்.

லிஃப்ட்டில் இருந்து வெளிவந்த தீபனின் கண்கள் பார்ட்டி ஹாலை நிதானமாக அளவெடுத்தது. கண்ணைக் கவரும் விலையுயர்ந்த வண்ணமயமான மலர்களால் நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டு இருந்தது அந்த ஹால். ஹாலின் ஒரு ஓரத்தில் பஃபே சிஸ்டம் முறையில் உணவுகள் சூடாக டேபிளில் அலங்காரமாக அணிவகுத்து நின்றன. அவற்றைப் பரிமாறுவதற் கென்றே சுத்தமான, நேர்த்தியான சீருடையுடன் கைகளில் கையுறை அணிந்து கொண்டு தயார் நிலையில் நின்றிருந்தனர் ஹோட்டல் சிப்பந்திகள்... அந்த ஹாலை அடுத்து இருந்த இன்னொரு ஹாலின் ஒரு மூலையில் ஆடம்பரமாகப் பரவ நின்று கொண்டிருந்தது பார். அனைத்துவிதமான மதுவகைகளும் வகை வகையாக அடுக்கி வைக்கப்பட்டு இருந்தது.

நிதானமாக நோட்டமிட்டு முடித்த தீபனின் புருவங்கள் வழக்கம் போல லேசாக முடிச்சிட்டது. தீபனுக்கு என்றுமே இதுபோன்ற ஆடம்பரங்களில் நாட்டம் கிடையாது. நடுத்தர வர்க்கத்திலிருந்து உழைத்து முன்னேறிய காரணத்தினாலோ என்னவோ என்றுமே அவன் பணத்தை அளவில்லாமல் செலவிட மாட்டான். முடிந்த அளவில் ஆடம்பரச் செலவுகள் செய்வதைத் தவிர்த்து விடுவான். அதுவும் இதுபோன்ற பார்ட்டி கொடுக்கும் வேலையே அவனது வழக்கத்தில் அறவே கிடையாது.



தவிர்க்க முடியாத தொழில் ரீதியான சந்திப்புகளையும் கூட ஸ்டார் ஹோட்டலில் ஒரு சூட் புக் செய்து அங்கேயே பேசி முடித்துவிடுவான் தீபன்.



# 5

பார்ட்டி ஹாலின் வாசலிலேயே ஆடம்பரமாக நின்றுகொண்டு ஆர்ப்பாட்டமாக விருந்தினர்களை வரவேற்று உபசரித்துக் கொண்டு இருந்தான் வின்சென்ட். அவன் அருகில் நின்று கொண்டு கணவருக்குக் குறையாத ஆடம்பர அலங்கார பதுமையாக விருந்தினர்களைப் பார்த்து புன்னகைத்துக் கொண்டிருந்தாள் அவன் மனைவி லீமா. மிகப் பெரிய தொழில் அதிபரின் மகள் அவள். லீமாவின் ஒவ்வொரு அசைவிலும் பணக்கார திமிர் அவளையும் அறியாமல் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

"ஹலோ தீபன், வெரிகுட் ஈவ்னிங். நீங்க இங்க வருவீங்கன்னு எதிர்பார்க்கவே இல்லை. திஸ் இஸ் சர்ப்ரைஸ் பார் மீ" ஏளனமான புன்னகை தவழ தீபனின் கைகுலுக்கி வரவேற்றான் வின்சென்ட்.

"ஏன் இவ்வளவு ஆச்சரியம் மிஸ்டர். வின்சென்ட். நான் வரணும்னுதானே என்னை நீங்க பர்சனலா

இன்வைட் பண்ணுனீங்க?'' லேசாக புருவம் உயர்த்தி வினவினான் தீபன்.

''அப்கோர்ஸ். ஆனாலும் உங்களோட வருகையை நான் எதிர்பார்க்கலை.''

''ஸோ?...'' தலை நிமிர்ந்து வின்செண்ட்டின் விழிகளை ஊடுருவிப் பார்த்து நிதானமாக வினவினான் தீபன்.

தீபனுக்கு நன்கு புரிந்தது. தன்னை வேண்டும் என்றே வின்செண்ட் அவமரியாதை செய்கிறான் என்று. எனவே தான் இப்பொழுது என்ன செய்யட்டும் என்று நேருக்கு நேராகக் கேட்டுவிட்டான் தீபன். அதுதான் தீபன். எதையும் நேரடியாக எதிர்கொள்ளும் இந்த துணிச்சல்தான் அவனது எல்லா வெற்றிகளுக்கும் காரணம்.

தீபனின் கேள்வியில் தடுமாறிப் போனான் வின் செண்ட்.

''யுவர் 'ஸோ' மீன்ஸ் ஸோமர் தீபன். எனிவே வெல் கம்... வெல்கம்'' மெதுவாகக் கைகுலுக்கி வழிவிட்டான் வின்செண்ட்.

''இதற்குத்தான் சார் நான் சொன்னேன். இப்ப பாருங்க நாயெல்லாம் உங்க முன்னாடி வாலாட்டுது.''

''வாலை ஆட்டினால்தான் அதன் பெயர் நாய் வேலா யுதம். அதுதானே அதோட குணமே'' வேலாயுதத்தைப் போலவே மெல்லிய குரலில் அவனுக்குப் பதிலளித் தான் தீபன்.



''ஹலோ தீபன் சார். என்ன பாடிகார்டோட பார்ட்டிக்கு வந்திருக்கீங்க'' கேலியாக வினவினான் வின்செண்ட்டின் நண்பன் ரோஹித்.

''இவர் என்னோட பாடிகார்டு இல்லை மிஸ்டர் ரோஹித். என்னோட நண்பர். ஆல்மோஸ் மை ரைட் ஹேண்ட் ஆல் ஸோ.''

இவர்களின் உரையாடலைக் கவனித்துக் கொண்டே மனைவியுடன் அவர்களின் அருகில் வந்தான் வின்செண்ட்.

''வின்செண்ட். தீபன் சாரை ஸ்பெஷலாகக் கவனிக் காமல் நீ பாட்டுக்கு அங்கேயே நின்றிருந்தால் எப்படி?'' என்றான் கண்களில் விஷமத்துடன் ரோஹித்.

''என்ன ரோஹித் சொல்ற. அவரை ஸ்பெசலாகக் கவனிக்க தானே பார்ட்டிக்கே அவரை நான் இன்வைட் பண்ணினேன்.''

''ஆனால் நீ அவரோட பேமிலியோட வரணும்னு இன்வைட் பண்ணலியா? பாரு. நாங்கள்ளாம் எங்க ளோட பேமிலியோட வந்திருக்கும்போது அவர் மட்டும் பாடிகார்டுடன்... ஸாரி... ஸாரி... தீபன் அவர் மட்டும் அவரோட நண்பரோட வந்திருக்கார்.''

''அவர் என்ன வெச்சுக்கிட்டா வஞ்சனை பண்றார் ரோஹித். அவருக்குத்தான் பேமிலின்னே ஒண்ணும் கிடையாதே'' ஸ்டைலாக மனைவியின் தோள்களில் கைபோட்டுக்கொண்டு சிரித்தான் வின்செண்ட்.

''என்ன சொல்ற வின்செண்ட். சாருக்குக் கல்யாணம் தான் ஆகலை. வீட்ல பேரண்ட்ஸ் யாராவது ஒருத்த ராவது இருப்பாங்கல்ல.''

''பாவம் ரோஹித். தீபன் சாருக்குன்னு யாருமே இல்லை. அவர் பாவம் ஆல்மோஸ்ட் அனாதை போலத் தான்.''

''ஐயோ பாவமே. சீக்கிரமாய் கல்யாணமாவது பண்ணிக்கங்க தீபன் சார்...'' அறிவுரை சொல்வது போல் நக்கலுடன் பேசிய ரோஹித்தை அலட்சியமாகப் பார்த் தான் தீபன்.

''உங்க அட்வைசுக்கு ரொம்ப நன்றி ரோஹித். ஆனால் எனக்கு இப்ப அதைக் கேட்கத்தான் நேரம் இல்லை.''

''அதெப்படி தீபன் சார். நாங்கள்லாம் உங்க நலம் விரும்பிகள் இல்லையா'' என்ற நண்பனை தோள் தட்டிச் சிரித்தான் வின்செண்ட்.

''ஹேய் ரோஹித்... பேசாமல் இருடா. அவரென்ன பெண் கிடைத்தால் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன் என்றா சொல்கிறார். நல்ல குடும்பத்தில் பெண் யாரும் இவரை கட்டிக்கிறேன்னு வரலைடா... அதான் பேச்சிலர் லைப்ப கண்ட்டினியூ பண்றார்.''

ஒரு ஆணுக்கு மிகப்பெரிய அவமரியாதையை உனக்கு பண்ணக்கூடிய வார்த்தைகள் இவை. ஆனால் இதைத் தெரிந்தே திட்டமிட்டும் பேசிக்கொண்டு இருக்கும் இருவரையும் அவமானத்தை வெளிக்காட்டாத



முகத்துடன் சிரித்தபடியே பார்த்துக் கொண்டு நின்றிருந் தான் தீபன்.

''அதனால் என்ன வின்செண்ட் சார். நீங்கதான் ஒரு 'நல்ல' குடும்பத்துப் பொண்ணா எனக்காகப் பாருங் களேன்'' அமர்த்தலாக ஒலித்தது தீபனின் குரல்.

''என்ன சார் இப்படிச் சொல்லிட்டீங்க. இந்தக் காலத்துல பேமிலி பேக்ரவுண்ட், அழகு, எல்லாம் நிறைஞ்ச ஒருத்தனுக்கே பொண்ணு தர பெத்தவங்க யோசிக்கிறாங்க. உங்களுக்குப் போய் யாரு கிட்ட...'' வேண்டுமென்றே பேச்சை நிறுத்தினான் வின்செண்ட்.

''ஆனா மச்சி. உன்னைப் போல அதிர்ஷ்டமெல்லாம் சாருக்கு இல்லைதான். உன்னோட அழகையும் திறமையையும் பேமிலியையும் பார்த்து மயங்கித்தானே உன் மிஸஸோட அப்பா, உனக்குத்தான் லீமாவை கொடுப்பேன்னு ஒத்தைக் காலில நின்னு பொண்ணைக் கொடுத்தாரு?''

ரோஹித் சொல்வதுபோல் வின்செண்ட் பேரழகன் தான். சிவந்த நிறமும், செதுக்கினாற்போன்ற முகமுமாக பார்ப்பதற்கு மிகவும் அழகான தோற்றம் கொண் டவன்தான் வின்செண்ட். ஆனால் அவனோடு ஒப்பிடு கையில் மாநிறமும், அகன்ற தோள்களும், வரிசையான அழகான வெண்நிறப் பற்களும், ஆறடிக்கு மேல் உயர்ந்த ஆரோக்கியமான திடகாத்திரமான உடற்கட்டும் கொண்ட தீபன் ஒன்றும் அழகில் குறைந்தவன் இல்லை.

''அதென்னவோ உண்மைதான் ரோஹித். இவளைப் போல ஒரு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பெண் கிடைப்ப தற்கும் ஒரு லக் வேணும்தான்'' சிரித்தவாறே மனைவியை பார்த்த வின்செண்ட்டின் முகம் ஒரு நொடி மாறி பின் சகஜமானது.

ஏனெனில் அந்த நல்ல குடும்பத்துப் பெண்ணின் பார்வை தீபனை ஆசையுடன் அளவெடுத்துக் கொண்டு இருந்தது. தீபன் பார்ட்டி ஹாலில் நுழைந்தது முதல் லீமாவின் பார்வை தன்னை விழுங்கிக் கொண்டு இருப்பதை தீபனும் நன்றாகவே அறிவான்.

நீங்கள் சொல்வது மிகவும் சரியான வார்த்தைதான் மிஸ்டர். வின்செண்ட். உங்கள் மனைவியைப் போல 'நல்ல' குடும்பப் பெண் கிடைப்பது அரிதுதான்...'' பார்வையிலேயே லீமாவின் பார்வையை உணர்த்திய தீபன் அங்கிருந்து அகன்றான். அவன் பார்வை கூறிய செய்தியை உணர்ந்து கொண்டே வின்செண்ட் திரும்பி அருகில் இருந்த மனைவியை பார்வையாலேயே எரிக்கத் தொடங்கினான். ஆனால் அவன் பார்வைக்கெல்லாம் அடங்குபவனா லீமா? அலட்சியத்துடன் தோள்களைக் குலுக்கிக்கொண்டு அங்கிருந்து அகன்றாள் அவள்.



# 6

கடற்காற்றின் குளுமையை கண்மூடி ரசித்தான் தீபன். அது சமயம் அவன் மனத்திலும் கடலில் இருந்து



அலைகள் ஒன்றன் பின் ஒன்றாக ஆர்ப்பரித்து வருவதைப்போல, எண்ண அலைகள் ஆர்ப்பரித்துக் கொண்டு இருந்தது. வின்செண்ட் கூறிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் தீபனை அவமானப்படுத்துவதற்காக கூறியவைதான் என்றாலும் அதிலும் ஒரு உண்மை அடங்கியிருக்கிறதோ என்று தீபனின் உள்ளம் அஞ்சத் துவங்கியது. ஏனெனில் அவனிடம் உதவி கேட்பவர்கள் என்றாலும், நண்பர்கள் என்றாலும் அவனுக்குப் பெண் கொடுப்பதைப் பற்றி இது வரை அவனிடம் ஒரு வார்த்தை கூடப் பேசியது கிடையாது. எல்லோருமே மரியாதையுடன் அவனிடம் இருந்து விலகி நின்றுதான் பழகி வந்தார்கள். அந்த விலகல் கூட மரியாதை யினாலா இல்லை பயத்தினாலா என்று சிந்திக்கத் துவங் கியது தீபனின் மனம்.

''என்னடா இன்னும் அதே சிந்தனையிலதான் இருக்கிறாயா?'' கேட்டவாறு தீபனின் அருகில் அமர்ந்த அமிர்தராஜ் கையில் இருந்த மீன் துண்டுகளை நண் பனிடம் நீட்டினாள்.

''அதெல்லாம் ஒண்ணும் இல்லை ராஜ்.''

''எனக்கு உன்னைப் பற்றித் தெரியாதா? இப்படித் தனியாக உட்கார்ந்து யோசனை பண்ணிக்கிட்டு இருப்பேன்னுதான் உன்னை சென்னைக்கே வரச்சொன் னேன். இங்க வந்தும் இப்படியே உட்கார்ந்து இருந்தால் எப்படிடா?''

''இல்லை ராஜ். அவன் பேசின பேச்சுக்கள் எல்லாமே என்னை ரொம்பவே ஹார்ட் பண்ணிருச்சு.''

''டேய்... என்னடா நீ... உன்னைப் பத்தி நீ இப்படி யெல்லாம் கான்பிடென்ஸ் இல்லாம பேச மாட்டியே என்னைக்கும்.''

''கான்பிடென்ஸ் வேற... கவலை வேற ராஜ். இப்ப எனக்குத் தோணறது கவலை ராஜ்.''

''உனக்கென்னடா குறைச்சல்? உனக்குப் பொண்ணு தர நீ நான்னு போட்டி போட்டுக்கிட்டு வருவாங்கடா...''

''அப்புறம் ஏன்டா இதுவரை யாரும் வரலை.''

''அது... அது வந்து... ஒரு பயத்தில...''

''என்ன பயம் ராஜ். நான் என்ன ரௌடியா? இல்ல குடிப்பழக்கம், பெண்கள் பழக்கம்னு அலையிற கெட்டவனா? என்னை சீண்டுறவங்களை எதிர்த்து நின்னு ஒரு கை பார்ப்பேன். அவ்வளவு தானே? இதுக்காக யாராவது என்கிட்ட பயப்படுவாங்களா?''

''இல்லை தீபா. பொதுவாகவே உன்மேல் மற்ற அனைவருக்கும் பயம் இருப்பது உண்மைதான். ஆனால் அது நீ இவ்வளவு கவலைப் படுவதுபோல பெரிய விஷயம் இல்லைடா... உனக்கென்ன வயசா ஆயிடுச்சு. இப்பத்தான் கல்யாண வயசே உனக்கு வந்திருக்குடா.''

''வின்சென்ட் என்னை விட வயதில் சின்னவன் ராஜ்.''

''ம்ப்ச்... முதலில் அவனைப் பற்றிய பேச்சை விடு தீபா... அவனெல்லாம் ஒரு ஆளுன்னுகிட்டு.''



''ஆனா அவனுக்குத்தானே எல்லா நல்லவைகளும்...'' பேச்சை முடிக்கும் முன்பாக அவன் கால்களில் அருகே ஒரு பந்து வேகமாக வந்து விழுந்தது.

மூச்சிறைக்க ஓடிவந்து பந்தை எடுத்துக்கொண்டு நிமிர்ந்தவளைப் பார்த்த தீபன் ஒருகணம் வியப்பினால் வாயடைத்து அமர்ந்துவிட்டான்.

இப்படியும் ஒரு பெண் இவ்வளவு அழகாக இருக்க முடியுமா? அவன் மனம் வியப்பில் ஆழ்ந்தது.

''நிகிதா...'' அழைத்த குரலுக்கு வேகமாகத் திரும்பிய அந்தப் பெண் சற்று தூரத்தில் நின்று கொண்டு இருந்த சிறிய பெண்ணை நோக்கி கையாட்டினாள்.

''கொஞ்சம் இரு நித்யா... பாலை எடுத்துட்டேன்... இதோ வந்திடுறேன்'' என்றவாறு திரும்பித் தீபனைப் பார்த்தவள் ''ஸாரி சார்... பந்து காத்துல திசைமாறி வந்துருச்சு. உங்க மேல எதுவும் படவில்லையே?'' பணிவாக கேட்டவளுக்கு பதிலளிக்காமல் அமர்ந்திருந்த தீபனை ஆச்சரியத்துடன் பார்த்தான் ராஜ்.

''அதெல்லாம் ஒண்ணும் இல்லைங்க'' அவசரமாக பதிலளித்தவன் நண்பனின் தோள் தட்டி அழைத்தான்.

''ஓகே சார்... தேங்க்ஸ்'' பதிலளித்துவிட்டுத் திரும்பி தங்கையிடம் ஓடினாள் நிகிதா.

''டேய்... தீபா... என்னடா ஆச்சு? ஏன் இப்படி பித்துப் பிடிச்சவனாட்டம் உட்கார்ந்திருந்த? ஒரு அழகான பிகர் வந்து தானா பேசுறப்ப இப்படித்தான் உட்கார்ந்து

இருப்பாங்களா? என்ன பையன்டா நீ? இதில பொண்ணுக யாரும் கட்டிக்க வரலேன்னு கவலை வேற...?'' சலிப்புடன் பேசிய நண்பனை நிமிர்ந்து பார்த் தான் தீபன்.

''அந்தப் பொண்ணைப் பார்த்து பிகர்னு எல்லாம் ஸில்லியா பேசாதடா. என்ன தெய்வீகமான அழகு அவளுக்கு? பார்த்தவுடன் வாயடைச்சுப் போச்சு எனக்கு...'' பேசிய நண்பனை மேலும் வியந்து போய்ப் பார்த்தான் ராஜ்.

''நீயாடா பேசுற. எத்தனை பொண்ணுங்களை நீ நோஸ் கட் பண்ணியிருக்க... இத்தனைக்கும் அவங் களுக்கெல்லாம நீ திரும்பிப் பார்ப்பியான்னு ஏங்கின வளுங்க தெரியுமா.''

''அவளுக எல்லாம் என் பணத்துக்காக என்கிட்ட வந்து பழகணும்னு நினைச்சவங்கடா. ஆனா இந்தப் பொண்ணைப் பார்த்தா டீசன்டான பேமிலி கேர்ள் மாதிரி தெரியுது.''

''அப்ப நீ சொன்ன நல்ல குடும்பத்துப் பொண்ணா.''

''சேச்சே. இவளையெல்லாம் எனக்குத் தருவாங்களா ராஜ். அப்படிக் கற்பனை பண்ணிப் பார்த்தாக்கூட என்னால முடியலை'' ஏக்கத்துடன் வெளிவந்தது தீபனின் குரல்.

''ஏன்டா உனக்கு என்ன குறைச்சல்னு...''

''டேய், பேச்சை விடுடா... மறுபடியும் முதல்ல இருந்து ஆரம்பிச்சு என் உயிரை வாங்காதே'' என்று



பேண்டில் ஒட்டியிருந்த மண்ணைத் தட்டியவாறே எழுந்தாள் தீபன்.

''அந்த மீன் பிளேட்டை வேணும்னா என்கிட்டக் கொடு'' கைநீட்டிய நண்பனை மறுத்தான் தீபன்.

''வேணாம் வேணாம். என்கிட்டவே இருக்கட்டும். சந்தடி சாக்கில் அத்தனை பீஸையும் நொடியில் நீ காலி பண்ணிட மாட்டே?''

''ஒரு உயிர் நண்பனை நாலு பீஸ் மீனுக்குக் கூட நம்ப மாட்டியா?''

''உயிர் நண்பனை மற்ற எதற்காக வேண்டும் என்றாலும் நம்புவேன். ஆனால் மீன் விசயத்துல நம்ப மாட்டேன். அதுவும் சென்னை மீன் சாப்பிட்டு எத்தனை நாட்கள் ஆச்சு தெரியுமா?'' ஆசையுடன் மீன் துண்டு களை ருசிக்க ஆரம்பித்து தீபனின் காலடியில் மீண்டும் வந்து விழுந்தது பந்து.

ஆர்வத்துடன் பார்த்த தீபனின் ஆசை பொய்க்காமல் பந்தினை எடுக்க ஓடிவந்தாள் நிகிதா.

''ஸாரி சார்... மறுபடியும் தெரியாம...'' பேசிக் கொண்டே நிமிர்ந்தவள் தீபனின் கைகளில் இருந்த பிளேட்டை அவனை அறியாமல் இடித்து விட்டாள்.

''உவ்வே... *சீச்சீ...* உவ்வே...'' அருவெறுப்புடன் குலுக்கிக்கொண்டு விலகி நின்றவளை சமாதானம் செய்யும் வகையறியாமல் தன்னை மீறி அவள் கரங் களை பிடித்துவிட்டான் தீபன்.

''சீச்சீ... என்ன இது... ச்சீய்... உங்க கையை முதல்ல எடுங்க. அருவெறுப்பா இருக்கு'' சற்று முன் மீன் துண்டுகளைத் தொட்டதினால வந்த வாடையுடன் இருந்த அவனுடைய கைகளை அருவெறுப்புடன் முகத்தைச் சுளித்தவாறு தட்டிவிட்டாள் நிகிதா. ஏனென்றால் பிறந்ததில் இருந்து அவள் சுத்த சைவம். அசைவ வகைகளின் வாடைகூடப் பிடிக்காது நிகிதாவிற்கு. அதையறியாத தீபனின் முகம் கோபத்தில் சிவந்தது.

''பேசுவதை யோசனை பண்ணிப் பேசுங்க... வந்து... உங்க பேர் நிகிதாதானே?'' கண்டிப்புடன் ஒலித்தது தீபனின் குரல்.



## 7

''யோசனை பண்ணி என்னத்தைப் பேசச் சொல்றீங்க மிஸ்டர். அருவெறுப்பா இருக்குன்னா கை விடுவீங்களா... அதை விட்டுட்டு அட்வைஸ் பண்றார். முதல்ல நீங்க எப்படிங்க என் கையைப் பிடிக்கலாம்?''

''ஏங்க... நான் என்ன வேணும்னா பிடிச்சேன். உங்களை சமாதானம் செய்யத்தான பிடிச்சேன்.''

''வேணும்னு வேற பிடிப்பீங்களா? சமாதானம் பண்ணுறதுக்கு நீங்க யாருங்க எனக்கு...''



''தேவையில்லாம பேசாதீங்க நிகிதா... நான் தான் தெரியாமப் பிடிச்சிட்டேன்னு சொல்றேனுல்ல'' கோபத்தில் தீபனின் குரல் அழுத்தமாக வெளிவந்தது.

''தெரிஞ்சு பிடிச்சாலும்... தெரியாமல் பிடிச்சாலும் எதுக்காகப் பிடிக்கணும்? நீங்க தொட்ட இடத்தைக் கழுவற வரைக்கும் எனக்குக் குடலைப் பிரட்டிக் கிட்டுத்தான இருக்கும்'' கோபமும் ஆத்திரமுமாக வெளிவந்தது நிகிதாவின் குரல். கழுவினாலும் இந்த மீன் வாடை போகுமா என்ற கவலை அவளுக்கு.

''ஏன்? நான் தொட்ட இடத்தைக் கழுவி விடுற அளவுக்கு நான் என்ன தீண்டத் தகாதவனா?'' எரிமலையாய்க் கேட்டவனின் குரலில் பயந்துபோனான் ராஜ்.

''வேண்டாம் தீபா. கண்ட்ரோல் பண்ணிக்க. ஏங்க நிகிதா... நீங்கதான் பேச்சை விட்டுட்டு போங்களேன்.''

''எதை சார் விட்டுட்டுட்டு போகச் சொல்றீங்க? செய்யுறதையும் செஞ்சுட்டு எவ்வளவு சட்டமாப் பேசறார் பாருங்க.''

''ஆமாம். நான் அப்படித்தான் பேசுவேன்... அப்படித்தான் தொடுவேன். என்ன செய்ய முடியும் உன்னால'' கோபத்தில் நிதானம் இழந்த தீபனின் கன்னத்தில் யோசிக்காமல் ஓங்கி ஒரு அறை கொடுத்தாள் நிகிதா.

''அப்படித்தான் செய்வியா? நான் என்ன உங்க வீட்டு கிள்ளுக்கீரையா? நிகிதா... தெரியுமா... நிகிதான்னா

நெருப்புன்னு பேரு. எவ்வளவு பொறுமையா இருக்குமோ அதே வேகத்தோட சுட்டு எரிச்சுடும்... அப்படித்தான் நானும் ஜாக்கிரதை. அப்படித்தான் தொடுவாராமில்ல... இனிமேல் யாரையுமே தொடணும்ற எண்ணம் கூட வராது.''

அறைந்த கன்னத்தில் கை வைத்தபடி அசையாமல் குமுறும் எரிமலையாய் நின்று கொண்டு இருந்தவனின் முன் கொட்டித் தீர்த்துவிட்டுத் திரும்பி நடந்தாள் நிகிதா.

''ஏய்... உன்னைத்தான்டி... நில்லு அப்படியே.''

''வேண்டாம் தீபா... சொன்னாக் கேளு... அந்தப் பெண் ஏதோ தெரியாமல் பேசிவிட்டது. விட்டுவிடு.''

''என்ன மிஸ்டர் மரியாதையெல்லாம் குறையுது? வாங்குனது பத்தலையா?''

''வாங்கினது போதும் நிகிதா. இனிமேல் நான் கொடுக்க வேண்டியது தான் பாக்கி.''

''ஆமாமாம். இவர் கொடுப்பதை வாங்கிக் கொள்ளத்தான் இங்க கியூல நிக்கிறாங்க. சும்மா போவீங்களா?''

''கியூல எல்லாம் நீங்க வேணாம்மா. நீ ஒருத்தி நின்னால் போதும்.''

''நின்னா என்ன பண்ணுவீங்க...?'' சிலிர்த்துக் கொண்டு நின்ற நிகிதாவை அமைதியாகப் பார்த்தான் தீபன்.

''நான் யார்ன்னு தெரியுமா?''



''நீங்க யாரா இருந்தா எனக்கென்னங்க?''

''உனக்கு நான் யார்னு தெரிய வைக்காம நான் இந்த சென்னையை விட்டு போக மாட்டேன். அதை தெரிஞ்சுக்கத் தயாரா இரு'' கூறிய தீபன் வேகமாகத் திரும்பி நடந்தான்.

''நான்தான் சொன்னேனே மேடம்? கேட்டீங்களா? இப்பப் பாருங்க வில்லங்கத்தை வாங்கிக்கிட்டீங்களே?'' அவளைப் பரிதாபமாக பார்த்த அமிர்தராஜ் தீபனின் பின்னால் ஓடினான்.

வேகமாகச் சென்ற தீபனின் முதுகை வெறித்துப் பார்த்தபடி நின்றிருந்த நிகிதாவின் தோளைத் தட்டி அவள் கவனத்தைத் திருப்பினாள் நித்யா.

''ஏங்கா இவ்வளவு கோபமா பிஹேவ் பண்ணின? இப்ப பாரு... அவர் எவ்வளவு கோபமாப் போறார்னு.''

''அவர் கோபத்துக்குப் பயந்துக்கிட்டுப் பேசாமல் இருக்கச் சொல்றியா நித்யா? பார்த்தேல்ல? எவ்வளவு தெனாவெட்டாய் பேசினார்னு?''

''நீயும் தான் அவருக்குச் சரிக்குச் சரியாய் நின்று பதில் பேசாவிட்டால் என்னக்கா?''

''என்ன நித்யா சொல்ற? அவன் செஞ்ச தப்பை நீ நியாயம்னு சொல்ற மாதிரியில்ல இருக்கு?''

''நான் நியாயம்னு சொல்லலைக்கா... ஆனால் துஷ்டனைக் கண்டால் தூர விலகுன்னு சொல்வாங்கள்ள... அதைத்தான் நீ செஞ்சிருக்கலாம்னு

சொல்றேன்...'' மென்று விழுங்கிய தங்கையை ஆழமாகப் பார்த்தாள் நிகிதா.

''நீ பயப்படுறியா நித்யா?''

''அப்படியும் சொல்ல முடியலைக்கா. ஆனால் மனசுக்கு ஏதோ தப்பாத் தோணுது...'' யோசனையாய் சொன்னாள் நித்யா.

தங்கையின் முகத்தைத் திரும்பிப் பார்த்த நிகிதாவின் முகம் மாறியது.

''ஏய்... நித்யா... என்னடி இது... நீ இவ்வளவு பயந்தாங்கொல்லியாய் இருப்பேன்னு நான் நினைச்சுக்கூடப் பார்த்ததில்லையே? நம்மளை நாமதான பாதுகாக்கணும்? பயந்தால் இந்த உலகத்தில பொண்ணுங்க வீட்டை விட்டு வெளியவே வர முடியாது நித்யா.''

''அதுக்கில்லக்கா... எனக்கென்னவோ அந்த ஆள் பேசினது சாதாரணமாத் தெரியலே...''

''அவனை விடுடி... குரைக்கிற நாய் கடிக்காது. நீ சும்மாப் புலம்பிகிட்டே இருக்காதே... எனக்கு போர் அடிக்குது.''

''உனக்கு நிஜமாவே அவரைப் பத்திப் பயமாய்த் தோணலியா?''

''ம்ப்ச்... இல்லை'' அலட்சியமாய்த் தோளைக் குலுக்கிய நிகிதாவை பார்த்த நித்யா பெருமூச்சு விட்டாள்.



''சரிக்கா... வா, வீட்டுக்குக் கிளம்பலாம். ஏற்கனவே செம லேட். அம்மாவிடம் என்ன சொல்லிச் சமாளிக்கப் போகிறோமோ...'' சிரித்தாள் நித்யா.

''இதுதான் என் செல்ல நித்திக்குட்டிக்கு அழகு. இப்படிச் சிரிச்சுக்கிட்டே இருந்தால்தான் எனக்கு உன்னை ரொம்பப் பிடிக்கும்... சரி வா...''

தங்கையின் தோளில் கைபோட்டபடி அலட்சியமாய் சிரித்துக்கொண்டே சென்றவளை முறைத்தான் காருக்குள் அமர்ந்து அவளை வெறித்துக் கொண்டு இருந்த தீபன். அவன் கண்களில் தோன்றிய நெருப்பினைக் கவலையுடன் பார்த்தபடி அருகில் அமர்ந்திருந்தாள் அமிர்தராஜ்.

''தீபா...''

''.....''

''தீபா... உன்னைத் தான்டா கூப்பிட்டேன்.''

''.....''

''வேண்டாம் தீபா... இவ்வளவு கோபம் எதற்கு... தீபா... உன்னைத்தான்டா... வேண்டாம்டா... கோபப் படாதே... நிதானமா யோசி...''

''என்னடா யோசிக்கிறது, அதுவும் நிதானமா? என் முன்னால் நிக்கவே அவனவன் நடுங்குவான்... இவ என்னடான்னா என்னையே அடிச்சிட்டார்ளேடா... அவளை'' பல்லைக் கடித்துக்கொண்டு காரின் சீட்டில் கைகளால் குத்தினான் தீபன்.

''இல்லடா... அந்தப் பொண்ணைப் பார்த்தால் தப்பானவளா தெரியலைடா. திமிர் பிடிச்சவ மாதிரியும் தெரியல. ஏதோ நீ கையைப் பிடிச்சிட்டேன்னு உணர்ச்சி வசப்பட்டு அப்படிப் பேசிட்டா. அதையெல்லாம் மனசுல வைச்சுக்காதே.''

''அப்ப அவ கையை பிடிச்சா அவளுக்குக் கோபம் வருமா?''

''என்னடா பேசுற நீ? அப்புறம் பப்ளிக் பிளேஸ்ல ஒரு பொண்ணோட கையைத் தொட்டால் கோபம் வராதா?

''வரும்... வரும்... வரட்டும். எவ்வளவு கோபம் வருதுன்னு அவ கையைப் பிடிக்கிறப்ப பார்க்கிறேன்...''

''டேய், நீ என்னடா சொல்ற? இன்னொரு தரம் அவ கையைப் பிடிக்கப் போறியா? என்ன விளையாடு றியா?''

''இல்லை ராஜ்... அவதான் ரொம்ப விளையாடிட்டா... என் கன்னத்தில கை வைச்ச அவளுக்கு தீபன்னா யாருன்னு நான் காட்ட வேண்டாமா?''

''அதுக்கு...?''

''பொறுத்திருந்து பார்'' நிதானமாகக் கூறிய தீபன் கை சொடுக்கி டிரைவரை அழைத்தான்.





# 8

வீட்டிற்குள் நுழைந்த இரண்டு மகள்களையும் பார்த்து முறைத்தாள் பர்வதம்.

''ஏன்டி இவ்வளவு லேட்? பொம்பளைப் புள்ளை களுக்குக் கொஞ்சமாவது பயம் வேண்டாம்? இப்படித் தான் இருட்டற வரைக்கும் பீச்சுல சுத்திட்டு வருவாங் களா?''

''அம்மா... என்னைப் பெத்த தாயே... உன்னோட அத்தனை கேள்விக்கும் வந்து பதில் சொல்றேன். அதுக்கு முன்னால குளிச்சுட்டு வந்துடறேம்மா... ப்ளீஸ்...'' சொல்லிக் கொண்டே பாத்ரூமிற்குள் ஓடிய நிகிதாவைப் பார்த்து பல்லைக் கடித்தாள் பர்வதம்.

''இப்ப என்னத்த வெட்டி முறிச்சுட்டு வந்தா உங்க அக்கா? வந்ததும் வராததுமா குளிக்க ஓடுறா? ஒரு பெத்தவ பேச்சுக்கு மரியாதையே இல்லையா...''

''அம்மா... அம்மா... இருங்கம்மா. கொஞ்சம் கேப் விட்டாத்தான நான் பதில் சொல்ல முடியும்? இப்படி கேப்பே இல்லாம கேள்வி கேட்டா எப்படிம்மா?'' தாயின் தோள்களைக் கட்டிக் கொண்ட நித்யா செல்லமாக முறையிட்டாள்.

''சரிடி வாலு. நான் பேச்சை நிறுத்திட்டேன். நீ இப்பச் சொல்லு.''

''அது ஒண்ணும் இல்லைம்மா. பீச்சுல ஒரு ஆளு தெரியாம மீன் துண்டை இவ மேல போட்டுட் டான்.''

''ஐயையோ மீன் துண்டைப் போட்டுட்டானா? இவ அந்த இடத்திலேயே வாந்தியில்ல எடுத்திருப்பா?'' பதறினாள் பர்வதம்.

பக்கத்து வீட்டில் மீன் பொறித்தாலே மூக்கில் துண்டைக் கட்டிக்கொண்டு நாள் முழுவதும் வாந்தி எடுப்பவள் நிகிதா. அவள் மேலேயே மீன் துண்டுகள் விழுந்திருந்தால் நிச்சயம் அவளால் தாங்க முடியாதே என்ற கவலை நிகிதாவின் தாய்க்கு.

''வாந்தியெல்லாம் எடுக்கலைம்மமா. ஆனா அப்ப இருந்தே வாமிட்டிங் பீலிங்கோட தான் இருந்தா.''

''சரி சரி விடு. நீ அவ முன்னாடி மறுபடியும் இதைப் பத்திப் பேசாதே. அப்புறம் இவ சாப்பாடு கூட வேண் டான்னு சொல்லிடுவா.''

''சரிம்மா. நான் போய் அக்காவுக்கு நைட்டி ஏதாவது எடுத்துக் கொடுத்துட்டு வர்றேன்'' தாயிடம் கூறிக் கொண்டே தங்களின் அறைக்குள் நுழைந்த நித்யா பீரோவில இருந்த நைட்டியை எடுத்துக் கொண்டு போய் பாத்ரூமின் முன் இருந்த கம்பியில் போட்டுவிட்டு நகர்ந்தாள்.



இரவு உணவை முடித்துக்கொண்டு தன் கட்டிலில் மெதுவாகப் படுத்த நிகிதாவிற்கு மாலை நடந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒன்றன் பின் ஒன்றாக மனதில் ஓடத் துவங்கியது. கண்களை மூடியபடி யோசித்த நிகிதாவிற்கு தான் செய்ததும், பேசியதும் சரியா, தவறா எனக் குழப்பமாக இருந்தது.

தீபனின் முகமும் கண்களும் அவன் கெட்டவன் இல்லை என்பதை அவளுக்குத் தெளிவாக உணர்த் தியது. ஆனால் அவன் எதற்காக தன்னை அப்படி எச்சரிக்கை செய்தான் என்பதே அவளுக்குப் புரியாத புதிராக இருந்தது.

தான் ஒரு ஆணைக் கைநீட்டி அறைந்தது தவறுதான் என்றாலும் அவனும் நிகிதாவிடம் பேசிய பேச்சுக்களும் தவறுதானே? அப்படித் தன்னுடைய தவறுகளை ஒப்புக்கொள்ளாத ஒருவனை அடித்ததும் கூட ஒரு வகையில் அவருக்கு நியாயமாகவே பட்டது.

நிகிதாவிற்குக் கோபம் வருவதே அபூர்வமான ஒன்று. அவளைப் பொறுத்த வரையில் எல்லாத் தவறுகளுமே மன்னிக்கப்படும். ஆனால் அவளையும் மீறி கோபம் என்று வந்துவிட்டால் அவளால் அவளைக் கட்டுப் படுத்திக் கொள்ள முடியாது.

தவறென்று படுவதை தட்டிக் கேட்டால் ஒழிய அவளுக்கு மனம் ஆறாது. தவறென்று தெரிந்து ஒதுங்கிச் செல்லும் குணம் அவளுக்குக் கிடையாது. அப்படித் தட்டிக் கேட்டாலும் அதை அறிந்த நொடியே மறந்தும் போய் விடுவாள். ஆனால் இன்று என்னவோ தீபன்

செய்தது தவறு என்று தெரிந்தும் அவளால் அவனைப் பற்றிய எண்ணங்களை ஒதுக்க முடியவில்லை.

தான் இன்னும் கொஞ்சம் பொறுமையாக நடந்து கொண்டு இருக்கலாமோ என்று நிகிதாவின் மனம் அலைபாயத் தொடங்கியது. அறை வாங்கிய மறுகணம் திகைத்தாலும், அடிபட்ட இறுக்கமாய் சிலிர்த்து நின்ற அவனது ஆண்மை அவளைச் சலனப்படுத்தியது. இதுவரை யாரிடமும் சலனப்படாத அவள் மனம் தீபனை எண்ணிச் சலனப்பட்டது நிகிதாவிற்கே ஆச்சரிய மான ஒன்றாக நடந்தது.

'அப்படியென்ன அவன் பெரிய மன்மதன்.'

'ஆனால் மன்மதன் கூடக் கருப்புதான் என்று தானே சொல்லுவார்கள்.'

'அப்படியே மன்மதன்தான் என்றாலுமே ஒரு பெண்ணிடம் இப்படித்தான் பேசுவார்களா?'

'பெண்ணிடம் கண்ணியமாகத்தானே முதலில் பேசினான்? நீயும் தான் கொஞ்சம் பொறுமையாகப் பேசியிருக்கலாமே.'

'ஆமாம், இவனிடம் பொறுமையாக பேசிட்டாலும்...' நிகிதாவின் இதழ்களில் ரகசியப் புன்னகை தோன்றியது. அவள் தன் தலையில் செல்லமாக ஒரு தட்டு தட்டிக் கொண்டாள்.

''என்னக்கா ஆச்சு உனக்கு? உன் தலையில நீயே ஏன் தவிக்கிறே?'' அருகில் இருந்த கட்டிலில் படுத்திருந்த



நித்யா அக்காவைப் பார்த்து சந்தேகத்துடன் கேட் டாள்.

''நீயேன்டி இன்னும் தூங்காமல் முழிச்சிருக்கே?''

''நீ தூங்க விட்டால்தானே. என்னவோ வேற்று கிரகவாசிபோல தானே பேசி சிரிச்சுக்கிட்டிருக்க... என்ன விஷயம்?''

''ம்ம்... மண்ணாங்கட்டி விஷயம். உனக்கு வாய் வர வர ரொம்ப ஓவராப் போயிட்டிருக்கு. கொஞ்சம் அடக்கி வாசி.''

''முதல்ல நீ கொஞ்சம் அடக்கி வாசி. இவ்வளவு நேரம் உன்னைப் பார்த்து நீ மென்டல் ஆகிட்டியோன்னு எனக்கு ஒரே பயமாப் போச்சு. ஒழுங்கா தூங்கற வழியைப் பாரு.'' மிரட்டுவது போல் செல்லமாகக் கூறிய தங்கை யின் மேல் தலையணையை தூக்கி அடித்த நிகிதா சிரித்துக் கொண்டே தூங்கிப் போனாள்.



## 9

விடிவிளக்கின் ஒளியில் தூங்காமல் விழித்துக் கொண்டே படுத்திருந்த தீபனின் கண்கள் கோபத்தில் ஜொலித்துக் கொண்டிருந்தது. அவனது உள்ளம் எரிமலையாகக் குமுறியது.

'என்ன ஒரு திமிர் அவளுக்கு. இந்த தீபனிடம் எப்படியெல்லாம் பேசிவிட்டாள்.'

'ஏன்... நீயும்தான் அவள் பேசும் அளவுக்கு அப்படி நடந்துகொள்ளாவிட்டால் என்ன.'

'அவள் கீழே விழுந்து விடுவாள் என்றுதானே பிடித்தேன்.'

'ஆனால் அதனால்தான் அவளைப் பிடித்தாயா...?'

'அது... அது... அதனால்தான் பிடித்தேன். ஆனால் அவள் எதற்காக அப்படிப் பேச வேண்டும்.'

'மடையா! முன்பின் தெரியாத ஆண் கையைப் பிடித்தால் பின்னே கொஞ்சுவார்களா? அவனாக இருக்கப்போய் ஒரு அறையுடன் விட்டுவிட்டாள். மற்ற பெண்களாக இருந்தால் கூட்டம் கூட்டி உன் மானத்தை வாங்கியிருப்பாள்.'

'வாங்குவாள்... வாங்குவாள். நான் மட்டும் அப்படி நடந்திருந்தால் அவளை சும்மா விட்டிருப்பேனா? அந்த இடத்திலேயே அவளைத் தூக்கிக் கொண்டு வந்திருக்க மாட்டேன்?'

கேள்வி கேட்ட அவன் உள்மனம் இன்னும் கூட அவளை அவ்வாறே தூக்கி வந்திருக்கலாமோ என்று ஏங்கியது.

'*சீச்சீ*... என்னை அடித்த அவளை ஒரு கை பார்க்காமல் இது என்ன இப்படி ஒரு நினைப்பு' தனக்குத் தானே கடிந்து கொண்ட தீபன் மேலும் படுக்கையில் படுக்க முடியாமல் எழுந்து ஜன்னல் அருகில் சென்று திரையை விலக்கிப் பார்த்தான். ஜன்னலுக்கு வெளியே வானத்தில் முழு நிலவு பால்போல் ஒளிவீசிக்கொண்டு இருந்தது. ஜன்னல் கதவுகளை திறந்த தீபன் சில் லென்ற காற்றின் தீண்டலில் கண்மூடி நின்றான். ஏனோ அந்த நிமிடம் அவனது உள்ளம் வெகு நாட் களுக்குப் பிறகு தன் பெற்றோரை எண்ணி ஏங்கியது. தான் இன்று அநாதைபோல நிற்கும் சூழ்நிலையை உண்டாக்கிய விதியை எண்ணி அவன் உள்ளம் வேதனைப் பட்டது.



'அம்மா... நீயிருந்தால் இன்று நான் இப்படி நடைபிணமாய் வாழ்வேனா? ஏம்மா என்னை இப்படித் தனியாய் இந்த உலகில் விட்டுவிட்டுப் போனீங்க? உங்க கூட என்னையும் கூட்டிக்கொண்டு போயிருக் கலாமே?' மன வேதனை தாங்காமல் அவனது உடல் அழுகையினால் குலுங்கியது. தன்னை மறந்து கண்ணீர் வடித்த நிலையில் எவ்வளவு நேரம் நின்றிருந்தானோ அவனுக்கே தெரியவில்லை. சுய உணர்வுக்கு மீண்ட தீபனின் உள்ளம் மீண்டும் கடினமாக தன்னைத் தானே கடிந்து கொண்டான் தீபன்.

'சீ... என்ன இது? இந்தத் தீபனின் கண்களில் கண்ணீரா? எத்தனையோ சவால்களை தூசி போல தட்டிவிட்ட எனக்கு ஒரு சிறு பெண்ணை பழிவாங் குவது பெரிய காரியமா என்ன? அவள் யாராக வேண்டு மானாலும் இருக்கட்டும். இனி அவள் இந்த தீபனின் கட்டளைப்படி செயல்பட வேண்டும். இவன் கண

ணசைவிற்கு அவள் கட்டுப்பட்டாக வேண்டும். என்னைத் தொட்டு அடித்த அவள் கரங்கள் இனி எனக்குச் சேவை செய்தாக வேண்டும்' உறுதியுடன் முடிவெடுத்த தீபனின் மனம் அதனைச் செயல்படுத்த வேண்டிய திட்டம் தீட்டத் தொடங்கியது.

ஆனால் அதற்கு நேர்மாறாக அவனது இதயம் நிகிதாவின் அருகாமைக்காக ஏங்கத் தொடங்கியது. அவளைத் தன்னுடையவளாக ஆக்கிக் கொள்ள துடித்தது. அவள் அவனுக்கு உரிமையானவளாக மாற வேண்டுமே என்று தத்தளித்துத் தவித்தது. இருவேறு பட்ட சிந்தனை வெள்ளத்தில் சிக்கித் திண்டாடினான் தீபன். அவனுடைய நெஞ்சம் அவன் நிகிதாவை விரும்பத் தொடங்கிவிட்டதை அவனுக்கு உணர்த்தி னாலும் தீபனால் நிகிதாவை பழிவாங்கும் எண்ணத்தில் இருந்து மாற முடியவில்லை. இறுதியில் எது எப்படி இருந்தாலும் நிகிதாவை அவனுடையவளாக ஆக்கிக் கொண்டே தீர வேண்டும் என்ற தீர்மானத்தை எடுத்த பின்னரே அவனால் நிம்மதியாகத் தூங்க முடிந்தது.

''குட்மார்னிங் தீபா. நைட் கொஞ்சமாச்சும் தூங் கினியா இல்லை தூங்காமல் மனதைக் குழப்பிக் கொண்டிருந்தியா?'' கவலையுடன் கேட்டுக் கொண்டே எதிரில் இருந்த சோபாவில் அமர்ந்த ராஜைப் பார்த்த தீபனின் விழிகள் அவனது கேள்விக்கான பதிலைக் கூறியது.

''ஏன்டா தீபா இப்படி இருக்க? நான் அவ்வளவு தூரம் படிச்சுப் படிச்சுச் சொல்லியும் நீ புரிஞ்சுக்காமல் இருந் தால் எப்படிடா.''



''எதைப் புரிஞ்சுக்கச் சொல்ற ராஜ். நேத்து நடந்தது உனக்குச் சாதாரண மேட்டரா தோணுதா?'' அமைதி யாகக் கேட்டான் தீபன். தீபனின் அந்த அமைதி ராஜின் உள்ளத்தைத் தாக்கியது.

''அப்படிச் சொல்லலை தீபா. அவளெல்லாம் உனக்கு ஒரு ஆளா? சரிக்கு சமமானவர்களிடம் மோதினால்தான் உன் தகுதிக்கு அழகுடா.''

''சில நேரம் சிறு தூசி கண்ணில் பட்டால் கூட அந்த உறுத்தல் நம்மை நிம்மதியாக இருக்க விடாது ராஜ். இவளும் அப்படித்தான்.''

''சரி சரி விடு. அவ மேட்டரை அப்புறமாய் உனக்கு எப்படித் தோணுதோ அப்படி டீல் பண்ணிக்கலாம். இப்ப நான் ஒருத்தரை வரச் சொல்லியிருக்கேன். நீ அவருக்காக ஒரு அரை மணிநேரம் ஒதுக்க முடியுமான்னு சொல்லு.''

''யாருடா அது? காலங்கார்த்தால நாம அவரைக் கண்டிப்பாப் பார்த்தே ஆகணுமா? எனக்கு மூடு இல்லை ராஜ்.''

''நமக்கு அவரை பார்க்கணும்கிற கட்டாயம் இல்ல தீபா. ஆனால் அவர் உன்னைப் பார்க்கணும்னு நேத்து நைட் மட்டும் நாலு தடவை போன் பண்ணிட்டாரு.''

''அதுதான் அவர் யாருன்னு கேட்டேன்.''

''நம்ம சதாசிவம் சார்டா.''

''யாரு அந்த மேரேஜ் புரோக்கரா.''

''டேய்... அவர் மேரேஜ் புரோக்கரா? அவர் இதை ஒரு சேவையா நினைச்சுப் பண்ணுகிறார்டா. மற்றபடி

அவருக்கு இருக்கும் பிசினஸ்களைப் பத்தித்தான் உனக்கே நல்லாத் தெரியுமே?''

''சரிடா. இப்ப எதுக்கு அவர் இங்கே வர்றார்? நான் எந்த பிசினஸ் டீலும் பேசும் மனநிலையில் இல்லை ராஜ். எதுவாக இருந்தாலும் நீயே பேசிக்கொள்.

''அவர் உன்னிடம் ஏதோ முக்கியமாய் பேசணும்னு சொல்றார்டா. நீ இங்க வந்திருக்கன்னு கேள்விப்பட்டாராம். இல்லைன்னா உன்னைப் பார்க்க பெங்களூருக்கே வர்றதா இருந்தாராம்.''

''அப்படியென்ன தலைபோகிற விசயம்டா. நீ கேட்க வேண்டியது தானே.''

''கேட்டேன்டா. அனால் அவர் உன்னிடம் தான் நேரில் சொல்வாராம். என்னன்னுதான் பேசிப் பாரேன். எனக்கே சஸ்பென்சா இருக்கு.''

''சரி சரி வரச்சொல்லு. ஆனா இப்பவே வந்தால்தான் பார்ப்பேன். எனக்கு வேலை இருக்கு ராஜ்.''

''எனக்குத் தெரியாதா? உடனே வரச்சொல்லிடுறேன்'' என்றவாறு போனைக் கையில் எடுத்தான் ராஜ்.

''நமஸ்காரம் சார். என் பேர் சதாசிவம். ஏதோ அந்த இறைவனின் கட்டளைப்படி எனக்குத் தெரிந்த தொழில்கள் சிலதை பண்ணிக்கிட்டிருக்கேன். உங்களைப் பார்த்துப் பேசணும்னு ஒரு வருசமா முயற்சி பண்றேன். வேளை கூடி வரலே. இன்னிக்குத்தான் எல்லாம் கூடி வந்திருக்கு'' எதிரில் கைகூப்பியபடி வந்து



நின்ற பெரியவரை பார்த்த தீபனின் மனதில் அவனையறியாமல் அவர்மேல் மரியாதை தோன்றியது.

வேகமாக எழுந்து நின்று கைகூப்பியவன், எதிரே இருந்த சோபாவைக் கைகாட்டி அவரை அமரச் சொன்னான். தீபன் காட்டிய இருக்கையில் அமர்ந்த சதாசிவம் நிமிர்ந்து அவனைப் பார்த்து அமைதியாகப் புன்னகைத்தார்.

## 10

காவி நிற பைஜாமாவும், வெள்ளை வண்ணப் பேண்டும் அணிந்திருந்த சதாசிவம் பார்ப்பதற்கு மிகவும் சாதாரண தோற்றத்தில் இருந்தார். கழுத்தில் சிறிய தங்கக் காப்புடன் கூடிய ருத்ராட்ச மாலையும் நெற்றியில் பளிச்சிட்ட திருநீறுக் கீற்றுமாக ஒரு தெய்வீக அமைதியுடன் இருந்த அந்தப் பெரியவரைப் பார்த்த தீபனின் மனம் ஏனோ இனம் தெரியாமல் சாந்தம் கொண்டது.

''ரொம்பவும் சிம்பிளா பேசறீங்களே சார். உங்களை பத்தி நீங்க சொல்லாட்டியும் எனக்கும் ரொம்ப நல்லாத் தெரியும் சார். உங்க அந்தஸ்துக்கு உங்களோட இந்த அமைதி ஆச்சரியத்தை கொடுக்குது சார்'' கூறிய

தீபனை அதே அமைதியான புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தார் சதாசிவம்.

''அந்தஸ்து என்ன தம்பி அந்தஸ்து. எல்லாம் அந்த ஆண்டவன் குடுத்த வரம். அப்படிப் பார்த்தால் உங்களைப் பற்றி நான் கேள்விப்பட்டதற்கும் உங்களுக்கும் கூடத்தான் சம்பந்தம் இல்லை.''

''ஏன் சார் அப்படிச் சொல்றீங்க.''

''எனக்கு யாரையும் முகஸ்துதி பண்ணிப் பழக்கமில்லை தம்பி. எதையும் நேருக்கு நேராய் சொல்லிருவேன். நான் உங்களையும், உங்க திறமைகளையும் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கேன். ஆனால் இவ்வளவு சின்ன வயசாக நீங்க இருப்பீங்கன்னு நான் எதிர்பார்க்கலை. எல்லாம் அந்த ஆண்டவன் சித்தம்.''

''ஏன் சார். நான் என்ன அவ்வளவு பெரிய ஆளா?''

''பெரிய மனிதர், சிறிய மனிதர் என்பதெல்லாம் அவரவர் உள்ளத்தைப் பொறுத்தது தம்பி. நீங்க பிறருக்கு செய்துள்ள உதவிகளைப் பற்றி நான் நிறையக் கேள்விப்பட்டிருக்கேன். அந்த உதவிகளும் கூட பிரதிபலனை எதிர்பாராமல் நீங்க செய்த உதவின்றது எனக்கு நல்லாத் தெரியும்.''

''உங்க பாஷையில் சொன்னால் அதுவும் கூட ஆண்டவன் சித்தம்தான் சார்.''

''அதுவும் சரிதான் தம்பி. நான் பேச வந்ததையே பேசாமல் உங்க நேரத்தை வீணடிச்சுக்கிட்டிருக்கேன்.''



''அதெல்லாம் ஒண்ணுமில்லை சார். நீங்க பேச வேண்டியதை தாராளமா, பொறுமையாகவே பேசலாம். ராஜ், சாருக்கு சாப்பிட ஏதாவது ஆர்டர் பண்ணு.''

''வேணாம் தம்பி. நான் சுத்த சைவம். இந்த மாதிரி ஸ்டார் ஹோட்டல்களில் எல்லாம் எனக்கு தேவையான சாப்பாடு கிடைக்காது.''

''ஏன் சார் கிடைக்காது? உங்களுக்கு என்ன தேவையோ அது எல்லாமே இங்கே கிடைக்கும். உங்களுக்கு பிடிக்காவிட்டால் வெறும் காபியாவது கொண்டு வரச் சொல்றேன்.''

''சரிங்க தம்பி. உங்க இஷ்டம்.''

''ராஜ்...''

''இதோ தீபா. உடனே கொண்டுவரச் சொல்றேன்.''

''ஓகே சார். இப்ப நீங்க பேச வந்த மேட்டரைப் பத்திச் சொல்லுங்க. ஹவ் கேன் ஐ ஹெல்ப் ஃபார் யூ.''

''அது ஒண்ணும் பெரிய ஹெல்ப்பெல்லாம் கிடையாது தம்பி. உங்க அழகிற்கும் அறிவிற்கும் இதுவரை எத்தனையோ பேர் உங்களைத் தன் மருமகனா ஆக்கிக் கொள்ள விரும்பியிருப்பாங்க. ஆனா ஏன் நீங்க இன்னும் கல்யாணம் செய்துக்கலை?''

''அது எதுக்கு சார் இப்ப? அதுக்கும் நீங்க பேசவந்ததுக்கும் என்ன சம்பந்தம்?''

''நான் பேச வந்ததே அது விசயமாத்தான் தம்பி. நீங்க தப்பா நினைக்கலேன்னா நான் அதைப் பத்தி உங்ககிட்டப் பேசலாமா.''

"தாராளமாய் பேசலாம் சார்."

"இல்லை தம்பி. எனக்குத் தெரிஞ்ச சில நண்பர்கள் உங்களைத் தங்களோட மருமகனா ஆக்கிக்கணும்னு ஆசைப்படறாங்க. எல்லாமே பெரிய மனிதர்கள்தான் தம்பி. நான் சொன்னதுபோல பணத்திலும், உள்ளத்திலும் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தான். உங்க விருப்பம் இருந்தால் சொல்லுங்க. உங்களுக்குப் பிடித்த இடத்தை பேசி முடிச்சிரலாம். நான் டிடெய்ல்ஸ் சொல்லவா?"

"என்ன சார் இது? திடீர்னு இத்தனை பேருக்கு என்னை மாப்பிள்ளையாக்கிக்கணும்னு ஏன் தோணுச்சு?"

"திடீரென்று எல்லாம் இல்லை தம்பி. கொஞ்ச நாளாகவே என்னிடம் சொல்லிக்கிட்டுதான் இருந்தாங்க. எனக்குத்தான் உங்களைப் பார்க்க நேரம் கூடி வரலே. இப்பத்தான் என்னால முடிஞ்சது. இப்ப உங்க விருப்பம் என்னன்னு சொன்னீங்கன்னா அதுப்படி நான் செஞ்சிறுவேன்."

பெரியவரின் பேச்சைக் கேட்ட அமிர்தராஜின் மனம் ஆனந்தத்தில் கூத்தாடியது. தீபனின் வருத்தம் அவன் மனத்தையும் வெகுவாகப் பாதித்திருந்தது. ஆனால் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் தீபனை சமாதானப்படுத்திக் கொண்டு இருந்தான் அவன். தீபன் கூறியது போல நல்ல குடும்பத்தில் இருக்கும் எவரும் அவனுக்கு பெண் கொடுப்பதை விரும்பவில்லையோ என்று ராஜின் மனமும் சஞ்சலப்பட்டுக் கொண்டே இருந்தது. சதாசிவம் சொன்ன செய்தி இனம் புரியாத



வகையில் ராஜின் உள்ளத்திற்கு மகிழ்ச்சியையும், அமைதியையும் தந்தது.

அவன் தீபனை திரும்பி பார்த்தான். ராஜின் கண்கள் கூறிய செய்தியைப் புரிந்துகொண்ட தீபன் கண்கள் அமைதியைப் பிரதிபலிப்பதை ஒருவித தவிப்போடு பார்த்தான் ராஜ்.

"என்ன தீபா இது. பெரியவர் இவ்வளவு தூரம் எடுத்துச் சொல்லியும் நீ பிடி கொடுக்காமல் அமைதியாய் இருக்கியே?"

"இல்லை ராஜ். நான் வேறு ஒரு எண்ணத்தில் இருக்கிறேன்."

"என்ன எண்ணத்தில்டா இருக்கிறாய். வலிய வரும் வரன்களை எல்லாம் ஒதுக்கினால் எப்படி? இது நல்லதில்லை தீபா. பெரியவரிடம் நீ டிடெய்லை கேளு. அதுக்குப் பின்னால் எந்த முடிவையும் எடு. நான் அதில் தலையிட மாட்டேன். ஆனால் உனக்கும் கல்யாண வயது கடந்துகொண்டே போகிறது தீபா" கெஞ்சலாகக் கூறினான் ராஜ்.

"நான் என்ன கல்யாணமே வேண்டாம்னா இப்ப சொன்னேன் ராஜ்?"

"ஆனா இந்த வரன்களைப் பத்தி ஒண்ணுமே நீ இன்ட்ரெஸ்டே காட்டலையே? அது ஏன்டா?"

"ஏன்னா நான் வேற ஒரு வரனைப்பத்தி யோசிச்சிட்டிருக்கேன் ராஜ்."

''அது யாருடா அந்த வேற வரன்!''

''நிகிதா...'' அழுத்தமாக வெளிவந்தது தீபனின் குரல்.

''உனக்கென்ன...'' கோபமாக கூறத் தொடங்கிய ராஜ் பெரியவரைப் பார்த்து வலுக்கட்டாயமாக புன்னகை செய்தான்.

''எக்ஸ்க்யூஸ் மீ ஸார்... ஜஸ்ட் பைவ் மினிட்ஸ்... இவன்கிட்ட பேசிட்டு வந்துடறேன் ப்ளீஸ்'' அவரிடம் கூறிக்கொண்டே நண்பனின் கையைப் பிடித்து ஏறக்குறைய இழுத்துக்கொண்டே அடுத்த அறைக்குள் நுழைந்து கதவை மூடினான் ராஜ்.

# 11

''முட்டாளாடா நீ...'' கோபத்தில் வெடித்தான் ராஜ்.

''.....''

''ஒரு பெண்ணைப் பழிவாங்குவதற்காக உன் வாழ்க்கையைப் பணயம் வைக்கிற அளவுக்கு போவியா நீ? உன்னைக் கேட்பதற்கு ஆள் இல்லை என்று நினைத் தாயா? என் உயிர் இருக்கும் வரை உன் வாழ்க்கையை நீயே அழித்துக் கொள்ள நான் ஒருநாளும் விடமாட் டேன்டா.''



நண்பனின் வார்த்தைகளைக் கேட்டவுடன் அவனை இழுத்து அணைத்துக் கொண்டான் தீபன். தீபனின் இந்தச் செயலால் கண்களில் கண்ணீர் நிறைந்தது ராஜிற்கு. இவ்வளவு பாசமுள்ள ஒருவன் இப்படி முரட னாக இருக்கிறானே என்று ராஜின் மனம் வேதனைப் பட்டது.

''நீ என்ன சமாதானம் சொன்னாலும் சரிடா தீபா. நான் இதற்கு ஒருநாளும் சம்மதிக்க மாட்டேன். அன்பில்லாத திருமணம் என்றுமே நிலைக்காது தீபா. நீ மறுபடியும் தனிமரமாக நிற்க வேண்டிய சூழ்நிலைகூட வரலாம். அதனால் உன்னுடைய இந்த முடிவிற்கு நான் சம்மதிக்க மாட்டேன்டா.''

''அன்பு இல்லைன்னு நீயா ஏன்டா முடிவு பண்றே? அவள் மேல் எனக்கு அன்பு இருக்குடா.''

''ஆனா அதைவிட பழிவாங்குற எண்ணம்தான் அதிகமா இருக்கு தீபா. நீ இல்லைன்னு மறுத்தாலும் உண்மை அதுதானே.''

''ஆனால் எனக்கு அவளைப் பிடிச்சிருக்குடா.''

''உனக்குப் பிடித்தால் போதுமாடா முட்டாள்? அந்தப் பெண்ணிற்கும் உன்னைப் பிடிக்க வேண்டாமா? உங்கள் இருவருக்குள்ளும் ஏற்பட்ட முதல் சந்திப்பே மோதலில்தான் ஆரம்பிச்சிருக்கு தீபா. இது சரிவராது. விட்டு விடு.''

''மோதலில் தான் காதல் வரும் ராஜ்.''

''இந்தச் சினிமா டயலாக்கையெல்லாம் வேற யாரு கிட்டேயாவது போய் சொல்லு. நம்புவாங்க ஆனால் எனக்கு உன்னைப் பத்தி நல்லாத் தெரியும். ஒண்ணை வேணாம்னு நினைச்சால் அதை ஜென்மம் முழுவதும் திரும்பிக் கூட பார்க்கமாட்டே. அந்தப் பொண்ணோட நீ வாழ நினைக்கும் வாழ்க்கையும் அப்படித்தான் இருக்கும்...''

''அதுவே... நான் ஒண்ணை வேணும்னு நினைத்தால் என்ன செய்வேன் ராஜ்?'' அழுத்தமாக வெளிவந்தது தீபனின் குரல்.

''தீபா...!''

''ஆமாம் ராஜ். எனக்கு அந்தப் பெண்தான் மனைவி யாக வேணும். அவள்தான் நம் வீட்டிற்கு மருமகளாக வேணும். உனக்கும் அண்ணியாக வேணும் எல்லாவற் றிற்கும் மேலாக அலைபாய்ந்து துடித்துக் கொண்டு இருக்கும் என் மனதிற்கு அமைதி வேணும் ராஜ். எனக்கு இந்த இத்தனையும் வேணும்.

அதை உன்னோட வேண்டாம் என்கிற ஒரு வார்த்தை யால கலைச்சுடாதே. ஏன்னா உன் வார்த்தையை என்றைக்கும் என்னால் மீற முடியாது ராஜ்... ப்ளீஸ் ராஜ்... ப்ளீஸ்'' தன் கரங்களைப் பற்றிக் கொண்டு குழந்தையைப் போல் கெஞ்சிய தீபனை ஆச்சரியத் துடன் பார்த்தான் ராஜ்.

''தீபா! உண்மையாகவே நீ அவளை விரும்பறியா? உண்மையைச் சொல்லுடா. இந்தப் பெரியவர் உனக்காக



கொண்டு வந்திருக்கும் இந்த வரன்கள் எல்லாம் நிச்சயமாக அவளை விட நூறு மடங்கு உயர்வான இடங்கள் தீபா! இதை எல்லாம் ஒதுக்கிவிட்டு அவளை நீ மணக்க விரும்புவது எதனால் தீபா?''

''அன்பினால் ராஜ். அவள் மேல் எனக்கு இருக்கும் காதலினால். இந்த அன்பும் காதலும் நீ சொல்லும் மற்ற பெண்களின் மேல் எனக்கு தோன்றவில்லையேடா?''

''நீ இன்னும் மற்ற பெண்களைப் பார்க்கவே இல் லையே தீபா? அப்புறம் ஏன் இந்த முடிவு.''

''பார்த்தாலும் அவர்கள் மேல் இவ்வளவு ஈர்ப்பு எனக்கு தோன்றாது ராஜ். அது அவளிடம் மட்டுமே தோன்றுகிறது.''

''உண்மையைச் சொல்லு தீபா. அவளைப் பழி வாங்கும் எண்ணமே உனக்கு இல்லையா?''

''அது எனக்குத் தெரியவில்லை ராஜ். ஆனால் அவள் இல்லாமல் நான் இல்லை. அது மட்டும் உறுதி.''

''ஒரே நாள் பார்த்தவுடன் இப்படியெல்லாம் கூட தோன்றுமா தீபா? அதுவும் உனக்கு...''

''அது என்னடா எனக்கு? ஏன் நான் மட்டும் மனிதன் இல்லையா? எனக்கும் எல்லா உணர்வுகளும் உண்டு ராஜ்.''

கூறிய நண்பனை கையெடுத்துக் கும்பிட்டான் அமிர்தராஜ்.

''போதும்டா சாமி போதும். இதுக்கு மேல உன் டயலாக்குகளை கேட்கற அளவுக்கு எனக்கு தைரியம்

இல்லை. இப்பவே லேசா நெஞ்சு வலிக்கிறது போல இருக்குது.''

''போதும்டா நடிகா. ரொம்பவும் தான் நடிக்காதே. உனக்கு எதையும் தாங்கும் இதயம்னு எனக்கும் தெரியும்.''

''அந்த இதயம் தான்டா உன் நடிப்பை தாங்க முடியாமல் திணறுது. தயவு செய்து என்னை விட்டு விடு. வீட்டுல என் பெண்டாட்டி எனக்காக காத்திருக்கா. அவளுக்காகவாவது என்மேல கொஞ்சம் கருணை காட்டுடா காட்டு.''

''காட்டினேன்... காட்டினேன்... பிழைத்துப் போ'' கை தூக்கிப் போஸ் கொடுக்கும் நண்பனை மென்மையாக பார்த்தான் ராஜ். தீபனின் இந்த மாற்றம் அவனுக்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுத்தது.

''நீ எப்பவுமே இப்படி சந்தோஷமா இருக்கணும் தீபா. அது ஒண்ணே போதும் எனக்கு. இப்ப நீ உன் மனசுக்கு என்ன தோணுதோ செய். நான் குறுக்கே நின்று தடுக்க மாட்டேன்'' என்ற ராஜின் கைகளை நன்றியுடன் பற்றிக் கொண்டான் தீபன்.

''நீ மட்டும் என்கூட, எனக்கு நண்பனா இல்லாமல் போயிருந்தால் நான் என்னவாகி இருப்பேன் ராஜ். தேங்க்ஸ்டா. எல்லாவற்றிற்கும் தேங்க்ஸ்.''

''போடா ஃபூல். நீ எனக்கு பிரண்டா இல்லாமப் போனால் நானும் தான் என்னவாகி இருப்பேன்?''



''உனக்காவது பெத்தவங்க, சொந்தம்னு எல்லாரும் இருக்காங்கடா. ஆனால் எனக்கு சொந்தம்னு நீ மட்டும் தானடா இருக்க?''

''அடிவாங்கப்போற தீபா. என்னையும் சேர்த்து என் பெத்தவங்களுக்கு இரண்டு மகன்கள்டா. நான் என்னையும் சேர்த்துன்னு சொன்னேன். இதிலிருந்தே நீதான் அவங்களுக்கு ரொம்ப முக்கியம்னு உனக்குப் புரியுதா?''

''அது என்னோட பெத்தவங்க செஞ்ச புண்ணியம் ராஜ். அதனால்தான் இவ்வளவு பாசமுள்ள மனிதர்கள் என் கூட இருக்காங்க.''

''போதும்டா தீபா. இன்னிக்கென்ன நீ செம பார்ம்ல இருக்க போல. டயலாக்கெல்லாம் கூடைகூடையா கொட்டறே. சரி சரி வா. இந்நேரம் வெளியில அந்தப் பெரியவர் சதாசிவம் தலையில இருக்கிற நாலு முடியையும் குழப்பத்துல பிச்சி எடுத்துக்கிட்டு இருக்கப்போறார்'' நண்பனின் தோள் தட்டிச் சிரித்தான் தீபன்.



## 12

அறைக்கதவைத் திறந்துகொண்டு வெளிவந்த தீபனும் ராஜும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

சதாசிவத்திடம் என்ன சொல்வது என்று புரியாமல் விழித்த தீபனைப் பார்த்த ராஜுவிற்கு சிரிப்பு வந்தது. இந்த நிலையில் தான் சிரித்தால் தீபன் அவனைக் கண்களாலேயே எரித்து விடுவான் என்று உணர்ந்திருந்த ராஜ் சிரிப்பை தனக்குள் அடக்கிக் கொண்டான்.

''என்னங்க தம்பி? பேசி முடிச்சிட்டீங்களா? வழக்கமா எல்லா விவரத்தையும் கேட்டுவிட்டுத்தான் மத்தவங்கள் லாம் அவங்களுக்குள்ளே கலந்து பேசி முடிவெடுப் பாங்க. நீங்க விவரம் கேட்கவே இவ்வளவு யோசிக் கிறீங்களே?''

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை சார். பிஸ்னெஸ் விஷயமா உடனடியா ஒண்ணு சொல்லணும்னுதான் நான்... வந்து... இவனை... மேற்கொண்டு பேசமுடி யாமல் இழுத்த ராஜை விசித்திரமாகப் பார்த்தார் சதா சிவம்.

''அதனால ஒண்ணுமில்லை தம்பி. இன்னமும் வேற ஏதாச்சும் பேசணும்னாலும் பேசிட்டு பொறுமையாவே வாங்க. நான் வெய்ட் பண்றேன்.''

''டேய் தீபா... இவன் என்னை விட ரொம்ப நல்லவரா இருக்காறேடா... எப்படிடா உனக்கு மட்டும் இப்படி இளிச்சவாயன்களா வந்து மாட்டுறோம்'' நண்பனின் காதோரமாய் முணுமுணுத்த ராஜன் சதாசிவத்தைப் பார்த்துப் புன்னகைத்தான்.

''என்ன தம்பி... தீபன் சாரிடம் என்ன சொல்றீங்க?''

''அது ஒண்ணுமில்ல சார். நீங்க ரொம்ப நல்லவர்னு தான் சொன்னேன்.''



''ரொம்ப நன்றி தம்பி.''

''டேய் என்னால முடியலடா... இவரு ரொம்ப ரொம்ப நல்லவரா இருக்கார் இதுக்கு மேலே நீயே டீல் பண்ணிக்க.''

''மறுபடியும் என்ன தம்பி...?''

''ஒண்ணுமேயில்ல சார். தீபா என்ன பேசணுமோ சார்கிட்ட நேரடியாவே பேசிவிடு'' என்று கழன்றுக் கொண்ட நண்பனைப் பார்த்து முறைத்தான் தீபன்.

''டேய் கிராதகா... இப்படி என்னைத் தனியா மாட்டி விட்டு வேடிக்கை பார்க்கிறாயா?'' பல்லிடுக்கில் முணு முணுத்தான் தீபன்.

''சரி தம்பி. நீங்க ஒரு முடிவைச் சொல்லிட்டீங்கன்னா நான் மேற்கொண்டு ஆகவேண்டியதைப் பார்க்க ஆரம்பிப்பேன்.''

''ஆமான்டா தீபா. சார் மேற்கொண்டு என்னவெல் லாம் ஆக வேண்டுமோ எல்லாவற்றையும் பார்க்க வேண்டாமா?''

''டேய் படுபாவி, உனக்கு நான் என்ன கெடுதல் பண்ணினேன்? இப்படி மாட்டிவிட்டு வேடிக்கை பார்க் கிறாயே?''

''காதல்னா சும்மா டயலாக் விடுவது மட்டுமில்லை நண்பா. இன்னும் இதுபோல பல சோதனைகளை நீ கடக்க வேண்டும்.''

''போதும்டா... இந்த சோதனையில் இருந்து தப்பிக்க முதலில் வழி சொல்லுடா. என் கண்ணில்ல'' நண்பர்கள்

இருவரும் முணுமுணுப்பாக பேசிக்கொள்வதை தீர்க்கமாக கவனித்துக் கொண்டே அமர்ந்திருந்தார் சதாசிவம்.

''என்ன தம்பி? ஏதாவது பிரச்சினையா? என்னிடம் சொல்லக் கூடியதென்றால் சொல்லுங்கள். நான் என்னால் ஆன உதவியை கண்டிப்பாகச் செய்கிறேன்.''

சதாசிவத்தின் வார்த்தைகளில் தெரிந்த அன்பு தீபனை உலுக்கியது. அவன் சதாசிவத்தை ஆச்சரியமாகப் பார்த்தான்.

''ஏன் தம்பி அப்படிப் பார்க்கறீங்க?''

''உங்களைப் போன்ற மனிதர்கள் இந்தக் காலத்தில் பார்ப்பதே அபூர்வமாகத் தெரிகிறது சார்.''

''அபூர்வமென்ன தம்பி. ஆண்டவன் குடுத்த வாழ்வில் நம்மால் முடிந்த அளவுக்கு அடுத்தவருக்கு என்ன நன்மைகள் செய்ய முடியுமோ அவ்வளவும் செய்ய வேண்டும் என்ற ஆசைதான் தம்பி. உங்க பிரச்சினை எதுவானாலும் என்னிடம் நீங்கள் தயங்காமல் சொல்லலாம். அந்த ஆண்டவன் மீது ஆணையாக என் மூலம் உங்கள் விசயம் எதுவும் யாருக்கும் தெரியாது.''

''அப்படியொன்றும் பெரிய ரகசியமெல்லாம் ஒன்றும் கிடையாது சார்... ஆனால்... வந்து.''

''நான்தான் இவ்வளவு தூரம் கேட்கிறேனில்ல தம்பி. என்னை உங்கள் வீட்டுப் பெரியவர்களில் ஒருவராய் நினைத்து என்னிடம் தாராளமாக நீங்கள் எதை வேண்டுமானாலும் சொல்லலாம்.''



''எங்கள் வீட்டில் பெரியவர்கள் என்று யாரும் இல்லை சார். இதுவரை என் வீட்டில் நானும் என் பிரண்ட் ராஜனும் மட்டும்தான் இருக்கிறோம்.''

''இப்போ நானும் உங்களோடு சேர்ந்துட்டேன்னு வெச்சுக்கிடுங்க தம்பி. எல்லாம் ஆண்டவன் செயல்.''

''கண்டிப்பாய் சார். இனிமேல் நீங்களும் எங்க பேமிலியில் ஒரு மெம்பர்தான் சார்.''

''அப்புறமென்ன தம்பி. உங்கள் பிரச்சினை என்னன்னு சொல்லுங்க. ஒரு கை பார்த்திருவோம்.''

''வேற ஒண்ணுமில்லைங்க சார். நான் நேத்து பீச்சில ஒரு பொண்ணை சந்திச்சேன்... அதான்... அதனால தான்'' மென்று விழுங்கிய தீபனின் கைகளைப் பற்றிக் குலுக்கினார் சதாசிவம்.

''இதைச் சொல்லவா இவ்வளவு தயங்கினீங்க?''

''இல்லை சார். நீங்க எனக்காக வரன் பார்த்துக் கொண்டு வந்திருக்கீங்க. அதையெல்லாம் எப்படி வேண்டாம் என்று சொல்லுவதுன்னுதான் தயக்கமா இருந்தது.''

''அதனாலென்ன தம்பி. இன்னார்க்கு இன்னார்தான்னு அந்த ஆண்டவன்தான் முடிச்சுப் போடணும். நாம நினைக்கிறது எல்லாம் நடந்திருமா. அது சரிங்க தம்பி, அந்தப் பொண்ணு யாரு என்னன்னு தெரியுமா?''

''அதெல்லாம் தெரியா...''

''தெரியும் சார்'' பேசத் தொடங்கிய ராஜனை இடைமறித்தான் தீபன்.

''யாரு தம்பி?''

''யாருடா?''

''பேரு நிகிதா. அப்ப பேரு அருணாச்சலம். ஸ்டேட் பேங்கில் மேனேஜராய் இருக்கிறார். அம்மா பேரு பர்வதம். ஹவுஸ் வொய்ப். நிகிதாவின் வீட்டுக்கு மூத்த பொண்ணு. ஒரே ஒரு தங்கை. பேரு நித்யா. ப்ளஸ் டூ படிக்கிறாள். சொந்த வீடு இருக்கு.''

''டேய் நீயும் நானும்தான் ஒண்ணா இந்த ரூமுக்கு வந்தோம். நான் தூங்கி எழுந்த உடனே உன்னைப் பார்க்க இங்க வந்துட்டேன். இந்த கேப்பில அதுவும் நைட்டோட நைட்டா எப்படிடா இவ்வளவு விவரம் கண்டு பிடிச்ச...?''

''அதுதான்டா தீபன். இருந்த இடத்தில் இருந்தே அத்தனையும் தெரியும் எனக்கு. என்னைப் பற்றித் தெரிஞ்ச நீயே இவ்வளவு கேள்வி கேட்கிறது ஸில்லியா இல்லே?''

''அதென்னமோ உண்மைதான் தீபா. நீ கண்ணை அசைச்சாலே அத்தனை விபரங்களும் உன்னோட காலடிக்கு வந்திருமே!''

''அதெல்லாம் சரிங்க தம்பி. ஸ்டேட் பேங்க் மேனேஜர் அருணாச்சலம்னா எனக்குத் தெரிஞ்சவர் போலத்தான் தோணுது. எதுக்கும் அவங்க வீட்டு அட்ரஸ் குடுங்க. உங்க சார்பில நான் வேணும்னா போய் பேசிப் பார்க்கலாமா?''



''என்ன சார் கேள்வி இது? நீங்கதான் எங்க வீட்டுல ஒருத்தர்னு சொல்லிட்டீங்களே. உங்களுக்கு இல்லாத உரிமையா. தாராளமா போய் பேசிட்டு நல்ல ரிசல்ட்டா சொல்லுங்க. இந்தாங்க அட்ரஸ்'' தீபன் நீட்டிய விலாசத்தை வாங்கிக்கொண்ட சதாசிவம் சோபாவில் இருந்து எழுந்து கொண்டார்.

''சரிங்க தம்பி. நான் போய் பேசிட்டு போன் பண்றேன். நல்லதே நினைப்போம். நல்லதே நடக்கும். அப்ப வரட்டுங்களா?'' கை கூப்பிய சதாசிவத்தின் கைகளைப் பற்றி விடைகொடுத்தான் தீபன். ஒரு பெரிய பாரம் நெஞ்சில இருந்து இறங்கியதைப் போல நிம்மதிப் பெருமூச்சு விட்ட நண்பனைப் பார்த்துக் கேலியாகச் சிரித்தான் ராஜ்.



## 13

முள்ளின் மேல் அமர்ந்திருப்பதைப் போல அமரமுடியாமல் தவித்த தீபன் எழுந்து மெதுவாக அறைக்கு உள்ளேயே குறுக்கும் நெடுக்குமாக நடக்க ஆரம்பித்தான். அவனது கண்கள் நொடிக்கு ஒருமுறை கைக்கெடிகாரத்தை பார்த்து மீண்டது. கால் வலிக்கும் வரை நடந்தவன் சோபாவில் சோர்வுடன் அமர்ந்து பெருமூச்சு விட்டான்.

தீபனுக்கு இந்த அனுபவம் புதியது. அவன் செய்ய நினைக்கும் காரியத்தை அவனுடைய கண் அசைவி லேயே நொடியில் முடித்து விடுவார்கள் அவனது ஆட்கள். தாமதம் என்ற வார்த்தையே தீபனுடைய அகராதியில் கிடையாது. மூச்சு விடுவதே சிரமம் போல தோன்றியது தீபனுக்கு.

அருகில் இருந்த டீபாயில் இருந்த தண்ணீர் வழிந்து சட்டையை நனைத்தது கூட அறியாமல் ஜக்கை கீழே வைத்துவிட்டு எதிரில் இருந்த சுவரை வெறித்தபடி அமர்ந்திருந்த நண்பனைப் பார்த்த ராஜனுக்கு தீபனைப் பார்த்து கவலைப்படுவதா சிரிப்பதா என்றே தெரிய வில்லை. ஏனெனில் அவன் தீபனை இப்படியொரு மனநிலையில் இன்றுதான் முதன் முதலாகப் பார்க் கிறான்.

எப்படிப்பட்ட சூழ்நிலையையும் நொடியில் சமா ளித்து மீண்டுவரும் தீபனா இவன் என்று ஆச்சரியமாக இருந்தது. ராஜனுக்கு அவன் கவலையுடன் எதுவும் சொல்லத் தோன்றாமல் நண்பனின் முகத்தைப் பார்த்த வாறு அமைதியாக அமர்ந்திருந்தான்.

''ம்ப்ச்... என்னடா இவர்... இன்னும் என்னதான் செய்து கொண்டிருக்கிறார்?''

எவர் என்று கேட்கும் தைரியம் ராஜனுக்குக் கிடை யாது அவன் அமைதியாக நண்பனைப் பார்த்தான்.

''நான் இவரை நம்பி அனுப்பியது தவறு ராஜ்.''

''.....''



''பேசாமல் நானே நேரில் போயிருக்கலாமோ?''

''.....''

''இல்லையென்றால் நீயாவது போயிருக்கலாம்.''

''.....''

''எல்லாம் உன்னால் தான் வந்தது ராஜ். நான் பாட்டுக்கு சிவனே என்று பெங்களூரிலேயே நிம்மதி யாக இருந்திருப்பேன். என் மனசைத் தேற்றுகிறேன் என்று நீதானே இங்கு வரவழைத்தாய்? இப்பொழுது பார்... என்னவெல்லாம் ஆகிவிட்டது என்று?''

ராஜன் என்னவாகிற்று என்று கேட்கும் நிலையில் இல்லை. வாயைத் திறந்தால் தீபன் அவனை உண்டு இல்லை என்று ஆக்கி விடுவான் என்பதால் மௌனத்தின் பின்னணியில் மறைந்து கொண்டான் அவன்.

''இவர் அதற்கெல்லாம் சரிப்பட்டு வரமாட்டார் என்று எனக்கு அப்பொழுதே தோன்றியது ராஜ். நான்தான் அவசரப்பட்டு விட்டேன் என்று நினைக்கிறேன்'' கேட்ட வாறே நண்பனைப் பார்த்த தீபனுக்கு அப்பொழுதுதான் அவன் அதுவரை ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை என்பது உரைத்தது.

''ஏன்டா... என்னைப் பார்த்தால் உனக்கு எப்படித் தெரிகிறது... பைத்தியம் போலவா? அல்லது இவனுக்கு எல்லாம் என்ன பதில் சொல்றதுன்ற தெனாவெட்டா?'' கோபமாகக் கேட்ட நண்பனை பரிதாபமாகப் பார்த்தான் ராஜன்.

''டேய் என்னை வேண்டுமானால் நாலு அடிகூட அடித்துவிடு. ஆனால் உன்னுடைய புலம்பலுக்கு எல்லாம் பதில் சொல்ற வேலையை தயவுசெய்து கொடுத்து விடாதே.''

''ஏன்டா என் பேச்சு உனக்கு புலம்பல் போலத் தெரிகிறதா?''

''சத்தியமா அப்படித்தான் தெரியுதுடா.''

''அப்படின்னா நான் மென்டல் ஆகிட்டேன்னு சொல்றியா நீ.''

''ஏறக்குறைய அப்படித்தான்னாலும் அதைச்சொல்ற தைரியம் எனக்கில்லடா. என்னை மன்னிச்சிருடா தீபா.''

''என்னடா? என்னைப் பார்த்தால் உனக்குக் கிண்டலா இருக்கா?''

''இல்லடா... மென்டலா இருக்கு.''

''டேய்... ராஜ்... என்னைக் கொலைகாரனா ஆக்கிடாதே சொல்லிட்டேன்.''

''இனிமேல் தான் நீ கொலைகாரனா ஆகணுமாடா இவ்வளவு நேரமும் என்னை உயிரோடவே கொலையாகக் கொன்னுகிட்டுத்தானேடா இருக்கே...?''

''உனக்கென்னடா... நீ இப்படித்தான் தெனாவெட்டா பேசுவ... நிம்மதியாக் கல்யாணம், பொண்டாட்டி, பிள்ளைன்னு வாழ்கிறவன் நீ. என்னைப் பார்த்தால் உனக்கு அப்புறம் எப்படி இருக்கும்'' நண்பனை



முறைத்துப் பார்த்துவிட்டு எழுந்து கொண்ட தீபன் வேகமாக படுக்கை அறைக்குள் நுழைந்து கதவை சாத்திக்கொண்டான்.

''டேய்... டேய்... தீபா... ஒரு நிமிஷம் நான் சொல்றதைக் கேளுடா. டேய்'' தீபனின் பின்னால் ஓடிய ராஜன் வேகமாக அவனும் படுக்கையறையில் நுழைந்து கொண்டு தீபனின் தோள்களைக் கட்டிக் கொண்டான். ராஜனுக்குத் தெரியும், தனது இந்த ஆறுதலான அணைப்பு தீபனைச் சமாதானப்படுத்தும் என்பது. அவனது எண்ணப்படியே சிறிது சமாதானம் அடைந்த தீபன் கைகளைத் தலைக்கு மேல் கட்டிக்கொண்டு கட்டிலில் சாய்ந்தவாறு அமர்ந்தான்.

''என்னடா தீபா இது? என்னைப் பார்த்து இவ்வளவு பெரிய பெரிய வார்த்தையெல்லாம் பேசிட்டியே. என் மனசு ரொம்ப வேதனைப்படுதுடா... இனிமேல் கேலிக்குக் கூட இப்படியெல்லாம் பேசாதே தீபா'' கண்டிப்புடன் கடிந்து கொண்ட நண்பனை மௌனமாக ஏறிட்டான் தீபன்.

''உன் நிலை எனக்குப் புரியாமல் இல்லை தீபா. ஆனால் இந்த விஷயம் உன் வாழ்க்கை சம்பந்தப்பட்டது. இன்னமும் கூட நீ எடுத்திருக்கும் இந்த முடிவு சரியா தவறா என்று என் மனம் அடித்துக் கொள்கிறது...'' ஏதோ பதில் கூறுவதற்காக வாய் திறக்கச் சென்ற நண்பனை கையமர்த்தி தடுத்தான் ராஜன்.

''கொஞ்சம் பொறு தீபா. நான் முழுவதையும் பேசிடுறேன். அப்புறம் நீ என்ன சொல்லணுமோ நான்

பேசுவதைக் கேட்டுவிட்டு நீ சொல்லு. நீ இப்ப எடுத்திருக்கும் இந்த முடிவு அந்தப் பொண்ணை உனக்கு ரொம்ப பிடிச்சிருக்கிறதா இருந்தால் மட்டும் தான் சரியாக இருக்கும் தீபா.

ஆனால் அவனை இதன் மூலமாப் பழிவாங்குற எண்ணத்தில இந்தக் கல்யாண முடிவை நீ எடுத்திருந்தால் தயவுசெய்து உன் எண்ணத்தை மாற்றிக் கொள். அது உன் வாழ்க்கையையும் சேர்த்து நரகமா மாற்றிவிடும். நாமெல்லாம் வீட்டைவிட்டு வெளியேறினால் மறுபடியும் வீட்டுக்குள் உயிரோடு வருவோம்ங்கிற உத்திரவாதம் இல்லாத மனிதர்கள். அப்படி இருக்கும் போது வாழ்கிற வாழ்க்கையை சந்தோஷமாய் மனநிறைவாய் வாழணும்டா தீபா.

அந்தப் பொண்ணும் கூட கல்யாணத்துக்கு அப்புறமாய், பெத்தவங்க, கூடப்பிறந்தவங்க, வாழ்ந்த இடம்னு அத்தனையையும் உனக்காக விட்டு விட்டு, உன்னை மட்டுமே நம்பி உன் வீட்டுக்கு வருகிறாள்டா. அவளை கஷ்டப்படுத்தினா அது உன் வாழ்க்கையைத்தான் மேலே மேலே சிக்கலாக்கும். அதனால மறுபடியும் நல்லா யோசிச்சு முடிவெடு.

அதுக்கப்புறம் சொல்லு. உன் முடிவு சரியானதா இருந்தா இந்த உலகமே எதுத்து நின்றாலும் நான் உன் கூட இருந்து உன் கல்யாணத்தை நடத்தித் தர்றேன்'' நண்பன் கூறிய ஒவ்வொரு வார்த்தையையும் மனதார கேட்டுக்கொண்டே அமர்ந்திருந்த தீபன் மெதுவாக எழுந்து அமர்ந்துகொண்டு ராஜனின் கைகளைப் பிடித்துக் கொண்டான்.



''ராஜ், உன்னை மாதிரி ஒரு நண்பன் எனக்குக் கிடைக்கிறதுக்கு நான் எத்தனையோ புண்ணியம் பண்ணியிருக்கணும்டா. ஆனால் என்னை நீ புரிஞ்சுக் கிட்டது அவ்வளவுதானா? ஒரு பொண்ணை பழிவாங்குறதுக்கு நான் அவளை கல்யாணம் பண்ணிக்குவேன்னு நீ நினைக்கிறியா? தீபன் ஒருநாளும் அந்தக் காரியத்தை செய்ய மாட்டான்னு உனக்கு தெரியாதா? அவளைப் பழிவாங்கணும்னு நினைச்சிருந்தேன்னா ஒரு நொடியில் அதை செஞ்சு முடிக்கிறவன்டா உன்னோட தீபன்.''

''அது எனக்கு நல்லாத் தெரியும் தீபா. ஆனால் எனக்கு என்னவோ யோசனையாவே இருக்குடா.''

''நீ எதுக்காக இவ்வளவு யோசிக்கிறேன்னு எனக்கு நல்லாப் புரியுது ராஜ். அவளை விரும்புற நான் நேத்து எதுக்காக அவ்வளவு கோபப்பட்டேன்னுதானே?''

''ஆமாம்டா... அதனாலதான் நான்...''

''ஏன்டா? ஒரு பொண்ணு எதிர்பார்க்காமல் என்னோட கன்னத்தில அறைஞ்சா, மறு கன்னத்தையும் திருப்பிக் காட்ட நான் என்ன மகாத்மாவா? தீபன்டா. நான் ஒரு சாதாரண மனுசன்டா. அவ அடிச்சதும் எனக்குக் கோபம் வருவது இயல்புடா. அதிலேயும் நான் அவளை சைட் அடிச்சுட்டு வேற இருந்தேன். அந்தச் சமயத்துல அவ அப்படி நடந்துக்கிட்டதும் எனக்கும் கோபம் தன்னால வந்துருச்சு.''

''சரி. அதுக்கு அப்புறமும் காரில் உட்கார்ந்துட்டு அவளை முறைச்சுக்கிட்டுத்தான இருந்த?''

‘‘ஏன்டா என்னை என்ன மான, ரோசம் ஒண்ணும் இல்லாதவன்னு நினைச்சிட்டியா? தீபன்னா தீயைப் போன்றவன்னு உனக்குத் தெரியாதா? என்னைத் தொட்ட யாரையும் இதுவரை நான் சும்மா விட்டிருக் கேனா?

என்னமோ அவளை முறைச்சுப் பார்த்ததுக்கே இத்தனை கேள்வி கேக்கறே? முறைச்சுத்தானே பார்த்தேன். அவளை இந்த நிமிசம் வரைக்கும் ஏதாவது செஞ்சிருக்கேனா? இப்பக்கூட அவளோட அந்த தைரியத்தை பிடிச்சுப்போய்தான்டா கல்யாணம் வரை வந்திருக்கேன். என்னை நம்புடா’’ தீபன் பேசிய பேச்சுக்கள் அனைத்தையும் கேட்டவாறு நம்பிக்கையில் லாமல் அமர்ந்திருந்த ராஜனைத் தீர்க்கமாகப் பார்த்தான் தீபன். ஆனால் அவனது பார்வையால் சிறிதும் பாதிக் கப்படாதவனாக யோசனையிலேயே அமர்ந்திருந்தான் ராஜ்.



# 14

‘‘என்ன ராஜ்? இப்ப உன் பிரச்சினைதான் என்ன?’’

‘‘எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை தீபா. நேத்து அந்தப் பொண்ணு நிகிதா உன்னை அறையறதுக்கு முன்



பேசின வார்த்தைகள் எதுவும் உன் மனதைப் பாதிக் கலையா?’’

‘‘.....’’

‘‘கேட்ட கேள்விக்கு நேரடியா பதில் சொல்லுடா.’’

‘‘அவ பேசின ஒவ்வொரு வார்த்தையும், ஒவ்வொரு செய்கையும் என் மனசில ஆணி அடித்ததுபோல அப்படியே பதிஞ்சிருக்கு ராஜ்.’’

‘‘அப்புறம் எப்படிடா அவளைக் கல்யாணம் செய்துக்க முடிவெடுத்த?’’

‘‘வேற என்னை என்னடா பண்ணச் செல்ற? இதுவரைக்கும் யாருக்கும் அசைஞ்சு கொடுக்காத என் மனம் அவளால்தானடா அலைபாய்ஞ்சுக்கிட்டிருக்கு? இதுவரை யாரையும் எண்ணாத என் உள்ளம்இன்னைக்கு அவளை மட்டும்தானடா நினைச்சு ஏங்கிட்டிருக்குது? இதுவரை யாரிடமும் பணியாத இந்த தீபனே இன்னிக்கு அவன் சொல்லப்போற சம்மதத்திற்காகத்தானடா தவம் இருக்கிறேன்? என்னை வேற என்னடா செய்யச் சொல்ற?’’

‘‘ஆனா... தீபா...’’

‘‘ஆமாம்டா. அவ என்னை அவளைத் தொடக் கூடாதுன்னு சொன்னாதான். ஆனா அவள் என் பக்கத்திலே இருந்தால் மட்டும் போதும்னு என் மனசு சொல்லுதேடா. அவளோட அருகாமை மட்டும் இருந்தால் போதும்னு என்னோட அறிவு கெஞ்சுதேடா? நான் என்னதான் செய்யட்டும்?’’ தலையைப்

பிடித்துக்கொண்டு மதிகெட்டவனாய் புலம்பும் நண்பனை ஆச்சரியத்துடன் பார்த்த ராஜன் அவனை இழுத்து தோளோடு அணைத்துக் கொண்டான்.

''இவன் உண்மையிலேயே நிகிதாவை காதலிக் கிறான். இது ஒண்ணே போதும் எனக்கு'' தனக்குள் எண்ணி புன்னகைத்தான் ராஜன்.

''சரிடா தீபா. ரொம்ப யோசிக்காதே. நமக்கெல்லாம் ஆக்சன்தான் கைகொடுக்கும். அந்தப் பெரியவர் என்ன சொல்லிட்டு வர்றார்னு பார்க்கலாம். அதுக்கு அப்புற மாய் நாம என்ன செய்யலாம்னு யோசிச்சுக்கலாம் சரியா? இப்ப எந்திரிச்சு ஏதாவது சாப்பிடு. காலையில் இருந்து நீ ஒண்ணும் சாப்பிடாமக் கிடக்கிற.''

''ஏன்டா, உனக்குப் பசி வந்திருச்சாக்கும்.''

''ஒரு மணிக்குக்கூட பசிக்கலேன்னா அப்புறம் நான் மனுசனே இல்லியேடா?''

''என்னது! மணி ஒண்ணாயிருச்சா? இன்னும் அவர்... அந்தப் பெரியவர் சதாசிவம்...''

''அப்பா... சாமி... புண்ணியவானே உனக்குக் கோடி கும்பிடுடா. மறுபடியும் முதல்லேர்ந்து ஆரம்பிக்க வேணாம்டா. ஐ ஆம் பாவம். என்னை விட்டுவிடு.''

''போடா ஜோக்கர். போய் சாப்பிட ஏதாவது ஆர்டர் பண்ணு. நான் இதோ வந்திடுறேன்.''

''லவ் பண்றவனோட பிரண்ட் யாராக இருந்தாலும் அவன் ஜோக்கர்தான்றது எழுதப்படாத நியதிடா. நான்



மட்டும் விதிவிலக்கா என்ன? நீ சீக்கிரமாய் வந்து சாப்பிடுற வழியைப் பாரு'' என்றவாறே ஹாலுக்கு வந்த ராஜன் போனை எடுத்து சாப்பாடு ஆர்டர் சொல்ல ஆரம்பித்தான்.

இரண்டு பெட்ரூம், ஹால் கொண்ட விஐபி ரூம் அது. ஆர்டர் சொல்லிய ராஜன் இன்னொரு ரூமிற்குள் போய் கைகளைக் கழுவிவிட்டு வரும்முன் ரூமின் காலிங்பெல் ஒலிக்க ஆரம்பித்தது.

'என்னடா இது! அதற்குள்ளாகவா சாப்பாடு வந்து விட்டது! மாயம்தான்' மனதிற்குள் எண்ணமிட்டவாறு கதவைத் திறந்த ராஜன் வெளியே நின்றிருந்த சதா சிவத்தைப் பார்த்ததும் அவர் அறியாமல் பெரிய கும்பிடு போட்டான்.

''சாாார்... வாாாங்க சார்! உங்களக்கு ஆயுசு நூறு. இவ்வளவு நேரமும் உங்களைப் பற்றித் தான் பேசிக் கிட்டு இருந்தோம்.''

''ஏதோ உங்க புண்ணியத்தில எனக்கு ஆயுசு கூடினா சந்தோஷம் தான் தம்பி'' கூறிக்கொண்டே உள்ளே வந்த சதாசிவத்தை சோபாவில் அமர வைத்தான் ராஜன்.

பேச்சுக்குரல் கேட்டவுடன் கதவைத் திறந்த தீபன் வேகமாக வந்து சதாசிவத்தின் எதிரேயிருந்த சோபாவில் அமர்ந்து ஆவலாய் அவரை நோக்கினான்.

'பய ரொம்பவும் அலையறானே! இவன் எப்படி இப்படி மாறினான்' ஆச்சரியத்துடன் எண்ணிக்கொண்ட ராஜ் தீபனின் அருகில் அமர்ந்தான்.

''சொல்லுங்க சார், அருணாச்சலம் சாரைப் போய் பார்த்தீங்களா?'' நண்பனின் சார்பில் கேட்டான் ராஜ்.

''பார்த்துப் பேசினவுடன் நேராய் இங்கதான் தம்பி வர்றேன். இன்னும் சாப்பிடக்கூட இல்லை.''

''நீங்களுமா!!!''

''நீங்களுமான்னா? நீங்களும் இன்னும் சாப்பிடவில் லையா.''

''எங்க சார் சாப்பிட விடறாங்க? ஒருத்தன் நிம்மதியா சாப்பிடுறதுதான் இந்த உலகத்தோட கண்ணை உறுத் துதே?'' அப்பாவியாகக் கூறிய ராஜனை முறைத்தான் தீபன்.

''உலகத்தோட கண்ணா? என்ன தம்பி சொல்றீங்க?''

''நான் பொதுவாய் சொன்னேன் சார். நானெல்லாம் என்னிக்குமே வயித்துக்கு வஞ்சனையே பண்ணாதவன். இப்படி ஒரு பசிக்காதவனுக்கு பிரண்டா இருந்தா நானும்தான் என்னதான் பண்ணுவேன்?'' பசித்த வயிற்றைத் தடவிக் கொடுத்தான் ராஜ்.

''கஷ்டம்தான் தம்பி. ஆனால் எனக்கு லேட்டாச் சாப்பிடுறது பழக்கம்தான் தம்பி. அதனால பிரச்சினை யிலல.''

'இப்ப இதுதான் ரொம்ப முக்கியம்' மனதிற்குள் பல்லைக் கடித்த தீபன், சதாசிவத்தைப் பார்த்துப் புன் னகைத்தான்.

''சரிங்க சார். நீங்க பேசவந்த மேட்டரையே மறந்துட் டீங்க...''



''மறக்கல தம்பி. ராஜன் தம்பி அதோட சோக கதையை சொல்லவும் பேச்சு மாறிட்டேன்.''

'அடப்பாவி. இப்ப நீ மேட்டரை சொல்லலேன்னாத் தான் என் கதை சோக கதை ஆகிரும்யா...' மன திற்குள் அலறிய ராஜன் வேகமாக சதாசிவத்தைப் பார்த் தான்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லை சார். நான்... அம்மா... ஹி... ஹி... நீங்க சொல்ல வந்ததை சீக்கிரமாய் சொல்லுங்க... ஏன்னா... ஹி... ஹி...'' வழிந்த ராஜனைப் பார்த்து எரிமலையாய் முறைத்தான் தீபன். அவன் பார்வையின் உக்கிரம் தாங்க முடியாமல் வாயின் மேல் விரல் வைத்துக் கொண்டு எல்கேஜி பிள்ளையாய் அமர்ந்துவிட்ட ராஜனைப் பார்த்து வாய்விட்டுச் சிரித் தார் சதாசிவம்.



## 15

''தம்பி. நான் இப்படி மனசு விட்டுச் சிரிச்சு ரொம்ப நாள் ஆகுது தம்பி... ஹா... ஹா'' கண்களில் நீர் மல்கச் சிரித்த பெரியவரைப் பரிவுடன் பார்த்தான் தீபன்.

''யார் இவர்? இவருக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? சரியாக எனக்கு உதவி தேவைப்படும் சமயத்தில் வந்து

ஆபத்பாந்தவராக உதவுகிறாரே? இதெல்லாம் என் பெற்றவர்களின் ஆசீர்வாதத்தினால் நடக்கிறதா?''

''என்ன தம்பி இப்படி பார்க்கிறீங்க. நான் கொஞ்சம் ஓவரா சிரிச்சுட்டேனா?''

''உங்களைப் போலப் பெரியவங்க மனசு விட்டு சிரிச்சா அது எங்களுக்குப் புண்ணியம்தானே சார்.''

''சரிங்க தம்பி. இப்பவாவது மேட்டரைச் சொல் லிடுறேன். அருணாச்சலத்தைப் பார்த்துப் பேசிட்டேன். அவருக்கு உங்களைப் பற்றிச் சொன்னவுடனே ரொம்ப சந்தோஷம். முழுதிருப்தியோட அவர் பொண்ணை உங்களுக்குத் தர சம்மதிச்சுட்டாரு. ஆனால் ஒரு சின்ன நிபந்தனை சொல்லி இருக்காரு.''

''என்ன நிபந்தனை சார்?'' ஆவலும் பயமுமாகக் கேட்டான் அவன்.

''அவர் பொண்ணு உங்களைப் பார்த்துப் பிடிச்சிருக் குன்னு சொன்னால்தான் மேற்கொண்டு எதுவும் பேச முடியும்னு சொல்லிட்டாரு.''

நண்பர்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

'நடக்கிற காரியமா அது?' மனதிற்கு எழுந்த சந் தேகத்தை மறைத்துக்கொண்டே பெரியவரைப் பார்த்தான் தீபன்.

''அது நியாயம்தானே சார்? பெத்தவங்களுக்கு தன் பெண்ணோட சந்தோஷம்தானே முக்கியம்?'' கூறிய தீபனைப் பார்த்து பெருமூச்சுவிட்டான் ராஜ்.



'பெத்தவங்களுக்கு அது முக்கியம்தான்டா. ஆனா உனக்கு.'

''நான் இதைப் பற்றி ராஜ்கிட்டப் பேசறேன்.''

'என்கிட்டே என்னத்தைடா பேசப்போறே?'

''என்ன ராஜ்? நம்ம பேசிட்டு சாருக்கு ஒரு ஒன் அவர்ல கால் பண்ணிடலாமில்ல?''

'நீ என்ன சொன்னாலும் சரிடா நல்லவனே.'

''சரிங்க சார். இன்னிக்கு ஈவ்னிங்கே நாம போய் பொண்ணைப் பார்த்து விடலாம். எத்தனை மணிக்கு போகலாம்னு நான் உங்களுக்குக் கால் பண்றேன் சார்.''

'இன்னிக்கேவா... ஈவ்னிங்கா... அப்ப மதியப் சாப்பாடும் கட்டா... நீயெல்லாம் நல்ல்லா இருப்படா' பசியால் துடிக்கும் வயிற்றைத் தடவிக் கொடுத்தபடி அமைதியாய் இருந்தான் ராஜன்.'

''சரிங்க தம்பி. நான் அப்ப கிளம்பறேன்'' என்றவாறு தீபனை நோக்கிக் கைகூப்பிய சதாசிவம் ராஜனைப் பாவமாகப் பார்த்துவிட்டுக் கிளம்பினார்.

கதவைப் பூட்டிவிட்டு ராஜின் எதிரில் அமர்ந்த தீபனின் முகம் தீவிரமான சிந்தனையில் இருந்தது. சிறிது நேரம் அமைதியாய் இருந்த தீபன் தீர்மானமாய் ராஜனின் முகத்தை ஏறிட்டான்.

''சரிடா ராஜ்... இப்ப நாம என்ன பண்ணலாம்.''

''நான் சொன்னா கோபிக்க மாட்டேல்ல?''

"எதுக்குடா கோபிக்கப் போறேன். உன் யோசனை எதுவா இருந்தாலும் சொல்லு. அதுப்படியே செய்யலாம்."

"இப்ப முதல்ல சாப்பிட்டுவிடலாம் தீபா. மத்ததை அப்புறமாய் பேசிக்கலாம்" கூறிய ராஜனை நோக்கி அருகில் இருந்த புத்தகத்தை எடுத்து எறிந்தான் தீபன்.

"என் வாழ்க்கையைவிட உனக்கு சாப்பாடு முக்கியமா போச்சா?"

"டேய். இப்ப நான் வாழறதே இந்த சாப்பாட்டுல தான்டா இருக்கு. பசியிலே என் உயிரே போய்கிட்டு இருக்குடா" ராஜன் சொல்லிய தொனியில் வாய்விட்டுச் சிரித்தான் தீபன்.

"சரியான சாப்பாட்டு ராமன்டா நீ. சரி போய் சாப்பாடு வந்திருச்சான்னு பாரு" தீபன் சொல்லி முடிக்குமுன் கதவை நோக்கிப் பாய்ந்தான் ராஜன்.

சாப்பிட்டு முடித்து திருப்தியாய் ஏப்பம் விட்ட ராஜன், படுக்கையறைக்குள் நுழைந்து நிம்மதியாய் படுக்கையில் சாய்ந்தான். அவனருகில் மௌனமாய் அமர்ந்த தீபனைப் பார்க்கும்பொழுது ராஜனுக்கே பாவமாக இருந்தது.

"காதல் எப்பேர்ப்பட்ட வீரனையும் கோழையாக ஆக்கி விடுமா?"

"இப்ப என்னடா தீபா ஆச்சு? ஏன் இப்படி இடிஞ்சு போய் உட்கார்ந்திருக்கே?"



"இல்லடா. நிகிதா என்னை கல்யாணம் பண்ணிக்க சம்மதம் சொல்வாளா?"

"ஏன்டா? உனக்கு என்ன குறைச்சல்? வீரம், பணம், அந்தஸ்து, தொழில்னு அத்தனையும் உன்னிடம் அளவுக்கு அதிகமாவே இருக்கு தீபா. நீ எதிலும் யாருக்கும் குறைந்தவன் இல்லையே?"

"ஆனால் அழகு ராஜ்? நீயே அழகுன்னு ஒண்ணைச் சொல்லவே இல்லையே?"

"டேய் தீபா!! உன் அழகுக்கு என்னடா குறைச்சல்? மாநிறம்னாலும் நீ ஆணழகன்டா."

"காக்கைக்கும் அதோட குஞ்சு அழகாய்த்தானடா இருக்கும்?"

"கருப்பாய் இருந்தாலும காக்காயும் அழகுதான்டா. அதுக்கு அழகே அதோட நிறம்தான்டா."

"டேய் பேச்சுக்கு என்ன வேணும்னாலும் சொல்லலாம். நடைமுறைன்னு ஒண்ணு இருக்கில்ல. இப்ப நடக்க வேண்டியதை யோசிப்போம்."

"நீ முதலில் உன்னை நம்பு தீபா. அப்புறம் பார். நடக்கிறது எல்லாம் நல்லதாவே நடக்கும். அப்புறம் ஒண்ணு சொல்றேன் மனசில வெச்சுக்க. இனிமேல் என்றைக்குமே நீ உன்னைப்பற்றி இப்படிக் குறைவாப் பேசாதே. என்னால் அதைத் தாங்க முடியாதுடா. எனக்கு என்றுமே நீதான் உயர்த்தி தீபா."

"அதுக்கில்லை ராஜ்... உண்மைன்னு..."

"என்னடா உண்மைக் கண்டுட்டே. பெரிய உண்மை விளம்பி இவன்... பேசறான். ஏன்டா ஆண்களுக்கு அழகே வீரமும், அவர்கள் தொழிலும் தான்டா. அது மட்டும் இல்லை, எந்தப் பொண்ணுக்குமே தன்னம்பிக்கை இல்லாத ஆண்மகளைப் பிடிக்காது. ஒரு பெண் தன் கணவனிடம் எதிர்பார்க்கும் முதல் குணாதிசயம் என்ன தெரியுமா... அவள் மேல் அவன் வைத்திருக்கும் காதல்தான். அதுதான் உன்னிடம் அளவுக்கு அதிகமாய் இருக்கேடா. உன்னை நம்பி வரும் பொண்ணை நீ மகாராணியாய் வாழ வைப்பே. அந்த நம்பிக்கை ஒண்ணே போதும்டா."

"சரிடா ராஜ். இனிமேல் இப்படி பேச மாட்டேன். சாரிடா."

"தீபா அன்புன்றது ஒரு மனிதனை வீரமானவனா மாத்தினாத்தான்டா சரித்திரம் சொல்லுது. நீ அதற்கு நேர்மாறாய் கோழையா ஆகிக்கொண்டு இருக்கிறாயேடா?"

"தீபன் என்றைக்குமே கோழையில்லை ராஜ். நான் சுயவிமர்சனம்தான் பண்ணினேனேயொழிய என்னோட தன்னம்பிக்கை என்றைக்கும் குறையாது ராஜ்."

"சரிடா. இப்ப என்ன பண்ணனும்னு சொல்லு பண்ணிரலாம்."

"ராஜ். நிகிதா என்னுடையவள். அவளை நான் கண்ணுக்குள் வைத்து பாதுகாத்து அவளோட வாழ்வை சந்தோஷம் மட்டுமே நிறைஞ்சதா மாற்றணும்டா. நான்



அவளை எப்பாடுபட்டாவது கல்யாணம் செஞ்சுக்கணும். அதற்கான வழியைத்தான் யோசிக்கிறேன்."

நண்பனின் சிந்தனையில் குறுக்கிடாமல் அமைதியாய் இருந்தான் ராஜ். நண்பனோ சிந்தனை விலகி பழைய வீரமும் விவேகமும் நிரம்பிய தீபனாய் ராஜாவைப் பார்த்துப் புன்னகைத்தான். இனி ஒரு பொழுதும் நிகிதா தீபனைப் பிரிய முடியாது என்ற எண்ணமிட்ட ராஜன் எழுந்து தன் மனைவிக்கும் அன்னைக்கும் இந்த நல்ல செய்தியை தெரியப்படுத்த விரைந்தான்.

## 16

வாசலில் நின்றிருந்த வெளிநாட்டுக்கார்களைப் பார்த்து வியந்தவண்ணம் வீட்டுக்குள் நுழைந்தாள் நிகிதா. வெண்பட்டில் அடர்ந்த நீல நிறத்தில் எம்ராய்டரிங் செய்த சுடிதாரும் அதே அமர்ந்த நீல நிறத்தில் சாலும் அணிந்து கொண்டு தேவதையின் அழகோடு வீட்டிற்குள் நுழைந்த நிகிதாவை பார்வையால் அளவிட்டனர் அமிர்தராஜின் தாயார் எமிலியும் மனைவி லிசாவும். லிசாவின் கையில் இருந்த அவளது மகன் ஜான்சன் அவள் கைகளில் அடங்காமல் துறுதுறுப்புடன் திமிறிக் கொண்டு இருந்தான். குழந்தையின்

சுட்டித்தனத்தில் மற்ற அனைவரையும் ஏறெடுத்தும் பாராமல் நேராக லிசாவிடம் சென்று ஜான்சனைத் தூக்கி முத்தமிட்டாள் நிகிதா.

''ஏன்டா செல்லம் அம்மாவை சிரமப்படுத்தறே? உனக்கு என்ன வேணும்னு சொல்லு. அக்கா வாங்கித் தரேன். என்கிட்டச் சொல்லுவியா... ம்...'' கொஞ்சிக்கொண்டே அவனைக் கையில் தூக்கிக் கொண்டு தன் அறைக்குள் சென்ற நிகிதாவைப் பார்த்தவுடன் மற்ற அனைவருக்கும் மிகவும் பிடித்துப் போனதில் ஆச்சரிய மில்லை.

''அத்தை, அண்ணன் குடும்பத்திற்கேற்ற நல்ல பொண்ணைத்தான் செலக்ட் பண்ணியிருக்கார்'' மாமி யாரின் காதோரம் கிசுகிசுத்தாள் லிசா.

''ஆமாம்மா. நான்கூட சின்னப் பசங்களா முடிவு எடுத்திருக்காங்களே, பொண்ணு எப்படி இருப்பா ளோன்னு கவலைப்பட்டேன். ஆனா பொண்ணு மகா லட்சுமியாட்டம் இருக்கா'' மருமகளின் தொனியிலேயே பதிலளித்தாள் எமிலி.

வேகமாக அறைக்குள் நுழைந்த பர்வதத்தைப் பார்த்த நிகிதாவின் புருவங்கள் வியப்பினால் மேல் நோக்கிச் சென்றது.

''எந்தக் கோட்டையைப் பிடிக்கறதுக்கும்மா இத்தனை அவசரம்?''

''ஆமாம். இப்ப நான்தான் அவசரப்பட்டுக்கிட்டு இருக்கிறேனாக்கும்? எல்லாம் உங்க அப்பா செய்ற



வேலைதான் நிகிதா. அவருக்குத்தான் அவசரம் எல்லாத்திலேயும்.''

''இப்ப எதுக்கும்மா அப்பாவைத் திட்டறீங்க? ஆமா, வெளியில வந்திருக்கிறவங்க யாரும்மா? அப்பாவோட பிரெண்ட்ஸ் யாராவது பேமிலியோட வந்திருக்காங் களா?''

''அப்பாவோட பிரண்ட்ஸ் இல்லடி.''

''அப்புறம் நம்ம ரிலேடிவ்ஸா? ஆனா இவங்க யாரையும் நான் பார்த்ததில்லையே?''

''என்னை முழுசா சொல்லவிடு நிகிதா. அவங்க உன்னைப் பெண்பார்க்க வந்திருக்கிறாங்க.''

''வாட்.! என்னைக் கேட்காம உங்களை யாரும்மா என் கல்யாணத்தைப் பத்தி முடிவு பண்ணச் சொன்னது?'' கோபத்துடன் வெடித்தாள் நிகிதா.

''நான் ஒண்ணும் இவங்களை வரச்சொல்லலை நிகிதா. இவங்க இன்னிக்கு வர்றதுகூட எனக்குத் தெரியாது. அப்பா ஆபீஸில் இருந்து வந்தவுடன் தான் எனக்கே இவங்க வரப்போற விசயமே தெரியும். அதான் உனக்குப் போன் கூடப் பண்ண முடியலே.''

''இவ்வளவு அவசரமா இவங்க வந்து என்னைப் பார்க்க வேண்டிய அவசியம் என்னம்மா? நான் இப்ப கல்யாணம் பண்ணிக்கிற மனநிலைல இல்லம்மா'' தாயிடம் கூறிய நிகிதாவின் மனதில் ஒரு நொடி தீபனின் முகம் வந்து சென்றது. இனி அவனைப் பார்க்க முடியுமா என்று அவள் உள்ளம் ஏங்கத் துவங்கியது.

''இல்லம்மா. அப்படி அவசரப்பட்டு வார்த்தையை விடாதே நிகிதா. வந்திருக்கும் இடம் நம்ம தகுதிக்கு மீறிய இடம் போலத் தெரியுது. மாப்பிள்ளை மிகப் பெரிய கோடீஸ்வரராம். பெங்களூரிலும், சென்னை யிலுமா நாலஞ்சு கம்பெனியே சொந்தமா இருக்குதாம்.''

''அதுக்காக என்னை என்னம்மா பண்ணச் சொல் றீங்க? வந்திருக்கிறவங்க காலில் போய் என்னை விழச் சொல்றீங்களா? நெவர்...''

''இப்ப வெளியில உட்கார்ந்திருக்கிறவங்க மாப்பிள் ளையின் பிரண்டோட அம்மாவும், மனைவியும், அவங் களுக்குத் தெரிஞ்சவங்களும் தான்டி. மாப்பிள்ளை இன்னும் வரலை. எனக்கும் கூட இந்த இடம் நல்ல இடம்னுதான் தோணுது. ஆனா, ரொம்ப அந்நியத்தில் உன்னைக் கொடுக்கணுமான்னு தான் யோசனையா இருக்கு.''

''என்னம்மா நீ? என்னவோ கல்யாணமே முடிவு ஆயிட்ட மாதிரி பேசிட்டிருக்க. பொண்ணுதான் பார்க்க வந்து இருக்காங்க.''

''அதுவும் சரிதான் நிகிதா. நீ முதல்ல அந்தக் குட்டியை கீழ விட்டுட்டு போய் ஏதாவது நல்ல சேலையா எடுத்துக் கட்டிட்டு ரெடியாகு. நித்யா இங்க இருந்தாலாவது உனக்கு ஒத்தாசையா இருப்பா. நான் அவங்களையெல்லாம் வெளியில உட்கார சொல்லிட்டு இங்க வந்து இருக்க முடியாது'' கவலையுடன் பேசிய தாயைப் பார்த்துப் புன்னகைத்தாள் நிகிதா.



''ஏம்மா, தலை சீவி பூ வைச்சு, சேலை கட்டுறது என்ன பெரிய வேலையா? இதுக்குப் போயி இவ்வளவு கவலைப்படறீங்க?''

''அதுக்கில்லடி. நீ இப்ப பொண்ணு இல்லையா?''

''ஆமா. இப்ப பொண்ணு. இதுக்கு முன்னாடி பையனா இருந்தேனா? டயலாக்கெல்லாம் பேசி என் பிரஷரை ஏத்திவிடாதீங்கம்மா. போய் உங்களுக்கு ஏதாவது வேலை இருந்தா பாருங்க. என்னை நான் பார்த்துக் கொள்வேன்'' தீர்மானமாய் பேசிய மகளைப் பார்த்த பார்வதத்தின் கண்கள் கலங்கின.

பெண்களைப் பெற்ற பெற்றோர் அனைவரும் எதிர்கொள்ள வேண்டிய தருணம் இது. அனைவரும் எதிர்கொள்ள தயங்கும் தருணமும் இதுதான். பெற்று அருமையாக வளர்த்த மகளுக்கும் பெற்றவர்களுக்குமே சம்பந்தம் இல்லை என்று கூறும் சம்பிரதாயம் மிகக் கொடுமையான ஒன்று.

ஆனால் அனைத்தையும் தாங்கி தன் பெண்ணையும் நல்லவிதமாக வாழவைப்பதில்தான் ஒவ்வொரு பெற்ற வரின் பெருமையும் அடங்கியிருக்கின்றது. பார்வதமும் அருணாச்சலமும் அதற்கு விதிவிலக்கல்ல. கண்களைத் துடைத்துக்கொண்ட பார்வதம் சிரித்த முகத்துடன் ஹாலுக்கு விரைந்தாள்.

தாய் வெளியேறிய உடன் கதவை அடைத்த நிகிதா விற்கு தன்னை அறியாமல் அழுகை வந்தது. தீபனின் முகம் காரணமில்லாமல் அவள் முன் வலம் வரத்

துவங்கியது. தன்னை அடக்கும் வகையறியாமல் கண்ணீர் வடித்தாள் நிகிதா.

'ச்சே... என்ன இது? காரணமில்லாமல் அவனை ஏன் நான் நினைக்கிறேன்? அவன் யாரோ நான் யாரோ? ஒரு நாள் பார்த்தவுடன் அவன் எனக்கு உரியவனா ஆகி விடுவானா? அப்படியெல்லாம் கனவில்தான் நடக்கும்'' தலையை சிலுப்பிக் கொண்டாள் நிகிதா.

'ஆனால் இன்னும் கொஞ்ச நாட்கள் பொறுமையா தேடினால் அவனை பார்க்க முடியாமலா போய்விடும்?''

'பார்த்து...? பார்த்தால் மட்டும் என்ன நடந்துவிடப் போகிறது? அவன்தான் வீரபாண்டிய கட்டபொம்மன் மாதிரி வசனமெல்லாம் பேசிவிட்டுப் போனானே? என்மேல் கோபம் இல்லாமலா இருப்பான்?'

பலவிதமான சிந்தனைகள் மனதில் ஓடினாலும் தாயின் சொல்லைத் தட்டாமல் தன்னை அலங்கரித்துக் கொள்ளத் தொடங்கினாள் நிகிதா.

''நிகிதா... ரெடியாகிட்டியா? மாப்பிள்ளையும் வந்துவிட்டார் நிகிதா'' கேட்டுக் கொண்டே மகளின் அறைக்குள் நுழைந்த பார்வதம் ஒரு நொடி சிலையாக நின்றுவிட்டாள்... வாடாமல்லிக் கலரில் செல்ப் டிசைனில் இரண்டு பக்கமும் சன்னமான பார்டர் கொண்ட பட்டுச் சேலை உடுத்தி, கழுத்தில் வெண்ணிணு கற்கள் கொண்ட சிறிய அட்டிகையும் அதனை எடுத்து மார்பு வரை நீண்ட டாலர் செயினும், காதுகளில் சற்று அகலமான குடை ஜிமிக்கியும், கைகளில் வெள்ளையும் சிவப்புமாக கற்கள் பதித்த வளையல்



களும் அணிந்து கொண்டு பேரழகு பொங்க நின்று கொண்டிருந்தாள் நிகிதா. இடைவரை நீண்டு தொங்கிய பின்னலில் தாய் வாங்கி வைத்திருந்த மல்லிகைச் சரத்தினை தளர்வாக சூடியிருந்த விதம் அவள் அழகுக்கு மேலும் அழகு சேர்த்தது. சந்தன சிலையாய் நின்றிருந்த மகளை கைகளால் திருஷ்டி சுற்றினாள் பார்வதம்.

''என்னம்மா, இந்த அலங்காரம் போதுமா?''

''இது போதும்டி என் தங்கக் கட்டி. இதுக்கே இந்த உலகத்தில ஈடு சொல்ல யாருமில்ல. இதுக்கு மேல நீ அலங்காரம் செஞ்சுகிட்டின்னா உலகம் தலைகீழா மாறிடுமே!'' பெருமையுடன் மகளைப் பார்த்தாள் பார்வதம்.



## 17

தாயுடன் மெதுவாக ஹாலுக்குள் நுழைந்த நிகிதா குனிந்த தலையை நிமிர்த்தாமல் மெதுவாக அனைவருக்கும் கரம் குவித்து வணக்கம் செலுத்தினாள்.

''வணக்கமெல்லாம் வேண்டாம்மா. உன்னோட அன்பு இருந்தால் அது மட்டும் போதும். இங்க வந்து என் பக்கத்துல சோபாவுல உட்காரும்மா'' அன்புடன் அழைத்த எமிலியின் அருகில் சென்று அமர்ந்தாள் நிகிதா.

''கொஞ்சம் நிமிர்ந்து எங்க அண்ணனைப் பாருங்க நிகிதா. அவரும் உங்களைத்தான் கண்ணெடுக்காமப் பார்த்துக்கிட்டு இருக்கார்'' கேலியாக கூறி சிரித்தாள் லிசா.

''சும்மாவா லிசா. இவன்தான் நிகிதாவை பார்த்த வுடனே சரண்டர் ஆகிட்டானே'' லிசாவைத் தொடர்ந்து கூறிய ராஜனின் மொழிகளைக் கேட்ட நிகிதாவிற்கு தூக்கி வாரிப் போட்டது.

'இது... இந்தக் குரல் எங்கோ கேட்டது போல் இருக்கிறதே!' அவசரமாக நிமிர்ந்து ராஜனைப் பார்த்த நிகிதாவின் கண்கள் திகைப்பில் ஆழ்ந்தது.

'இது நிஜமா! இது அவனோட பிரண்ட் ஆச்சே. அப்படின்னா... அப்படின்னா...' வேகமாக நிமிர்ந்த நிகிதாவின் பார்வை அவசரமாக ஹாலைச் சுற்றி வலம் வந்து தீபனின் முகத்தில் நிலைத்து திகைத்தது.

'ஆமாம், அவனேதான்! தீபன்தான்! என்னைத் தேடி என் தீபன் வந்துவிட்டான்! என் அன்பின் சக்தியை உணர்ந்த அவனே என்னைச் சேர வந்துவிட்டான்! என்னை தன்னுடையவளாக்கிக் கொள்ள வந்துவிட் டான்!' நிகிதாவின் நெஞ்சம் ஆனந்தத்தில் கூத்தாடத் துவங்கியது.

''நான் நிகிதாவுடன் கொஞ்சம் தனியாகப் பேசலாமா சார்?'' அருணாச்சலத்திடம் ஆழ்ந்த குரலில் கேட்ட தீபனை மறுபடியும் தலைநிமிர்ந்து பார்த்தாள் நிகிதா. அவன் பார்வையுடன் தன் பார்வையை கலக்கவிட்ட தீபனின் புருவம் மேலேறி இறங்கியது.



''தாராளமாய் போய் பேசிட்டு வாங்க'' வாயெல்லாம் பல்லாக ஆனந்தமாகச் சொன்னார் அருணாச்சலம். இப்படி தனியாக பேசினால் மாப்பிள்ளையைப் பற்றி நிகிதா ஒரு முடிவுக்கு வரமுடியும் என்ற ஆனந்தம் அவருக்கு.

அறையில் தனித்து விடப்பட்ட நிகிதாவும், தீபனும் ஒருவரையொருவர் இமைக்காமல் பார்த்துக் கொண டிருந்தனர்.

''இப்படியே எவ்வளவு நேரம்தான் என்னைப் பார்வையாலேயே எரிப்ப?'' கேலியாக ஒலித்த தீபனின் குரலில் திடுக்கிட்டாள் நிகிதா.

'பார்வையாலேயே எரிக்கிறேனா? நான் ஆசையா தானே பார்த்தேன்!' மனதிற்குள் கேட்டுக்கொண்டாள் அவள்.

''உன்கிட்டத்தான் பேசிக்கிட்டிருக்கேன். நேத்து பீச்சுல அவ்வளவு வாயடிச்சயே. இப்ப மட்டும் ரொம்ப அமைதியான பொண்ணாட்டம் நிக்கிற?''

'உன்னைப் பார்த்ததில் ஆனந்தத்தில் வாயடைச்சுப் போய் நிக்கிறேன்டா. உனக்குப் புரியலையா?''

''நீ எப்படி வேணா நின்னுக்க. எனக்கு அதைப்பத்தி எல்லாம் கவலை இல்லை. ஆனா இப்ப உங்க அப்பா உன்னோட சம்மதத்தைக் கேட்பாரு. அப்ப நீ என்னை கல்யாணம் செஞ்சுக்க சம்மதம்னு சொல்லணும். தெரியுதா?''

அதட்டிய தீபனை வியப்புடன் பார்த்தாள் நிகிதா.

'என்ன பார்க்கிற? உன் தங்கை நித்யா இப்ப ராயல் சேலன்ஜ் டியூசன் சென்டரில்தானே இருப்பா? நான் கரெக்டா சொல்றேனா?''

அவனுடைய வார்த்தைகளின் அர்த்தம் புரிந்த நிகிதா திடுக்கிட்டாள்.

''நீங்க என்னை மிரட்டிப் பார்க்கறீங்களா?'' சீறினாள் நிகிதா.

''மிரட்டிப் பார்க்கவெல்லாம் இல்லை. நேரடியாவே மிரட்டித்தான் சொல்கிறேன். என்னை கல்யாணம் பண்ண சம்மதம்னு உங்க அப்பாகிட்ட சொல்லணும்.''

''அப்படிச் சொல்லலேன்னா...?'' பெண் புலியாய் சிலிர்த்த நிகிதாவை அமைதியாகப் பார்த்தான் தீபன்.

''ம்ம்ம்... சொல்லலேன்னா? அதனால எனக்கு ஒரு நஷ்டமும் ஏற்படப் போவதில்ல... ஆனா உங்க மொத்த குடும்பத்தோட நிம்மதியும் போய்விடும். பரவாயில் லையா?''

''என்ன மிஸ்டர் ஓவரா பேசறீங்க? உங்களோட இந்த அடாவடித்தனத்தை எல்லாம் வேற யார்கிட்டயாவது போய் வெச்சுக்கங்க.''

''வேற யாரையும் வெச்சுக்கிற எண்ணமெல்லாம் எனக்கு கிடையாதும்மா. எனக்கு நீ மட்டும் தான் வேண்டும்.''

தீபன் கூறிய வார்த்தைகளைக் கேட்ட நிகிதாவின் மேல் பூமழை பெய்தது போல இருந்தது நிகிதாவிற்கு. 'இவன் தன்னை காதலிக்கிறான்' என்ற எண்ணமே



அவன் மிரட்டலுக்கு அவளை அடிபணியச் செய்தது. தீபனின் இந்த மிரட்டல் விளையாட்டை ஏனோ அவள் மனம் விரும்பத் தொடங்கியது. அவனை பிடிக்காதவள் போல நடித்து அவன் மனதில் இடம் பிடிக்கும் விளையாட்டை நிகிதாவும் ஆட விரும்பினாள். எனவே அவள் பயந்தவள் போல தீபனின் முகம் நோக்கினாள்.

''என்ன... நான் சொல்வதன் அர்த்தம் உனக்குப் புரிகின்றதா?'' மிரட்டலாகக் கேட்ட தீபனின் குரலில் மனதிற்குள் சிரித்துக் கொண்டாள் நிகிதா.

''புரிகிறது...''

''என்ன புரியுது?''

''நீங்க சொல்கிறபடி நடந்தால் நல்லதுன்னு புரியுது.''

''அப்ப நான் சொல்கிறபடியெல்லாம் நடப்பாயா?'' தீபனின் ஆழ்ந்த குரல் காதோரமாய் கேட்பதை உணர்ந்து நிமிர்வதற்குள் அவனது அணைப்பில் இருந்தாள் நிகிதா. தன் கைகளால் நிகிதாவின் இடையை வளைத்திருந்த தீபன் அவளைத் தன் உயிரில் கலந்துவிடும் வேட்கை யோடு இறுக்கமாக அணைத்துக் கொண்டான்.

தீபனின் இதழ்கள் தாபத்தோடு நிகிதாவின் தோள் வளைவில் பதிந்து மீள முடியாமல் அங்கேயே நிலைத்தது. நிகிதாவின் மேலிருந்து எழுந்த சுகந்தமான நறுமணமும், அவள் தலையில் சூடி இருந்த மல்லிகை யின் மணமும் தீபனை அவளை விட்டு விலகமுடியாமல் கிறங்க வைத்தன. நிகிதாவோ முதன்முறையாக ஒரு ஆணின் தொடுகையில், கூச்சத்துடன் தன்னுள்

ஒடுங்கிப் போனாள். அவள் வெட்கத்துடன் அவனது மார்பில் கைவைத்து விலக மனமில்லாமல் மெதுவாக தீபனை விலக்கி நிறுத்த முனைந்தாள். தாங்க முடியாத தாபத்தோடு அவளை அணைத்திருந்து தீபனுக்கு அவளின் இந்த விலகல் கோபத்தை உண்டாக்கியது. அவளை விட்டு விலகமுடியாமல் தவித்த தன் ஆண்மையைக் கட்டுப்படுத்த முடியாத தீபன் நிகிதாவை கோபமாக மேலும் தன்னுள் இறுக்கிக் கொண்டான்.

''என்னடி திமிரா? என்னை விலக்கி விட இனி உனக்கு உரிமை கிடையாது'' கோபமாகக் கூறிய தீபனை நிமிர்ந்து பார்க்க முடியாமல் மேலும் வெட்கத்துடன் குனிந்து கொண்டாள் நிகிதா.

''இன்னும் உங்களுக்கு எந்த உரிமையும் வரவில்லை. இப்போதே அதிகாரம் தூள் பறக்குதே.'' லேசான குரலில் முணுமுணுத்த நிகிதாவின் வார்த்தைகள் தீபனின் வெறியை மேலும் கூட்டியது.

''அப்படியா! இன்னும் எனக்கு உரிமை வரவில்லையா? ஓகே... அந்த உரிமையை கூடிய சீக்கிரமே கிடைக்க வைக்கிறேன். அப்புறம் பாருடி... உன்னை... உன்னை என்ன பண்ணுகிறேன் என்று பாரு'' அவளை விடுவித்த தீபன் திரும்பியும் பாராமல் வேகமாக ஹாலுக்குச் சென்று விட்டான்.

நிகிதாவோ உரிமை வந்த பின்பு அவன் என்னவெல்லாம் செய்வான் என்ற கற்பனை தந்த வெட்கத்துடன் கால்கள் தள்ளாட மயக்கத்துடன் கட்டிலில் அமர்ந்து விட்டாள்.



''என்னம்மா இங்கேயே உட்கார்ந்து விட்ட? அங்கே எல்லாரும் உன்னோட சம்மதத்தைக் கேட்க ஆவலா காத்திருக்கிறாங்கம்மா'' தந்தையின் குரலில் தன் நிலைக்கு வந்த நிகிதா அவசரமாக முகத்தைச் சீராக வைத்துக் கொண்டாள்.

''என்... என்னப்பா கேட்டீங்க?''

''இல்லம்மா. உனக்கு மாப்பிள்ளையை பிடிச்சு இருக்குதா? உன் மனசில இருக்கிறத தாராளமா அப்பாகிட்ட சொல்லுடா. எந்த கம்பெல்சனும் இல்லை. இவரை பிடிக்கலைன்னா வேற மாப்பிள்ளையை அப்பா பார்த்துவிடுவேன் கண்ணம்மா. நீ தயங்காமல் உன்னோட உண்மையான கருத்தைச் சொல்லு'' மகள் தலையை பாசத்துடன் தடவிக் கொண்டே கேட்டார் அருணாச்சலம்.

''எனக்கு பிடிச்சிருக்குப்பா.''

''உண்மையாத்தானே சொல்ற கண்ணு?''

''உண்மைதான்ப்பா. எனக்கு தீபனை பிடிச்சிருக்கு.''

நிம்மதியுடன் மாப்பிள்ளை வீட்டாரை நோக்கி விரைந்தார் அருணாச்சலம்.

## 18

நிகிதா சம்மதம் தெரிவித்த கையோடு அவளை அன்றே தனக்காக நிச்சயம் செய்துகொண்டான் தீபன்.

தீபனின் பார்வையை உணர்ந்த ராஜ் வேகமாக மனைவியோடு காருக்கு விரைந்தான். திரும்பி வந்தவனின் கைகளில் வெள்ளித்தட்டும், பணமும், நகைகளும் இருந்தன. லிசாவின் கைகளிலோ பட்டுச் சேலை, பூமாலை மற்றும் பெண்ணிற்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் அடங்கிய கிப்ட் பாக்ஸ் என நிச்சயத்திற்கு தேவையான அனைத்தும் இருந்தது. தீபனின் இந்த முறையான செயல்பாட்டை எதிர்பார்க்காத எமிலிகூட அவனைப்பற்றி பெருமையுடன் எண்ணி பெருமிதம் அடைந்தாள்.

''எனக்கு அப்பா, அம்மா கிடையாது மாமா. ஏதோ எனக்குத் தோணின அளவில் நிச்சயதார்த்தத்துக்கு வேணும்னு நினைச்சதை வாங்கி வந்தேன். குறை இருந்தால் மன்னித்து கொள்ளுங்கள்'' முதன்முறையாக தீபன் தன்னை உறவு முறையில் அழைத்ததிலேயே நெகிழ்ந்து விட்டார் அருணாச்சலம்.

''அதனால என்ன மாப்பிள்ளை. நமக்குள் குறை நிறைன்னு எதுவும் கிடையாது. உங்களுக்கு என்ன தோணுதோ அதை நீங்க தாராளமாய் செய்யுங்க. உங்களுக்கும் இனிமேல் நாங்க அப்பா, அம்மாதான் மாப்பிள்ளை. இனி யாரும் இல்லைன்ற வார்த்தை உங்க வாயில் இருந்து வரக்கூடாது'' கண்கலங்க உரிமையுடன் கூறினாள் பார்வதம். மனைவியின் பேச்சைக் கண்கள் கலங்க ஆமோதித்தார் அருணாச்சலம்.

தாய் தகப்பனில்லாத தீபனைத் தன் சொந்த மகனுக்கும் மேலாக எண்ணி பாசம் காட்டி வந்த எமிலிக்கு



அவனை உரிய இடத்தில் சேர்த்துவிட்ட நிம்மதி தோன்றியது. அவள் மகிழ்ச்சியோடு பார்வதத்தின் கைகளைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

''என்னம்மா இது?'' பதறிய பார்வதத்தின் தோள்களை உரிமையுடன் அணைத்துக் கொண்டாள் எமிலி.

''தீபனும் எனக்கு இன்னொரு மகன்தாம்மா. ஆனா அவனை எங்கள் கூடவே இருக்கச் சொல்லியும் பிடிவாதமா பெங்களூரை விட்டு வரமாட்டேன்னுட்டான். இங்க சென்னைக்கு வந்தாலும் வீட்டில் வந்து தங்காமல் ஹோட்டலில்தான் தங்குவான். வீட்டு சூழ்நிலைக்கு மனசு ஏங்கக்கூடாதுன்னுதான் அவன் அப்படி நடந்துக்கிறான்னு புரிஞ்சுதான் நானும் அவனோட போக்கிலேயே விட்டு விடுவேன். ஆனா இப்ப அவனுக்கு அவன் விரும்பின குடும்ப சூழ்நிலை ஆண்டவன் கிருபையால அருமையாக அமைஞ்சிருக்கு. உங்களுக்கும் உங்க பொண்ணுக்கும் கோடானு கோடி நன்றிம்மா'' கண்களைத் துடைத்துக் கொண்டாள் எமிலி.

எமிலியின் வார்த்தைகளை தன் அறையில் இருந்து கேட்டுக் கொண்டிருந்த நிகிதாவுக்கு தீபனின் மேல் மட்டற்ற பாசம் பெருகியது. இனிமேல் தீபனுக்குத் தாய்க்குத் தாயாகவும், தாரமாகவும் இருந்து அவனது மனம் கோணாமல் நடந்து கொள்ள வேண்டும் என்று மனதிற்குள் உறுதி எடுத்துக் கொண்டாள் நிகிதா.

''சரிம்மா பார்வதம். இன்னும் இரண்டு தாம்பாளம் கொடுத்தேன்னா எல்லாத்தையும் வரிசையா அடுக்கி

வைச்சிடலாம். நல்ல நேரம் போவதற்குள் தட்டை மாற்றிக் கொண்டால் நல்லது. ராஜ் நீயும் லிசாவும் பர்வதத்துக்கு உதவி பண்ணுங்க. ஏம்பா அருணாச்சலம் வீட்டுல டேப்ரிக்கார்டர் இருந்தா சாமி பாட்டாவது, இல்லேன்னா ஏதாவது மங்கல வாத்தியக் கேசட்டாவது போட்டு ஓடவிடு'' வீட்டு பெரிய மனுஷி தோரணை யில் எல்லோரையும் விரட்டி வேலை ஒடிக் கொண்டிருந் தாள் எமிலி.

அவளது குரலுக்கு அனைவரும் அடிபணிந்து ஆளுக் கொரு வேலையாக மளமளவென செய்து முடித்தனர். கையும் காலும் ஓடாமல் சிலையாக நின்று முழித்துக் கொண்டு இருந்தவர் அருணாச்சலம் மட்டுமே. அவ ருக்கு பெண்ணின் திருமணம் இவ்வளவு அருகாமையில் வந்து விட்ட கவலையில் எதிலுமே உள்ளம் ஒட்ட வில்லை. அவர் நிலை உணர்ந்து அருணாச்சலத்தின் அருகில் வந்து நின்ற தீபன் அவர் கையைப் பிடித்துக் கொண்டான். மருமகனின் தொடுகையில் தன்னுணர்வு வந்த அருணாச்சலத்தின் கண்களில் கண்ணீர் திரண்டது.

''நீங்க வீணா எதுக்கும் டென்ஷன் ஆக வேண்டாம் மாமா. உங்க மகனுக்கு மகனாக இருந்து நானே எல்லாவற்றையும் பார்த்துக் கொள்கிறேன். நீங்க மனமார மணவறையில் நின்று ஆசீர்வதித்தால் போதும்.''

''எனக்கு நீங்க மருமகனா வாய்ச்சது நான் செய்த புண் ணியம் மாப்பிள்ளை. ஆனால், என் கவலையெல்லாம் இவ்வளவு சீக்கிரத்தில் நிகிதாவைப் பிரியணுமேன்றது தான்.''



''நாங்க எங்க மாமா போகப்போகிறோம். இதோ இருக்கும் பெங்களூருக்குத்தானே. எங்க கல்யாணத் துக்கு முன்னால் உங்களுக்கு ட்ரான்ஸ்பர் வாங்கிக் கொடுத்து விடுகிறேன். நீங்களும் அங்கேயே வந்து விடுங்கள். எல்லோரும் ஒன்றாக இருந்தால் எனக்கும் சந்தோஷம்.''

''அதெல்லாம் வேண்டாம் மாப்பிள்ளை. நித்யாவுக்கு இன்னும் படிப்பு முடியவில்லை. அவளையும் நல்ல படியா வளர்த்து ஆளாக்கினால் தானே என்னால் ஒரு இடத்தில் நிம்மதியா இருக்க முடியும்? அதுவரை நாங்கள் உங்கள் வீட்டில் வந்து இருப்பது சரிவராது மாப்பிள்ளை.''

''நித்யா எனக்கும் உடன் பிறந்தவள் போல் தானே மாமா? இதில் தப்பென்ன இருக்கு.''

''தப்புன்னு ஒண்ணும் இல்லை மாப்பிள்ளை. நம்ம நிலைமைன்னு ஒண்ணு இருக்கில்ல.''

''உங்களுக்கு எது சரின்னு படுதோ அதுப்படி செய்ங்க மாமா. ஆனா நிகிதா என்னிக்குமே முதல்ல உங்களுக்கு மகள்தான். அதற்கு அடுத்த உரிமைதான் எனக்கு.''

''ஏங்க நீங்க பாட்டுக்கு சும்மா நின்னுக்கிட்டு இருந்தால் எப்படி? நைட் சாப்பாடு நம்ம பொறுப்பு இல்லையா? ஏதாவது நல்ல ஹோட்டல்ல சாப்பாட் டுக்கு ஆர்டர் சொல்லுங்க'' கணவரை விரட்டினாள் பர்வதம்.

''அத்தை, மாமாவை ஏன் தொல்லைப் பண்றீங்க? ராஜ் சாப்பாடு அரேன்ஜ் பண்ணு.''

''அதுக்கில்லை தம்பி. நிச்சயதார்த்த சாப்பாடு பொண்ணு வீட்டுக்காரங்கதான் போடணும். அதுதான் முறை'' மேலே பேசமுடியாமல் இழுத்தாள் பார்வதம்.

''இனிமேல் நமக்குள் முறை கிறை என்கிற பேச்சுக்கே இடமில்லை அத்தை. நாம எல்லோரும் ஒரே பேமிலி தான் தெரியுதா. என்னை உங்க மருமகனா மட்டும் பார்க்காமல் மகனாகவும் ஏற்றுக் கொள்ள வேண்டும் அத்தை. இப்பத்தான் மாமாவிடமும் இதை சொல்லிட்டிருந்தேன்'' கண்டிப்புடன் பேசிய மருமகனிடம் பாசத்துடன் தலையசைத்தாள் பார்வதம்.

தீபனின் பணத்தையும், அந்தஸ்தையும் பார்த்த பார்வதத்திற்கு முதலில் சந்தோஷத்திற்குப் பதிலாக பயமே ஏற்பட்டது. இவ்வளவு பெரிய இடத்தில் இருக்கும் மாப்பிள்ளை எதற்காக தங்கள் மகளை பெண் கேட்டு வரவேண்டும் என்று குழம்பினாள் அவள்.

நிகிதாவின் அழகும், திறமையும் யாரையும் விரும்ப வைக்கும் என்ற உண்மையை அறிந்திருந்தாலும், இவ்வளவு பெரிய இடத்தில் தன் மகள் சந்தோஷமாகவும், நிம்மதியாகவும் வாழ முடியுமா என்ற சந்தேகம் பார்வதத்தின் அடி மனதை அரித்துக் கொண்டிருந்தது.

இப்பொழுது தீபன் பேசிய பேச்சுக்கள் அனைத்தும் இவளது சந்தேகத்தை அடியோடு அழித்து விட்டது. நிம்மதியான மனநிலையுடனும், ஆனந்தத்துடனும் மகளின் திருமணத்தை மனமார ஏற்றுக் கொண்டாள் பார்வதம்.



# 19

தீபன் வாங்கி வந்த பட்டுச்சேலையும், நகையும், சீர்வரிசைகளும் அழகாக தட்டுக்களில் அடுக்கி வைக்கப்பட்டது. பெற்றவர்கள் ஸ்தானத்தில் அமிர்தராஜும், லிசாவும் தீபன் சார்பிலும், பார்வதம், அருணாச்சலம் இருவரும் நிகிதாவின் சார்பிலும் நின்று நிச்சயத் தாம்பூலத் தட்டை மாற்றிக் கொண்டனர். தீபனின் விழியசைவில் லிசா நிகிதாவிற்கு பட்டுப் புடவை கட்டி, நகைகளை அணிவித்து ஹாலுக்கு அழைத்து வந்து விட்டாள். தங்கமும், வைரமுமாய் தேவதையாய் ஜொலித்த நிகிதாவின் கரம் பற்றி நிச்சயதார்த்த மோதிரத்தை அணிவித்த தீபன், தன் கையை நீட்டி அவளையும் தனக்கு மோதிரம் அணிவிக்கச் செய்தான். தற்செயலாய் மோதிரத்தைப் பார்த்த நிகிதா ஆச்சரியத்தில் மெய் மறந்தாள். நிகிதாவிற்கு 'டி' என்ற தன் பெயரின் முதல் எழுத்தையும், தீபனுக்கு 'என்' என்ற நிகிதாவின் முதல் எழுத்தையும் சிறு வைரக் கற்களால் பொறித்த மோதிரங்களை வாங்கி அணிவித்திருந்தான் தீபன்.

''என்ன யோசனை? இனிமேல் நீ என்னோட உரிமை என்று காட்டத்தான் இந்த மோதிரம்.''

''ம்ஹூம்... அப்ப நீங்க..?''

''நான் என்னிக்குமே உனக்கு மட்டும்தான் உரிமை ஆனவன். என்னை நீ என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். எனக்கு ஓகே தான்'' விஷமக் குரலில் கூறிய தீபனைப் பார்க்க முடியாமல் தலை குனிந்தாள் நிகிதா.

'பாவி... எவ்வளவு கொஞ்சினாலும் அசைந்து கொடுக்க மாட்டேன் என்கிறாளே. உடம்பு பூராவும் திமிர்தான்' மனதிற்குள் குமைந்தான் தீபன்.

'இவனுக்கு ரொமான்ஸ் பண்ண நடு ஹால்தான் கிடைத்ததா? எல்லோரும் பார்க்கும்படி எப்படியெல்லாம் கொஞ்சுகிறான் ராஸ்கல்' மனதிற்குள் தீபனை ரசித்துக் கொண்டிருந்தாள் நிகிதா.

''சரிப்பா அருணாச்சலம். நிச்சயதார்த்தம் நல்லபடியா முடிஞ்சிருச்சு. கல்யாணத் தேதியை குறிக்க வேண்டாமா?''

''அதெல்லாம் நான் ஏற்கனவே ஐயரிடம் குறித்து வாங்கி விட்டேம்மா'' வேகமாக எமிலியை இடைமறித்தான் தீபன்.

''என்னடா தீபா இது? இவ்வளவு வேகமா இருக்கியே. எப்ப இருந்து நீ இவ்வளவு பொறுப்பானவனா மாறின?''

''உங்க பிள்ளை எப்பவுமே பொறுப்பானவன்தான் அம்மா. உங்களுக்குத்தான் அது தெரியவில்லை.''



''எப்படியோ? நல்லா இருந்தாச் சரி. ஐயர் குறிச்சுக் கொடுத்த தேதிகளை அருணாச்சலத்திடம் கொடு. அவருக்குத் தோதான தேதியில் கல்யாணத்தை வெச்சுக்கலாம்.''

''அதுக்கில்லம்மா. ஐயர் அடுத்த வாரம் புதன் கிழமையே கல்யாணத்தை வைக்கச் சொன்னாரு.''

''என்ன மாப்பிள்ளை இது. ஒரு வாரத்தில் நான் என்ன ஏற்பாடுகள் பண்ண முடியும். பத்திரிகை குடுக்கவே ஒரு வாரம் பத்தாதே.''

''நீங்க ஒரு ஏற்பாடும் செய்ய வேண்டாம் மாமா. நாளைக்கே கேட்டரிங் ஆட்கள் இங்க நம்ம வீட்டுக்கு வந்துடுவாங்க. நீங்க யாரையெல்லாம் பத்திரிகை வெச்சுக் கூப்பிடணுமோ நான் கார் அனுப்பறேன், அதிலேயே போய் கூப்பிட்டுக்கொண்டு வாங்க. கல்யாணத்துக்கு வர்ற கெஸ்ட் எல்லாம் எங்க தங்கணும்னு விரும்புறாங்களோ அங்க ரூம் புக் பண்ணிடுறேன். நீங்க நிம்மதியா இருங்க.''

''சரிங்க தம்பி. மண்டபம் புக் பண்ணினால் தானே பத்திரிகையில் போட முடியும். நம்ம அவசரத்துக்கு மண்டபம் கிடைக்குமா.''

''தீபனுக்கு இல்லாத கல்யாண மண்டபம் சென்னையிலேயே இல்லை அத்தை. ஆனால் நான் ஸ்டார் ஹோட்டலின் மேரேஜ் ஹாலை புக் பண்ணி விட்டேன். அதனால நீங்க கவலைய விடுங்க. நாளை காலை பத்து மணிக்குள்ள கல்யாண இன்விடேசன் எல்லாம் உங்க கைக்கு வந்துவிடும். நீங்களும் அத்தையும் ரெடியா

இருந்தீங்கன்னா டூ டேஸ்ல டிஸ்ட்ரிபியூட் பண்ணிட லாம்..மற்ற எல்லா அரேன்ஜ்மெண்ட்சும் என்னோட பொறுப்பு'' பேசிய மருமகனை வாய் பிளந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள் அருணாச்சலமும், பார்வதமும்.

''எதற்காக இந்த அவசரம்? நான்தான் சம்மதம் சொல்லிட்டேனே? மாறிடுவேன்கிற பயமா?'' கிடைத்த தனிமையில் தீபனைச் சீண்டினாள் நிகிதா.

''நீ மாறினாலும் இனிமேல் என்னை விட்டு நீ எங்கேயும் போக முடியாது. ஆனால் இதற்குக் காரணம் வேறு'' மொட்டை மாடிக்கு தனிமையாக அவளை இழுத்து வந்திருந்த தீபன் அவளை தன் அருகில் அமர்த்திக் கொண்டே கூறினான். அவனை விட்டு சற்று தள்ளி வெளிச்சத்தில் அமர்ந்த நிகிதாவைப் பார்த்த தீபனுக்கு எரிச்சல் தோன்றியது.

''ரொம்பத்தான் திமிர் காட்டறியே நிகிதா? ஆனால் நான் என் திமிரைக் காட்டினேன்னா நீ தாங்கமாட்ட தெரிஞ்சுக்க?''

''அதை நீங்க காட்டும் போது தெரிஞ்சுக்கிறேன். இப்ப நீங்க நான் கேட்டதுக்கு பதிலை சொல்லுங்க.''

''ச்சு... என்ன பதிலைச் சொல்லச் சொல்ற. இதற்கு மேல என்னால தாங்க முடியாதுன்னு சொன்னா நீ என்கூடவே வந்துடப்போறயா...?'' தாபத்துடன் வந்த தீபனின் சொற்களில் முகம் சிவந்தாள் நிகிதா.

''சீச்சி... என்ன பேச்சு இது? என்கிட்டப் போய் இப்படி யெல்லாம் பேசலாமா நீங்க?''



''போடி போ. உன்கிட்ட மட்டும் தான்டி இப்படியெல் லாம் பேச முடியும். வழியில போகிறவள் கிட்ட எல்லாம் போய்ப் பேசச் சொல்கிறாயா?''

''ஏன், போய் வழியில் போகிறவள் கிட்ட பேசி பார்க்க வேண்டியதுதானே?''

''நான் ஏன்டி கண்டவள் கிட்ட போய் பேசணும். எனக்குத்தான் தேவதையாட்டம் நீ பொண்டாட்டியாய்க் கிடைச்சிருக்கயே?'' கூறிய தீபன் நிகிதாவின் கரம்பற்றி இழுத்து தன் மடியில் சாய்த்துக் கொண்டான். மடியில் கண்மூடிக் கிடந்த நிகிதாவின் இதழ்களை நோக்கிக் குனிந்த தீபனின் இதழ்கள் அவளைத் தீண்டாமல் நின்றுவிட்டது. தன் முகம் பாராமல் கண்மூடிக் கிடந்த நிகிதாவின் தோற்றம் அவனது ஆண்மைக்கு சவால் விட்டது. அவசரமாக தன்னை விலக்கி உட்கார வைத்த தீபனின் செயலுக்குக் காரணம் புரியாமல் திகைத்தாள் நிகிதா.

''என்ன...?'' வெட்கத்தால் அவன் முகம் பார்க்காமல் வேறு திசை நோக்கி வினவினாள் நிகிதா.

''நான் தொட்டால்தான் உனக்கு வாந்தி வரும். ஆனால் என் முகத்தைப் பார்க்கக் கூடவா உனக்குப் பிடிக்கவில்லை?'' குத்தலாக வெளிவந்தது தீபனின் குரல்.

''என்ன சொல்றீங்க?'' புரியாமல் அவன் முகம் ஏறிட்டாள் நிகிதா.

''என்னடி மறந்ததுபோல நடிக்கிற? அன்னிக்கு பீச்சில நான் தொட்டதுக்கு வாந்தி எடுத்தவள்தானே நீ?''

தீபனின் ஆண்மை அவமானத்தில் குலுங்கியது. அப்படி நடந்து கொண்ட ஒருத்தியை எண்ணி தன் மனம் பைத்தியமாக அலைவதை தடுக்க முடியாத வேதனை யில் குமுறினான் தீபன்.

''ஐயோ... அது அதற்கில்லை... நீங்க தவறா...''

''ஏன்டி நான் தவறாகவா நடந்துக்கிட்டேன்? நான் எந்தப் பெண்ணிடத்திலும் தவறா நடந்ததா சரித்திரமே கிடையாது தெரியுமா? நிகிதா மட்டும் நெருப்பில்லடி. தீபனும் நெருப்புதான். என்னை யாரையும் நெருங்க விடாமல் இருந்ததில் நானும் கூட நெருப்புதான்'' பேசிய நிகிதாவின் தோள்களைப் பற்றி உலுக்கினான் தீபன்.

நிகிதாவிற்கு அந்த நொடிதான் தனது தவறு புரிந்தது. தன்னுடைய காதலை தீபனுக்கு உணர்த்தாத தவறினை அவள் உணர்ந்து கொண்டாள்.

ஆனால் உணர்ந்து கொண்ட அந்த நிலையில் தன் அன்பினை அவனுக்கு தெரிவித்தால் அது தீபனை மேலும் அவள் மேல் சந்தேகம் கொள்ள வைக்கும் என்று அவளுக்குத் தோன்றியது. தன்னுடைய மிரட்டல் மற்றும் கோபத்துக்கு பயந்து நிகிதா தன்னை காத லிப்பதாக கூறுகிறாள் என்று தீபன் எண்ணிக்கொண் டால் என்ன செய்வது என்று அஞ்சினாள் நிகிதா. எனவே அவள் பதில் எதுவும் கூறாமல் அமைதியாக தீபனை ஏறிட்டாள்.

''சரிங்க. இப்ப நான் என்னதான் செய்யணும்னு நீங்க நினைக்கிறீங்க?''



''நான் நினைப்பதுபோல எல்லாம் நீ நடந்துக் கிட்டாலும்... போடி'' அவளை தள்ளிவிட்டு வேகமாக கீழே இறங்கிச் சென்றுவிட்டான் தீபன். அதற்கு மேல் அங்கிருந்தால் தன்னை கட்டுப்படுத்த முடியாது என்று எண்ணியவன் உடனே விடைபெற்று சென்று விட்டான்.

தீபன் சென்றவுடன் தன் வீடே தனக்கு அந்நியமாகத் தோன்றுவதை ஆச்சரியத்துடன் உணர்ந்தாள் நிகிதா. தீபன் இன்று மாலைதான் தன் வாழ்வில் வந்தான் என்பதை அவள் மனம் நம்ப மறுத்தது. காலம் காலமாக அவனுடன் வாழ்ந்தது போன்ற ஒரு உணர்வு அவளை ஆட்கொண்டது.

## 20

பலவிதமான சிந்தனைகளுடன் இரவெல்லாம் உறக்கம் வராமல் தவித்த நிவிதா அதிகாலை பொழுதில் தான் உறங்கத் தொடங்கினாள். காதருகில் ஒலித்த செல்போனின் ஒலியில் தூக்கம் கலைந்தவள் எரிச்ச லுடன் செல்போனை எடுத்து காதில் வைத்தாள்.

''ஹலோ பொண்டாட்டி'' மறுமுனையில் கேட்ட தீபனின் குரலில் தூக்கம் கலைந்தோட எழுந்து அமர்ந் தாள் நிகிதா.

''ஹலோ... ஹலோ... என் இன்னும் தூக்கம் விடலையா? இவ்வளவு தூங்குமூஞ்சியா நீ?'' கேலியாக சிரித்தான் தீபன்.

'என்ன மாதிரியான மனிதன் இவன். சுடும் எரிமலையாய் நேற்று கோபத்துடன் போனவன், காலை எழுந்தவுடன் சிரிப்புடன் அவளிடம் பேசுகிறான். அதில் எதுதான் இவனின் இயல்பான குணம்.'

''என்ன நிகிதா? நான் பேசிக்கிட்டே இருக்கேன்... நீ பதில் சொல்லாமல் இருந்தால் என்ன அர்த்தம்?''

''இல்ல என் செல் நம்பர் உங்களுக்கு எப்படித் தெரியும்னு யோசனை பண்ணிக்கிட்டு இருந்தேன்.''

'உன் செல் நம்பர் மட்டும் இல்ல. உங்க ஏரியா கூர்க்கா செல் நம்பர் கூட எனக்குத் தெரியும்.''

''கூர்க்கா நம்பரா.''

''இந்த தீபனை யாருன்னு நினைச்ச? இனி என் அனுமதி இல்லாம ஒரு தெருநாய் கூட உங்க ஏரியாவுக்குள்ள தேவையில்லாம நுழைய முடியாது.''

''இதெல்லாம் உங்களுக்கே ஓவராத் தெரியல.''

''எனக்கு எதுவுமே ஓவர் கிடையாது. நான் நியாயம்னு நினைக்கிறத மட்டும்தான் செய்வேன்.''

''என்னவோ பண்ணிக்கங்க. ஆமா இப்ப எதுக்கு போன் பண்ணுனீங்க?''

''அதுவா, நைட்டெல்லாம் எனக்குத் தூக்கமே இல்லை. நீயாவது நல்லாத் தூங்கினியான்னு கேட்கத்தான் போன் பண்ணினேன்.''



''அதெல்லாம் நல்லாத் தூங்கினேன்.''

''ஏன்டி கும்பகர்ணி. கல்யாணத்தைப் பத்தி எந்த எதிர்பார்ப்புமே உனக்கு நிஜமாகவே இல்லையா?''

''தெரியல...''

''உன்கிட்டப் போய் கேட்டேன் பாரு. என்னைச் சொல்லணும்'' போன் லைன் உடனே கட்டானது.

''ஏன்க்கா பொய் சொன்னே? போன்ல யாரு? நீதான் நைட்டெல்லாம் தூங்காம முழிச்சுக்கிட்டு இருந்தியே அப்புறம் ஏன் தூங்கினேன்னு பொய் சொன்ன? அருகில் அமர்ந்து நிகிதாவின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த நித்யா கோபமாக கேட்டாள்.

அவளுக்கு ஏற்கனவே நிகிதா தீபனை மணக்கச் சம்மதம் சொன்னது சரியல்ல என்ற எண்ணம் உண்டு. இதில் நிகிதா அவளுடைய மனநிலையை தீபனிடம் புரியவைக்க முயற்சி செய்யாமல் மேலும் மேலும் தன் வாழ்க்கையை குழப்பிக் கொள்கிறாளோ என்ற கோபமும், நித்யாவிற்கு தோன்றியது.

''அதுக்கில்லடி. வெட்கம் இல்லாமல் நானும் தூங்கலைன்னு எப்படிச் சொல்றது?'' தயங்கிய அக்காவை முறைத்தாள் நித்யா.

''உன் வெட்கத்தில் இடி விழ. நீ ஏன்க்கா இப்படி இருக்க? உன்னைப் பார்த்தால் படிச்சு ஒரு நல்ல வேலையில் இருக்கிற கெட்டிக்காரப் பொண்ணைப் போலவா இருக்கு. எங்கோ பட்டிக்காட்டில் வளர்ந்த படிக்காத தற்குறி பெண்போல இருக்கு.''

''ஏன்டி, படிச்சுட்டா பொண்ணுங்களுக்கு இருக்கிற இயல்பான குணங்கள் எல்லாம் போய்விடுமா?''

''நான் அப்படிச் சொல்லலைக்கா. இயல்பு வேறு. நாமளே வரவழைச்சுக்கிற கூச்சம் வேறக்கா. நீ மாமாவை கல்யாணம் பண்ணிக்கிறதில எனக்கு இஷ்டமே இல்லை. ஏன்னா அன்னிக்கு பீச்சில அவர் உன்னைப் பார்த்த பார்வை இன்னும் என் கண்ணுக்குள்ள அப்படியே இருக்கு.

ஒருவேளை உன்னைப் பழிவாங்குற எண்ணத்தில் கூட அவர் உன்னைக் கல்யாணம் பண்ற ஐடியாவுல இருக்கலாம். ஆனால் நீதான் அவர் மேல பித்துப் பிடிச்சுப் போய் இருக்கியே! அதனால தான் நான் இந்த விசயம் எதையும் அப்பாகிட்ட சொல்லாம மறைச்சுட்டேன். இதுல நீ வேற மாமாவிடம் உன் மனசில் இருக்கிறதை சொல்லாம அச்சம், மடம், நாணம்னு வசனம் பேசிக்கிட்டு உட்கார்ந்திருக்க. உன்னை என்ன தான் பண்றதுன்னே எனக்குப் புரியவில்லைக்கா'' நீளமாகப் பேசிய தங்கைக்கு அருகில் இருந்த தண்ணீர் டம்ளரை எடுத்து நீட்டினாள் நிகிதா.

''பேசி முடிச்சாச்சா? இல்லை இன்னும் மிச்சம் மீதி ஏதாவது இருக்கா?'' செல்லமாகத் தங்கையின் தலையில் தட்டினாள் நிகிதா.

''நீ இவ்வளவு கவலைப்படற அளவுக்கு எதுவும் சீரியஸ் இல்லை நித்யா. அவருக்கு என்மேல் பாசம் அதிகம். அதை வெளிப்படுத்தும் வகை தெரியாம திண்டாடுறார். அவ்வளவுதான்.''



''உனக்கும் அவர் மேல பாசம் அதிகம் தானே அக்கா? நீ மட்டும் அதை வெளிப்படுத்திட்டியா?'' கேட்ட தங்கையை கண்ணீருடன் பார்த்தாள் நிகிதா.

''என்னை என்னடி பண்ணச் சொல்ற? அவர் என்கிட்ட என்னைப் பிடிச்சிருக்கான்னு ஒரு வார்த்தை கூட இதுவரை கேட்கலியே? நாளை அவர்கிட்டப் போய் உங்களைப் பிடிச்சிருக்குன்னு எப்படி வெட்கமில்லாம சொல்றது?''

''இது ஈகோ பார்க்கும் விசயமில்லைக்கா.''

''நான் ஈகோவே பார்க்கலையே நித்யா.''

''அப்புறம் என்னதான்க்கா உன் பிரச்சினை?''

''என் சூழ்நிலை என்னோட பிரச்சினை நித்யா. அவரை நான் விரும்புறேன்னு இப்பப் போய் சொன்னா அவர்மேல் இருக்கிற பயத்தால தான் நான் அப்படிச் சொல்றேன்னு தப்பா நினைக்க மாட்டாரா? என் அன்பு அவரோட பார்வையில் போலியானதா மாறிவிடாதா? நான் அவர் மேல வெச்சிருக்கிற லவ் ரொம்ப உயர்வானது நித்யா. யாரிடமும் மனதால் கூட சலனப்படாத இந்த நிகிதாவின் காதல் மிக மிக உயர்வான ஒன்று. அதை நான் என்னிக்கும் குறையுள்ளதாக இருக்க விட மாட்டேன்'' உறுதியாக கூறிய அக்காவின் கைகளை தன் கைகளுக்குள் வைத்துக் கொண்டாள் நித்யா.

''உன் அன்போட உயர்வு எனக்குத் தெரியும் அக்கா ஆனா உன்னோட இந்த முடிவு உன் வாழ்க்கையையே பாதிச்சிருமோன்னு எனக்குப் பயமா இருக்குக்கா.''

''என் அன்பு அவருக்குத் தெரியாவிட்டால் என்ன நித்யா? அவரோட அன்பு எனக்குத் தெரியுமே. தீபன் என்மேல உயிரையே வெச்சிருக்கார். அவரோட காதல் என்னைக் காயப்படுத்த அவரை அனுமதிக்காது. என்றைக்காவது ஒருநாள் நான் அவர்மேல் கொண்டு இருக்கும் காதல் அவருக்கும் புரியும். அதுவரை நான் தீபனின் காதலை ஆதாரமாகக் கொண்டே வாழ்ந்து விடுவேன்'' தீர்மானமாகக் கூறிய நிகிதாவை எதிர்க்கும் தைரியம் இல்லாமல் நித்யா அமைதியாக அமர்ந்திருந் தாள்.



# 21

தீபன் கூறியபடியே கல்யாண அழைப்பிதழ்கள் காலை ஒன்பது மணிக்கே வந்துவிட்டது. தங்கள் மாப்பிள்ளையின் அருமை பெருமைகளைப் பேசிப்பேசி அருணாச்சலம் தம்பதியினருக்கு வாய் ஓயவில்லை.

''ஸ்ஸ்... அக்கா இவங்க பேசுறதைக் கேட்டுக் கேட்டு எனக்கு காதில ரத்தமே வருதுக்கா. நீயாவது அவங்ககிட்ட கொஞ்சம் பேசி அவங்க வாயை மூடச்சொல்லேன்.''

''அவங்க வாயை மூடுற சக்தி அந்த ஆண்டவன் ஒருத்தனுக்குத்தான் இருக்கு நித்யா. சத்தியமா எனக்கு அந்த சக்தி இல்லை.''



''இதுக்கு என்னதான்க்கா பண்றது. என்னால சுத்தமா தாங்க முடியலேக்கா'' சிணுங்கிய நித்யாவை காதைப் பிடித்துத் திருகினாள் நிகிதா.

''ஏன்டி, என்னோட வீட்டுக்காரர் பெருமையை கேட்டா உனக்குப் போரடிக்குதா?''

''அடப்போக்கா. யாரோ பெருமைன்னாலும் ஒரு தடவை கேட்கலாம் மிஞ்சிப் போனா இரண்டு தடவை கேட்கலாம். அம்மா அம்மா கேட்டுக்கிட்டே இருக்க முடியுமா. அதிலயும் நம்ம வீட்டு எஃப் எம்மில் இருபத்தி நாலு மணி நேரமும் இதே நியூஸ்தான ஓடிட்டிருக்கு.''

''அடிப்பாவி. அப்பாவையும் அம்மாவையும் எஃப் எம் ஆக்கிட்டியா? இருடி இரு. நான் இப்பவே போய் அவங்க கிட்ட இதை சொல்லலேன்னா நான் மிஸஸ். தீபன் இல்லடி.''

''அம்மா, தாயே, மிஸஸ்.தீபன். இதைப்போய் அவங்ககிட்ட வத்தி வைச்சேன்னா நானும் உன்னோட மேட்டரை சொல்லிடுவேன். பார்த்துக்க... அப்புறம் உன் இஷ்டம்.''

''என்னையே பிளாக்மெயில் பண்றியா நீ? ரொம்பத் தான்டி ஓவராப் போய்க்கிட்டிருக்க. கொஞ்சம் கண்ட் ரோல் பண்ணிக்க'' கண்டித்த அக்காவிற்கு பழிப்புக் காட்டிய நித்யாவைப் பிடிக்க அவள் பின்னால் ஓடிய நிகிதா வாசலில் வந்து நின்ற காரைப் பார்த்தவுடன் தங்கையை மறந்து வெளியே எட்டிப் பார்த்தாள்.

கார்க் கதவைத் திறந்துகொண்டு கீழே இறங்கிய வேலாயுதம் நிமிர்ந்து பார்த்த முதல் பார்வையிலேயே

நிகிதாவை அவனுக்கு மிகவும் பிடித்துப் போனது. ஆனால் அவள்தான் தனது எஜமானி நிகிதாவா என் பதை தெளிவாக அறிந்து கொள்ள விரும்பினான் வேலாயுதம்.

காரில் இருந்து இறங்கியவன் ஒன்றும் பேசாமல் தன்னையே பார்த்துக் கொண்டிருந்தது நிகிதாவிற்கு எரிச்சலை உண்டு பண்ணியது. அவள் கோபமாக அவனை முறைத்தாள்.

''ஹலோ... மிஸ்டர். யார் வேணும் உங்களுக்கு?'' அதட்டினாள் நிகிதா.

''நான் தீபன் சார் வீட்டு டிரைவர்மா'' பணிவாக வந்தது பதில்.

''தீபன் சார் வீட்டு டிரைவர்னா இப்படித்தான் வீட்டு வாசலில் நின்னுக்கிட்டு வேடிக்கை பார்க்கணுமா?''

''இல்லங்கம்மா, தீபன் சார் சொன்ன அட்ரஸ்தானான்னு ஒரு சந்தேகம் தோணுச்சு. அதான்...'' கூறிய வேலாயு தத்தைப் பார்த்து நக்கலாகச் சிரித்தாள் நிகிதா.

''உங்க சார் இப்பத்தான் போன்ல அவருக்குத் தெரியாத ஒரு நாய் கூட இந்த ஏரியாவுக்குள்ள நுழைய முடியாதுன்னு சொன்னார். ஆனால் அவர் வீட்டு டிரைவருக்கு என் வீட்டோட அட்ரஸ் கூடத் தெரியலே. நல்லாத்தான் உங்க சார் பில்டப் கொடுத்திருக்காரு.''

நிகிதா கூறிய வார்த்தைகளைக் கேட்ட வேலாயுதம் பதறிவிட்டான்.

''அம்மா. அப்படிச் சொல்லாதீங்கம்மா. நான் ஏதோ சாக்கு போக்கு சொல்வதற்குத்தான்மா அப்படிச்



சொன்னேன். எங்களோட சாருக்கு பில்டப்பெல்லாம் குடுக்கத் தெரியாதுங்கம்மா. அவர் சொல்வதைத்தான் செய்வார். செஞ்சதை மட்டும் தான் சொல்வார். அவரைப் பத்தி எங்க பெங்களூரில் வந்து கேட்டுப் பாருங்கம்மா. அப்படித்தான் உங்களுக்கு முழுசா தெரியும்.''

''அப்படியெல்லாம் அடுத்தவரிடம் விசாரித்து அவரைப் பத்தி நான் தெரிஞ்சுக்க வேண்டியதில்லை சார்.''

''என்னைப் போய் நீங்க சார்னு மரியாதை குடுத் தெல்லாம் கூப்பிடவேண்டாம்மா. என் பேர் வேலாயு தம்மா. நீங்க என்னைப் பெயர் சொல்லியே கூப்பிட லாம்மா.''

''என்னைவிட வயதில் மூத்த உங்களைப் போய் நான் எப்படிப் பெயர் சொல்லிக் கூப்புடுவார் சார்? வேண்டு மென்றால் அண்ணா என்று கூப்பிட்டுக் கொள்ளவா?'' வெகுளியாய் வினவிய நிகிதாவை மரியாதையுடன் பார்த்தான் வேலாயுதம்.

''எங்க சாருக்கேத்த சரியான ஜோடிதாம்மா நீங்க. எங்க தீபன் சாரும் இப்படித்தான்மா. வேலைக்காரனாவே என்னை நினைக்க மாட்டாரு. உங்களுக்கு எப்படித் தோணுமோ அப்படியே என்னைக் கூப்பிடுங்க.''

''சரிங்கண்ணே. இப்ப என்ன வேலையாய் இங்க வந்திருக்கீங்கன்னே சொல்லலியே.''

''ஐயாவையும் அம்மாவையும் பத்திரிகை வைக்க கூப்பிட்டுக்கொண்டு போகச்சொல்லி அனுப்பி வைச் சார்மா எங்க சாரு.''

பேச்சுக்குரல் கேட்டு எட்டிப் பார்த்த பர்வதத்திற்கும், அருணாச்சலத்திற்கும் வாசலில் நின்றிருந்த வெளி

நாட்டுக் காரைப் பார்த்தவுடன் தலைகால் புரியவில்லை. நொடியில் கிளம்பி காரில் ஏறியவர்கள் நிகிதாவையும், நித்யாவையும் தனியே விட்டுச் செல்ல முடியாமல் திணறுவதைப் பார்த்த வேலாயுதம்,

“அம்மாவையும், தங்கச்சியையும் பார்த்துக்கொள்ள ஆட்களை ஏற்பாடு பண்ணியாச்சும்மா. இன்னும் கொஞ்ச நேரத்தில சமையல்காரம்மாவும், வாட்ச்மேனும் வந்துடுவாங்க. நீங்க கவலைப்படாம கிளம்புங்கம்மா” என்றான். நிம்மதியுடன் கிளம்பிய பெற்றோரைப் பார்த்து கையசைத்துவிட்டு திரும்பிய நிகிதாவின் முன் வேலாயுதம் சொன்னதுபோலவே சமையல்கார அம்மாவும், வாட்ச்மேனும் வேகமாக வந்து நின்றார்கள்.

தீபனின் ஒவ்வொரு செயலும் தன்மேல் அவன் கொண்டுள்ள அக்கறையைக் காட்டுவதை உணர்ந்த நிகிதாவிற்கு வானத்தில் மிதப்பது போல் இருந்தது. அவள் தீபனின் மேல் கொண்டிருந்த காதலும் பன்மடங்காகப் பெருக ஆரம்பித்தது. அவள் தங்கள் கல்யாண நாளை ஆவலுடன் எதிர்பார்க்க ஆரம்பித்தாள்.



## 22

அந்த ஸ்டார் ஹோட்டலின் மேரேஜ் ஹால் தேவலோகம் போல அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஹால்



முழுவதும் டியூலிப் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு தீபனின் செல்வாக்கைப் பறைசாட்டிக் கொண்டு இருந்தது. மணவறை முழுவதும் தங்கக் கோட்டிங் கொடுத்த தகடுகளால் செய்த வேலைப்பாடு மிகுந்த தூண்களையும், இரண்டு பெரிய சிம்மாசனங்களையும் கொண்டு ராஜதர்பார் போலத் தோற்றமளித்துக் கொண்டிருந்தது.

கல்யாணத்திற்கு வந்த விருந்தினர் அனைவரையும் வரவேற்று உபசரிப்பதற்கு ஹோட்டல் சிப்பந்திகள் சீருடையில் பரபரப்பாக ஓடிக் கொண்டிருந்தனர். மணமகன் கோலத்தில் மணவறையில் நின்றுகொண்டு இருந்த தீபனின் ஏவலை செய்வதற்காக அவனது ஆட்கள் கவனத்துடன் காத்திருந்தார்கள். தீபனும் அவர்களுக்கு வேண்டிய கட்டளைகளைக் கூறி அவர்களை ஏவிக் கொண்டிருந்தான்.

“டேய் தீபா. நீ ரிலாக்ஸ்ட்டாக இருடா. இன்று ஒருநாள் எந்த டென்ஷனும் இல்லாமல மாப்பிள்ளையாய் லட்சணமாய் போய் மணவறையில் உட்காரு. மற்ற வேலைகள் எல்லாத்தையும் நான் பார்த்துக்கிறேன்” தீபனின் தோள்களைப் பற்றி இழுத்துச் சென்று அவனை மணவறையில் உட்கார வைத்தான் ராஜ்.

“இல்ல ராஜ். இது தீபனோட கல்யாணம். இந்தக் கல்யாணத்துக்கு வர்றவங்க யாருக்கும் எந்த குறையும் இருக்கக் கூடாது.”

“எந்தக் குறையும் இருக்காதுடா. என்னை நம்பு. அதோ நம்ம ஆளுங்க எல்லோருமே தயார் நிலைலதான்

இருக்காங்க. அவங்க எல்லோரையும் நல்லா கவனிச் சுக்குவாங்கடா.''

''நிகிதாவுக்கு தேவையான எல்லாத்தையும் பார்த்துக் கொள்ள யாரை நியமிச்சிருக்கே ராஜ்.''

''லிசா இருக்கறப்ப வேற யாரு வேணும் தீபா. அவதான் நைட்ல இருந்தே நிகிதா கூடத்தானே இருக்கா.''

''இருந்தாலும் லிசாவில எத்தனை வேலைய பார்க்க முடியும்டா? நான் போய் நிகிதா ரூமில் எல்லாம் நல்ல படியா போயிட்டிருக்கான்னு பார்த்திட்டு வந்திடறேன் ராஜ்'' மணவறையில் இருந்து எழச் சென்ற நண்பனின் தோளில் கைவைத்து அழுத்தி உட்கார வைத்தான் ராஜ்.

''உன் கடமை உணர்ச்சி கரைபுரண்டு ஓடுதுடா. முதல்ல அதுக்கு அணைபோட்டு நிறுத்து. உன்னோட பொண்டாட்டியை அலங்கரிக்க பியூட்டி பார்லரில் இருந்து நாலுபேர் வந்திருக்காங்க. போதாத குறைக்கு அவளுக்கு வேண்டிய சாமான்களை எடுத்துக் கொடுக் கவும் வாங்கி வரவும் மூணு வேலைக்காரப் பொண்ணு களைப் போட்டிருக்க. இதுவும் போதான்னு என் பொண் டாட்டியை மூணுநாளா நிகிதாவோடயே தங்கவெச் சிருக்க. நான் அவ முகத்தைப் பார்த்துப் பேசியே முழுசா ரெண்டு நாள் ஆச்சுடா'' அழாத குறையாக பேசிய நண்பனைப் பார்த்த தீபனுக்குச் சிரிப்பு வந்தது.

''சரிடா சரிடா. அழாதேடா. கல்யாணம் முடிஞ்ச கையோட நீ லிசாவைக் கூப்பிட்டுக் கொண்டு கிளம்பு.



வீட்டிற்கு போய் ஆசைதீர உன் பொண்டாட்டியை கொஞ்சிக்கோ. உன்னை யாரு வேண்டாம்னு சொல்றது?''

''டேய் மனச்சாட்சி கெட்டவனே. உனக்கு பிரண்டா வந்து வாச்சதுக்கு இன்னும் ஒரு வாரத்துக்கு எனக்கு வேலை சரியா இருக்கும்டா. இதில் எங்க போயி நான் என் பொண்டாட்டியை கொஞ்சறது.''

''ஒரு வாரம் என்னடா வேலை?''

''ம்ம்... இவரு ஒண்ணும் தெரியாத பாப்பா. நான் சொல்லித்தான் இவருக்குப் புரியணுமாக்கும். ஏன்டா இன்னிக்கு பர்ஸ்ட் நைட் ஏற்பாடு பண்ணனும்ல.''

''ஆமாமா. அதுதானே முக்கியம்...!''

''ரொம்ப ஜொள்ளு விடாதே. அப்புறம் மறுவீட்டு, பலகாரக் குடம்னு ஏகப்பட்ட சம்பிரதாயம் இருக்கே'' பேசிக்கொண்டே போன ராஜனை இடைமறித்தார் ஐயர்.

''சார் மாப்பிள்ளை செய்ய வேண்டிய சம்பிரதாயங் களை ஆரம்பிக்கலாமா? நல்ல நேரம் போயிண்டே இருக்கு'' தலையசைத்து சம்மதம் தெரிவித்த தீபன் ஐயர் சொல்லிய மந்திரங்களை பயபக்தியுடன் திருப்பிச் சொல்லலானான்.

''பொண்ணைக் கூட்டிண்டு வாங்கோ'' ஐயர் பர்வதத்தைப் பார்த்து உத்தரவிட, அவள் நித்யாவை அழைத்து நிகிதாவை அழைத்து வரச் செய்தார்.

மணவறைக்கு வந்த நித்யாவின் அழகைக் கண்ட அனைவரும் ஒரு நொடி வாயடைத்துப் போக அந்த

ஹாலே அமைதியானதை வியப்புடன் பார்த்த தீபன் திரும்பி தன் அருகில் அமர்ந்த நிகிதாவை பார்த்தான். பார்த்தவன் பார்த்தவன்தான். அவனுக்கு முன்னால் இருந்த ஐயரும் மற்றவர்களும் மறைந்துவிட நிகிதாவும் தீபனும் மட்டுமே அங்கே இருப்பதைப் போல உணர்ந்த தீபன் பார்வையாலேயே நிகிதாவின் அழகைப் பருகத் தொடங்கினான்.

பச்சை வண்ணத்தில் தங்கக் கொடிகளும், அதில் பூத்த மலர்களாய் பெரிய விலையுயர்ந்த வெண்ணிற கற்கள் பதிந்த வேலைப்பாடும் கொண்ட பட்டு சேலைக்கு மேட்சிங்காக தங்கக் கலரில் பிளவுஸ் அணிந்த, வெண்ணிற முத்துக்களும் பச்சை வண்ணக் கற்களும் கொண்ட அட்டிகையும், அதற்கு அடுத்து நான்கு அடுக்குகளைக் கொண்ட அதே கற்களோடு கூடிய ஆரமும் அணிந்து, காதில் மாட்டல்களோடு தொங்கிய ஜிமிக்கிகள் வைரக் கற்களோடு கன்னத்தில் உரசிக் கவிதை பாட, வானில் இருந்து இறங்கி வந்த தெய்வீக அழகோடும் கண்கவரும் எழிலோடும் தன்னருகில் அமர்ந்திருந்தவள் இனி தனக்கு மட்டுமே சொந்தம் என்ற இறுமாப்பில் தீபனின் ஆண்மை கர்வமுற்றது.

இத்தனை வருடங்களாக எந்த ஒரு சொந்தத்திற்காக அவன் ஏங்கினானோ அத்தனை சொந்தங்களும் நிகிதாவின் உருவத்தில் தனக்காக இந்த பூமிக்கு வந்துவிட்டதாக தீபனின் உள்ளம் ஆனந்தம் கொண்டது. நிகிதாவின் ஒவ்வொரு அசைவிலும் அவனது ஆண்மை துளிர்விட்டு விருட்சமாக வளர்ந்து அவனை ஆக்கிரமித்துக் கொண்டது. அதன் கிறக்கம் தந்த மயக்கத்தில் அவன்



லேசாக நகர்ந்து நிகிதாவை அணைத்தாற்போல ஒட்டி அமர்ந்தான். ஐயர் சொன்ன சம்பிரதாயங்களை நிறைவேற்றுபவன் போல அவனது உடல் நிகிதாவை நெருக்கமாக தீண்டியதில் அவன் உள்ளத்தின் ஆசைத்தீ மேலும் மேலும் கொழுந்துவிட்டு எரியத் துவங்கியது. அதன் வெப்பம் தாங்காமல் தீபனின் உள்ளம் அலை மோதியது. எல்லா அஸ்திர சம்பிரதாயங்களும் முடிந்து தாலியை கையில் எடுத்த தீபன் குனிந்திருந்த நிகிதாவின் கழுத்தில் கட்டியவன் அழுத்தமாக அவளது கன்னத்தில் பிறர் அறியாமல் முத்தமிட்டான். அவனது முத்தத்தினால் சிவந்த முகத்தை மேலும் குனிந்து கொண்டாள் நிகிதா.

## 23

கல்யாணம் முடிந்த அன்று மதியமே தீபன் மனைவியோடு பெங்களூர் கிளம்பிவிட்டான். பர்வதமும் அருணாச்சலமும் தடுக்க முயன்றபோது உறுதியோடு மறுத்துவிட்டான் தீபன்.

''இல்லை மாமா. நாங்கள் எங்க வாழ்க்கையை என் வீட்டில்தான் தொடங்க வேண்டும். என்னை கம்பெல் பண்ணாதீங்க'' தீபன் கூறிய வார்த்தைகளில் இருந்த நியாயம் அருணாச்சலத்தின் வாயை அடைத்துவிட்டது.

அருணாச்சலமும், பர்வதமும் நித்யாவோடு அனைவரும் பின்தொடர தன் காரில் மனைவியை ஏற்றிக் கொண்டு பெங்களூர் வந்து விட்டான் அவன்.

வீட்டு வாசலில் கார் நின்றவுடன் வள்ளி ஆரத்தித் தட்டோடு ஓடிவந்து ஆரத்தி எடுத்தாள். பின் அனை வரும் உள்ளே நுழைந்து அமர்ந்தவுடன் மணமக்கள் சாப்பிட பாலும் பழமும் ரெடியாக வந்தது.

''அம்மா நைட் சாப்பாடு ரெடியாக இருக்கு. வந்து சாப்பிட்டீங்கன்னா மேற்கொண்டு ஆக வேண்டியதை பார்க்கலாம்'' பணிவோடு கூறிய பொன்னம்மாளை மிகவும் பிடித்துப் போனது பர்வதத்திற்கு.

அவள் நித்யாவையும் கணவரையும் சாப்பிட வைத்து அவர்களுக்காக ஒதுக்கியுள்ள ரூமில் சென்று அவர் களைப் படுக்கச் சொல்லிவிட்டு பொன்னம்மாளுடன் தீபனின் அறைக்குள் நுழைந்தாள். அறையைப் பார்த்த பர்வதத்தின் கண்கள் வியப்பினால் விரிந்தது. முதலிரவுக்கான அனைத்து பூவேலைகளும் முடிந்து, பூ பலகாரத் தட்டோடு ஊதுபத்தி மணம் கமழ அனைத்து ஏற்பாடுகளுடன் ரெடியாக இருந்தது தீபனின் அறை.

''தம்பி கண்ணசைவிலேயே அத்தனை வேலையும் நடந்துவிடும்மா... அதுகூட இருந்து வேலை வாங் கணும்ற அவசியம் இல்லை'' பெருமையாகக் கூறினாள் பொன்னம்மாள்.

''அதைத்தான் நான் கண்ணு முன்னாடி பார்த்தே தெரிஞ்சுக்கிட்டேனே பொன்னம்மா. என் மாப்பிள்ளை யோட அருமையெல்லாம் எனக்கு இப்பத்தான்



கொஞ்சம் கொஞ்சமா தெரியுது. ஆரம்பத்துல நான் மாப்பிள்ளையின் குணம் எப்படியோ என்னமோன்னு ரொம்பப் பயந்தேன். ஆனா நாங்க வலை போட்டுத் தேடினாலும் இப்படியொரு பிள்ளை எங்களுக்குக் கிடைச்சிருக்காது. என் பொண்ணோட அதிர்ஷ்டம்தான் எங்களுக்கு இப்படி மாப்பிள்ளை வந்து அமைஞ்சிருக் காரு.''

''அதென்னம்மா அப்படிச் சொல்லிட்டிங்க. நம்ம நிகிதாம்மாவோட குணம் மட்டும் குறைச்சலா என்ன. அதுவும் சொக்கத் தங்கம்தானம்மா'' கூறிய பொன்னம் மாவை பெருமிதத்துடன் பார்த்தாள் பர்வதம்.

''என்னவோ பொன்னம்மா. இவங்க ரெண்டு பேரும் மனசு ஒத்துமையோடு நல்லபடியா வாழ்ந்தால் அதுவே போதும். நிகிதா சின்னப் பொண்ணு. அதுக்கு சூதுவாது தெரியாது. நீதான் துணையா இருந்து அதை பார்த்துக் கணும்.''

''அதெல்லாம் எங்க தம்பி பொண்டாட்டியை கண்ணுக்குள் வெச்சு பார்த்துக்கும்மா. நீங்க கவலைப் படாதீங்க'' தீர்மானமாக கூறிய பொன்னம்மாளுடன் அறையை விட்டு வெளியேறினாள் பர்வதம். அவள் மனம் முழுவதும் தீபனின் ஒவ்வொரு செயலையும் எண்ணி வியப்பில் ஆழ்ந்திருந்தது.

அறைக்குள் தனித்து விடப்பட்ட நிகிதாவை பல்வேறு உணர்வுகள் ஆட்டிப் படைத்துக் கொண்டு இருந்தது. காலை எழுந்ததில் இருந்து நடந்த ஒவ்வொரு நிகழ்வும் அவளது வாழ்நாளிற்கான பொக்கிஷமான நினைவுகள் என்று எண்ணிய நிகிதாவின் உள்ளம்

தீபனின் வரவை ஆவலோடும் படபடப்போடும் எதிர்பார்த்துத் துடித்துக் கொண்டு இருந்தது. நிகிதாவின் கால்கள் இரண்டும் நிற்க முடியாமல் துவண்டன. மனமோ இன்ப மயக்கத்தில் ஆழ்ந்துகொண்டு இருந்தது. பல்வேறு உணர்வுகளின் கலவையாக, சிலையாக நின்று கொண்டிருந்தாள் நிகிதா.

அறைக்கதவு திறந்துகொள்ளும் ஓசை கேட்ட நிகிதாவின் இதயம் துடிப்பதை ஒரு கணம் நிறுத்தி மீண்டும் படபடப்பாக துடிக்க அரம்பித்தது. நிகிதாவின் கைகள் இரண்டும் தானாக நடுங்க ஆரம்பித்தன. அவள் இதழ்களை அழுந்தக் கடித்து உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டு வர முயற்சித்தும் முடியாமல் போனது. மெதுவான அழுத்தமான காலடி ஓசை நிகிதாவை நெருங்குவதை ஒருவித இன்பமான மனநிலையோடும் எதிர்பார்ப்போடும் உணர்ந்தாள் நிகிதா.

மெதுவாக நடந்து சென்ற தீபன் அமைதியாக கட்டிலில் ஒரு முனையில் சென்று அமர்ந்தான். அவனது பார்வை தனக்கு முதுகு காட்டி நின்றிருந்த நிகிதாவை மௌனமாக அளவெடுத்தது. முதலிரவுக்கான மென்மை யான ஒப்பனைகளோடு, தளர்வான பின்னலில் வாசனையான மல்லிகை மலர்களோடும், கைநிறைய வளையல்களோடும் சுழுத்தில் அவன் கட்டிய புத்தம் புதிய மஞ்சம் கயிறு கூட அவளை மேலும் பேரழகாகக் காட்டுவதை உணராத மனநிலையோடும் தன்முன் பொக்கிஷமாய் நிற்கும் இவள் தன் மனைவி, தனக்கு உரிமையானவள் என்ற நினைவு ஒன்றே தீபனுக்கு மட்டற்ற மன அமைதியைக் கொடுத்தது. ஆர்ப்பரிக்கும்



அலைகடலாக என்றுமே பொங்கித் ததும்பிக் கொண் டிருக்கும் தன் உள்ளத்தின் அமைதியை தீபனே ஆச்சரியத் தோடு உணர்ந்தான்.

''நிகிதா...'' ஆழமாக அழைத்த தீபனின் குரலில் மெய்சிலிர்த்தாள் நிகிதா.

''நிகிதா... உன்னைத்தான் கூப்பிட்டேன்.''

''ம்ம்ம்'' மெதுவாகத் திரும்பியவளின் மென்மை தீபனை மயிலிறகாய் வருடியது.

''இன்னும் எவ்வளவு நேரம்தான் அங்கேயே நின்று கொண்டிருப்பாய்? இங்கே வந்து உட்கார்'' தீபனின் குரலுக்கு அடிபணிந்தாள் அவள். அவன் அருகில் வந்து நின்றவள் சுவாதீனமாக கட்டிலின் மறுமுனையில் சென்று அமர்ந்தாள்.

''இனி வாழ்நாள் முழுவதும் நாம் இருவரும் சேர்ந்து தான் பயணித்தாக வேண்டும் நிகிதா. இப்படி என் அருகில் உட்காரக்கூட தயங்கினால் நான்...'' மேற்கொண்டு வாச கத்தை முடிக்காமல் நிறுத்தி பெருமூச்சு விட்டான் தீபன்.

''இந்தக் கல்யாணம் உனக்கு பிடிக்காத ஒன்றாக இருக்கலாம். நான் உனக்கு பொருந்தாத கணவனாக வேண்டுமானாலும் இருக்கலாம். நம் வாழ்க்கைப் பயணம் இனிமையாக இருக்குமா இல்லையா என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. ஆனால் என் உள்ளத்தில் மட்டும் உன் ஒருத்திக்கு மட்டும் தான் இடம் உண்டு. அதை நீ புரிந்து கொண்டால் மட்டும் போதும் எனக்கு. மற்றபடி உன் சுதந்திரத்தில் நான் எப்பொழுதும் குறுக்கே வர மாட்டேன். ஆனால் அந்த சுதந்திரமும் என்னைச்

சுற்றியே இருக்க வேண்டும். ஏனென்றால் நீ என் உயில்'' பேசிய தீபனின் குரல் கரகரப்பாக மாறியது. அவனின் இந்த வார்த்தைகளைக் கேட்ட நிகிதாவின் உணர்வுகள் நீர் பட்ட பாலாய் அடங்கிப் போனது.

''இவன் எதற்காக இப்படி என்னைப் பற்றி உணர்ந்து கொள்ளாமல் மறுக வேண்டும்? ப்ளீஸ்ப்பா. நீங்க என்னைப் பிடிச்சிருக்கான்னு ஒரே ஒரு கேள்வி மட்டும் என்னிடம் கேளுங்களேன். நான் உங்களுக்காக மட்டும் தான் என்பதை உணர்த்தி விடுவேனே. ப்ளீஸ்...'' நிகிதாவின் உள்ளம் மௌனமாக அரற்றியது.

அவள் உள்ளத்தின் குமுறல்கள் எதையும் உணர முடியாதவனாக அமைதியாக அமர்ந்திருக்கும் தீபனை வேதனை நிறைந்த கண்களோடு ஏறிட்டாள் நிகிதா.

''என்ன அப்படிப் பார்க்கிறே நிகிதா? நான் உனக்குப் பிடிக்காத எந்தச் செயலையும் செய்ய மாட்டேன். பயப்படாதே.''

'போடா முட்டாள். இப்ப எனக்குப் பிடிக்கலைன்னு சொன்னேனா' மௌனமாக அவனைப் பார்த்து பல்லைக் கடித்தாள் நிகிதா. 'இவனை என்ன செய்தால் தகும்' கோபத்தில் குமுறும் மனநிலையோடு அமர்ந்திருந்த நிகிதாவுக்கு தங்கையின் பேச்சுக்கள் அனைத்தும் காதில் ஒலிப்பது போல் இருந்தது.

'நீ மட்டும் உன்னோட அன்பை தெரிவிச்சுட்டியாக்கா?'

'நீ உன் காதலை மாமாவிடம் சொல்லாமல் உன் வாழ்க்கையை மேலும் மேலும் சிக்கலாக்கிக் கொள்கிறாயே என்று பயமா இருக்குக்கா.'



நிகிதா மனதிற்குள் தீர்மானமாய் முடிவெடுத்துக் கொண்டாள். இனி தீபனுக்கு தன் அன்பை அருகாமையை உணரவைக்காமல் தாமதம் செய்யக் கூடாது என்று அவள் உள்ளம் உறுதியோடு முடிவெடுத்தது.

## 24

''நிகிதா.''

தீபனின் குரலில் சிந்தனையில் இருந்து விடுபட்ட நிகிதா அவனை நேராகப் பார்த்தாள்.

''என்னங்க...?'' கிசுகிசுப்பாக வெளிவந்த நிகிதாவின் குரலில் தீபனின் உள்ளம் கிறங்கியது.

''தூங்கலாமா?'' ஏக்கத்துடன் கேட்டான் தீபன்.

''ம்'' ஒற்றைச் சொல்லில் பதிலளித்தாள் நிகிதா.

''நீ டிரஸ் சேஞ்ச் பண்ணிக்கணும்னா பண்ணிக்க. அந்த ரைட் சைடில் இருக்கும் கப்போர்டில் உனக்குத் தேவையான அனைத்தும் இருக்கிறது.''

''எனக்கா! நான் என் சூட்கேஸ் எல்லாத்தையும் இன்னும் பிரிச்சு எடுக்கலியே?''

''அதையெல்லாம் அப்புறம் பார்த்துக்கலாம். நீ இப்பப் போய் அந்தக் கப்போர்டைப் பார்த்து உனக்கு அவையெல்லாம் பிடிச்சிருக்கான்னு சொல்லு''

ஆவலுடன் கூறிய தீபனின் வார்த்தைகளில் உடனே சென்று பார்த்தாள் நிகிதா.

அந்தக் கப்போர்டு முழுவதிலும் நிகிதாவிற்கு தேவையானை அனைத்து ஆடைகளும் உள்ளாடைகள் உட்பட புதிதாக அழகாக மடித்து வைக்கப்பட்டிருந்தன. நிகிதா உபயோகப்படுத்தும் சோப். டூத்பேஸ்ட் உட்பட அனைத்தும் இன்னொரு அலமாரியில் ரெடியாக இருந்தது. வியப்பில் விழியகல தீபனைத் திரும்பிப் பார்த்தாள் நிகிதா.

"என்ன இதெல்லாம்!"

"உனக்காக நானே பார்த்துப் பார்த்து வாங்கிய பொருட்கள்."

"இதை எல்லாம் எப்ப வாங்கினீங்க?"

"நமக்கும் கல்யாணம் முடிவானதில் இருந்து இந்த ஒரு வாரமும், நான் பார்த்த முக்கியமான வேலை இதுதான். பிடிச்சிருக்கா?" முதன்முறையாக தன்னிடம் 'பிடிச்சிருக்கா' என்ற வார்த்தையைக் கேட்ட கணவனைக் கண்கள் நிறைந்த காதலோடு ஏறிட்டாள் நிகிதா.

"ரொம்பப் பிடிச்சிருக்கு" அழுத்தமாகக் கூறிய நிகிதாவின் வார்த்தைகளில் மன நிறைவை அடைந்தான் தீபன்.

அலமாரியில் இருந்த ஒரு நைட்டியை உருவிக் கொண்டு பாத்ரூமிற்குள் சென்ற நிகிதா நொடியில் உடை மாற்றிக் கொண்டு வந்து நின்றாள்.

"சரி தூங்கலாமா?" அரை மனதுடன் கேட்டான் தீபன்.



"ம்... சரி" உடனே பதிலளித்தாள் நிகிதா. அவள் மனமோ அவன் நிலையை எண்ணி நகைத்துக் கொண்டு இருந்தது. மனைவியின் அருகாமைக்காக அவளை அருகிலேயே வைத்துக் கொண்டு ஏங்கிய அவனது ஆண்மை அவளை ஆகர்சித்தது. தன்னை அவனுக்கு உணர்த்த நிகிதாவைத் தூண்டியது.

விளக்கை அணைத்துவிட்டுப் படுக்கையில் வந்து அமர்ந்த கணவனின் அருகில் நெருங்கி அமர்ந்தாள் நிகிதா.

"நான் அந்தப் பக்கமாக படுத்துத் தூங்கவா?" தரையில் இருந்த மல்லிகைச் சரம் தீபனின் மார்பில் உரச, தலையணைகளை எடுத்த நிகிதாவின் கரங்கள் அவன் இடையில் அழுத்தமாக பதிய வேண்டுமென்றே மிகவும் மெதுவாக நகர்ந்து அமர்ந்தாள் நிகிதா.

மனைவியின் உடல் உணர்த்திய மென்மையும், அவளது தலையில் இருந்த மல்லிகையின் மணம் கொடுத்த கிறக்கமுமாக படுக்கையில் சரிந்த தீபனின் அருகில் நெருங்கியும் நெருங்காத நிலையில படுத்து உறங்கச் சென்றாள் நிகிதா.

அதிகாலை கண்விழித்ததில் இருந்து அலைந்த களைப்பும் இருவருமே விரைவில் உறங்கி விட்டார்கள். இடையில் கண்விழித்த பொழுதெல்லாம் உணர்ந்த நிகிதாவின் அருகாமையில் பல வருடங்களுக்குப் பிறகு தாயின் அருகாமை கிடைத்த நிம்மதியில் நிறைவான மனநிலையில் ஆழ்ந்து உறங்கினான் தீபன்.

அதிகாலை கதவை யாரோ தட்டும் ஓசை கேட்டு விழித்த தீபன் எழ மனசில்லாமல் அப்படியே

படுத்துவிட்டான். இரவு சூடிய மல்லிகைச் சரம் லேசாக வாடிய நிலையில் கழுத்தில் சரிந்திருக்க, புதிய மஞ்சள் தாலி மார்பில் தவழ தீபனின் மார்பில் கைபோட்டு அவனது கைவளைவில் தலைவைத்து லேசாக கால்களை அவன் மேல் சாய்த்து நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தாள் நிகிதா.

மனைவியின் மனம் ஒத்த அணைப்பில் இருந்து விலக மனம் இல்லாமல் அசையாமல் அவள் மேல் கைபோட்டு அப்படியே இருந்த தீபனின் மனம் காலம் இப்படியே உறைந்துவிடாதா என்று ஏக்கத்தோடு எண்ணியது. இவள் அருகாமை தனக்கு இவ்வளவு இன்பத்தைக் கொடுக்குமா என்று அவனது ஆண்மை விழித்துக் கொண்டு தீபனைக் கேள்வி கேட்டது. மீண்டும் பலமாக கதவு தட்டப்பட்ட ஓசையில் மெதுவாக கண் விழித்த நிகிதா தீபனின் அணைப்பில் தான் இருந்ததை கண்டு லேசாக நாணமுற்றாலும், அவசரம் இல்லாமல் மெது வாக கணவனை உரசிக்கொண்டே எழுந்து அமர்ந்தாள்.

''யாருங்க அது? இவ்வளவு சீக்கிரமா எழுப்பி விட்டுட்டாங்களே!'' சிணுங்கிய மனைவியை கிறக்க மாகப் பார்த்தான் தீபன்.

''மணி எட்டாகப் போகுது நிகிதா. பொன்னம்மா காபி கொண்டு வந்திருப்பாங்க.''

''மணி அவ்வளவு ஆகிடுச்சு! எனக்கு நேரமே தெரிய லையே!'' வியப்புடன் கூறினாள் நிகிதா.

''பெங்களூர் கிளைமேட் அப்படித்தான் இருக்கும். ரொம்ப இதமா கதகதப்பா இருக்கும்.''



''உங்களை மாதிரியா'' இயல்பாகக் கூறிக் கொண்டே எழுந்து சென்று கதவைத் திறந்த மனைவியை விழிய கலப் பார்த்தான் தீபன்.

'இவளுக்கு நான் இதமானவனாத் தெரிகிறேனா!' ஆச்சரியத்துடன் நிகிதாவைப் பார்த்தான் தீபன்.

# 25

கதவைத் திறந்த நிகிதா அறை வாசலில் காபி பிளாஸ்க்கும், டம்ளர்க்கும் தனியாக சிறிய சக்கரம் பொருந்திய டேபிள் இருந்ததைப் பார்த்து வியந்து நின்றாள்.

''அந்த டேபிளை உள்ளே கொண்டு வா நிகிதா'' கணவனின் குரலில் டேபிளை உள்ளே இழுத்துவிட்டு கதவை மூடினாள் அவள்.

'என்னங்க இது. இப்படி வாசலில் வைத்துவிட்டு போய்விடுவார்களா? கையில் தரமாட்டாங்களா?'

''நம்ம பிரைவஸி கெடக்கூடாதுன்னு வள்ளி கொண்டு வந்து வெளியிலேயே வெச்சுட்டுப் போயிருப்பா.''

''வள்ளின்னா...?''

''வள்ளி பொன்னம்மா சித்தியோட பொண்ணு. பொன்னம்மா சித்தி... தீபன் தன் சிறுவயது விபரங்களைக் கூறுவதை கவனமாகக் கேட்டுக் கொண்டாள்

நிகிதா. பெற்றோர் இல்லாமல் சிறு வயதில் இருந்து தனிமையில் வாடிய தீபனின் நிலையை எண்ணி அவள் மனம் வேதனைப்படுவதை நிகிதாவின் முகம் தீபனுக்கு உணர்த்தியது. இனம் தெரியாத வகையில் நிகிதாவின் வேதனை தீபனுக்கு இதத்தைக் கொடுத்தது. சிறிது நேரம் மௌனமாக அமர்ந்திருந்த நிகிதா திரும்பிக் கணவனைப் பார்த்தாள்.

''இப்படியே உட்கார்ந்திருந்தா எப்படி? போய் பிரஷ் பண்ணிட்டு வாங்க... காபி குடிக்கலாம்'' மென்மையாகக் கூறிய மனைவியின் குரலில் தோன்றிய அன்பு தீபனைக் கவர்ந்தது.

'அம்மா இருந்திருந்தா இப்படித்தான் என்னைக் கண்ட்ரோல் பண்ணியிருப்பாங்க'' அமைதியாக எழுந்த தீபனின் கைகளில் பேஸ்ட் பிரஷ்ஷை வைத்தாள் நிகிதா.

கணவனுக்கு காபியைக் கொடுத்த நிகிதா தானும் ஒரு கப்பில் ஊற்றிக்கொண்டு தீபனின் அருகில் அமர்ந்து கொண்டாள். சுவாதீனமான அவளது நடவடிக்கைகளால் தீபனின் மனதில் தென்றல் வீசியது. அவனையறியாமல் தன்னை நெருங்கி அமர்ந்த தீபனை எண்ணி மனதிற்குள் புன்னகைத்துக் கொண்டாள் நிகிதா.

குளித்து தலையில் துண்டைச் சுற்றிக் கொண்டையிட்ட நிகிதா குங்குமத்தை எடுத்து நடு வகிட்டில் பொட்டிட்டாள். படுக்கையை உதறி சீராக விடுத்தவள் தலையணைகளை நேராக அடுக்கி வைத்தாள். காலியான காபிக் கோப்பைகளை எடுத்து டிரேயில் அடுக்கி எடுத்துக் கொண்டு அறையில் இருந்து வெளியே வந்தவளின் எதிரே ஓடிவந்து காபிக் கோப்பைகளை வாங்கிக் கொண்டாள் வள்ளி.



''நீங்க எதுக்கண்ணி இந்த வேலையெல்லாம் செய்யறீங்க? ரூமிலேயே வெச்சிருந்தால் நான் வந்து எடுத்துக்குவேனில்ல'' அப்பாவியாகக் கேட்ட வள்ளியை பார்த்து அன்புடன் புன்னகைத்தாள் நிகிதா. தன் கணவனை சிறு வயதில் இருந்து வளர்த்த பொன்னம்மாளின் மகன் இவள் என்ற எண்ணமே வள்ளியின் மேல் தனி அன்பினை நிகிதாவிற்கும் ஏற்படுத்தியது. அவள் பாசத்துடன் வள்ளியின் தோள்களைப் பற்றிக் கொண்டாள்.

''நம்ம வீட்டில் நம்முடைய வேலையை பார்ப்பது தப்பில்லை வள்ளி.''

''என் பெயர் எப்படிண்ணி உங்களுக்குத் தெரியும்!''

''உங்க அண்ணன் தான் சொன்னாங்க.''

''அண்ணன் அதுக்குள்ள என்னைப் பத்தி சொல்லிட்டாங்களா...''

''ஆமாம்'' வள்ளியின் தோள்களில் கை போட்டபடி பேசிக்கொண்டே மாடிப்படிகளில் இறங்கி வந்த நிகிதாவைப் பார்த்ததும் மனமெல்லாம் நிறைந்து சிரித்தாள் பொன்னம்மா.

''வா கண்ணு. எங்க தம்பிக்கு வர்ற பொண்ணு எப்படி இருக்குமோ என்னமோன்னு நான் ரொம்பக் கவலைப் பட்டேம்மா. ஆனா உன்னைப் பார்த்ததுல இருந்து என் கவலையெல்லாம் பஞ்சாய் பறந்து போயிருச்சு.''

''கவலை எப்படிம்மா பஞ்சா மாறிச்சு?'' தாயை பார்த்து கேலியாகக் கேட்டாள் வள்ளி.

''உனக்கு எல்லாம் கேலிதான்டி. உன் அண்ணியைப் பாரு. எவ்வளவு அமைதியா அடக்கமா இருக்காங்கன்னு.''

''அம்மா... வீட்டுக்கு ஒருத்தர் அமைதியா இருந்தாப் போதும். எல்லோரும் அமைதியா இருந்தா வீடு வீடாவே இருக்காதும்மா.''

''எல்லாரும் உன்னை மாதிரி வாயடிச்சால் மட்டும் வீடு வீடாவாடி இருக்கும். சந்தைக் கடையால்ல மாறிடும்? அது இன்னும் கஷ்டமில்லையா?'' கேட்ட பொன்னம் மாளை பதில் சொல்லாமல் முறைத்தாள் வள்ளி.

''என்ன வள்ளி? அத்தை உன் வாயைக்கூட அமைதியா ஆக்கிட்டாங்களே'' கேட்ட நிகிதாவை புதிராகப் பார்த் தாள் வள்ளி.

''அத்தையா? அது யாரண்ணி?''

''உங்க அம்மாவைத்தான் சொன்னேன்.''

''என்னையா கண்ணு அத்தைன்னு சொன்ன?''

''என்னத்தை கேள்வி இது? அவருக்கு நீங்க சித்தின்னா எனக்கு அத்தை தானே?'' கேட்ட நிகிதாவின் கன்னம் தொட்டு முத்தமிட்டாள் பொன்னம்மா.

''நீ நல்லா இருக்கணும் கண்ணு.''

ஹாலில் அமர்ந்து அன்றைய பேப்பர்களைப் புரட்டிக் கொண்டே அருணாச்சலத்துடன் பேசிக்கொண்டு இருந்த தீபன் நிகிதாவின் செயல்களைக் கண் கொட் டாமல் பார்த்து ரசித்துக் கொண்டு இருந்தான்.

''என்ன பெண் இவள். சுற்றி இருக்கும் அனைவரை யும் மகிழ்ச்சியாக ஒரு நொடியில் மாற்றிவிடும் திறமை இவள் ஒருத்திக்கு மட்டும்தான் உண்டு'' தீபனுக்கு அந்த



வீடே அன்றுதான் அவனுடைய சொந்த வீடுபோல தோன்றியது. அன்றுவரை வீட்டிற்கு வருவதற்கு விருப்பமில்லாமல் பெரும்பாலும் ஹோட்டல் ரூம்களில் தங்கிவிடும் அவனுக்கு அன்றுதான் அந்த வீடு! வீட்டிற் கான முழு இலக்கணம் கொண்டதாகத் தோன்றியது.

''நிகிதா, அப்பாவோட பேண்ட் சார்ட் எந்தப் பெட்டியி லம்மா இருக்கு?''

''அந்த பிளாக் கலர் சின்ன சூட்கேஸ்லதான் இருக்கும்மா.''

''அக்கா. என்னோட யெல்லோ சுடிதார் செட் எடுத்து வெச்சிருக்கியா?''

''அம்மாவோட டிரஸ்சுக்கு அடியில் இருக்கும் பார்.''

''ஏம்மா நிகிதா! கல்யாணத்தன்னிக்கு முதல்நாள் எங்க ஆபீஸில் இருந்து வந்தவங்க கொடுத்த கிப்ட் எல்லாம் பிரிக்காம அப்படியேதான இருக்கு?''

''இல்லப்பா. அதையெல்லாம் பிரிச்சுப் பார்த்துட்டு ஸ்டோர் ரூம் செல்லில் அடுக்கி வெச்சுட்டேன். அப்புறம் யார் யார் என்னென்ன கிப்ட் கொண்டு வந்தாங்கன்னு உங்க டைரில குறிச்சு வெச்சிருக்கேன்.''

அவரவருக்கு உரிய பதில்களை கூறிக் கொண்டே சமைத்த உணவுகளை பொன்னம்மாவிடம் வாங்கி டைனிங் டேபிளில் அடுக்கிக் கொண்டு இருந்த நிகிதாவின் செயல்கள் காலங்காலமாக அந்த வீட்டில் வாழ்ந்து வரும் சுவாதீனத்துடன் இருப்பதை வியந்து பார்த்தான் தீபன்.

# 26

வெள்ளையும், சிவப்புமாக கொத்துக் கொத்தாக மலர்கள் தொங்க அதன் நடுநடுவே பல்வேறு வண்ண டியூலிப் மலர்கள் இணைந்திருக்க வண்ணமயமாக அலங்கரிக்கப்பட்ட மேடையில் இணைந்து நின்றிருந் தார்கள் தீபனும், நிகிதாவும். அது அவர்களின் கல்யாண ரிசப்ஷன் மேடை.

இளஞ்சிவப்பு வண்ண பிரிண்டட் சில்க் சேலையில வெண்ணிற ஜரிகை வேலைப்பாட்டுடன் இடை இடையே வெண்நிற கற்கள் பதித்திருக்க, அதே வெள்ளி வண் ணத்தில் பிளவுஸ் அணிந்திருந்த நிகிதா அசையும் பொழுதெல்லாம் அவள் மேனியை அலங்கரித்த வைரக் கற்கள் பதித்த அணிகலன்கள் வர்ண ஜாலத்தை காட்டிக் கொண்டிருந்தது. தொடை வரை நீண்ட கூந்தலைப் பின்னல் இடாமல் தலையில் பின்னோக்கி பிரெஞ்ச் டிப் பின்னல் போட்டு அலைஅலையாய் வரிந்து படர விட்டிருந்தாள்.

கூந்தலைச் சுற்றிப் படர்ந்த வண்ணத்தில் கெட்டி யாக கட்டப்பட்ட முல்லைச் சரம் ஒற்றையாக அலங் கரித்துக் கொண்டிருந்தது. ஒப்பனையில்லாமல் இயற்கை யிலேயே பேரழகியாய் நின்றிருந்த நிகிதாவின் மேல்



வைத்த கண்ணை எடுக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்த தீபன் அடர்ந்த நீலநிற கோட்டும், பேண்டும் அணிந்திருந்தான். ஆறடி உயரத்திற்கும் மேல் அகன்ற தோள்களும், கட்டுக்கோப்பான உடல் அழகும் கொண்டு முழுமையான ஆண்மகனாக கம்பீர மாய் அருகில் நின்று கொண்டிருந்த தீபனின் அழகில் மெய்மறந்து அவனருகில் நின்றிருந்தாள் நிகிதா. ஒருவர் மேல் ஒருவர் கொண்ட மயக்கம் இருவரின் அழகையும் பன்மடங்கு கூட்டிக் காட்டிக் கொண்டிருந்தது.

ரிஷப்சனுக்கு வந்திருந்த பெரிய பெரிய விஐபிக் களின் வரிசையைப் பார்த்து வாய் பிளந்து அமர்ந்திருந் தார் அருணாச்சலம். நித்யாவிற்கோ தன் தோழிகளிடம் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்ள இப்படியொரு மாமா கிடைத்ததில் அளவில்லாத மகிழ்ச்சி. இவை அனைத்தையும் அமைதியாக நிதானத்துடன் அளவிட்டுக் கொண்டிருந்தவள் பார்வதம் மட்டுமே. அவள் வந்திருக்கும் அத்தனை பெரிய மனிதர்களும் தீபனுக்கு காட்டிய மரி யாதையையும், தீபன் அவர்களிடம் காட்டிய பணிவையும் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அது மட்டும் அல்லாமல் அத்தனை பெரிய ரிசப்ஷன் ஹாலில் ஒரு ஓரத்தில் பஃபே சிஸ்டம் முறையில் வகை வகையான சாப்பாடு தயாராக இருந்ததையும் வந்த அனைவரும் தங்கள் வீட்டுக் கல்யாணம் போல தங்கள் அந்தஸ்துகளை ஒதுக்கிவிட்டு சாப்பிட்டுக் கொண்டும், சந்தோஷமாகப் பேசிச் சிரித்துக் கொண்டும், குடும்பம் குடும்பமாக கண்ணியமாக நடந்து கொள்வதையும் பார்த்த பார்வதத்திற்கு தன் மருமகனின் மேல் மரியாதை பன்மடங்கு உயர்ந்தது.

அவளறிந்த மிகச் சில பணக்கார வீட்டுக் கல்யாணங்களில் ஆடம்பரமும் பகட்டுமாக மனிதாகள் இருப்பதைக் கண்கூடாகக் கண்டவள் பர்வதம். அது மட்டும் அல்லாமல் கல்யாண ரிசப்ஷனிலும் பரிமாறப்பட்டுக் கொண்டு இருக்கும் மதுவகைகளையும், அதை குடித்து விட்டுக் கண்ணியம் இல்லாமல் பேசி உரக்கச் சிரித்துக் கொண்டு இருக்கும் மனிதர்களையும் அவள் கட்டோடு வெறுப்பவள்.

ஆனால் இங்கோ பெயருக்குக் கூட மது என்கிற பேச்சுக்கே இடமில்லாமல் ஹால் மிகவும் அமைதியான அழகோடு இருந்தது. வந்த விருந்தினர்களும் தீபனின் வீட்டில் அந்தப் பழக்கம் இல்லை என்பதுபோல மிகவும் சுவாதீனமாகவும், சுதந்திரமாகவும் தங்கள் வீட்டுப் பெண்களோடு ஆனந்தமாக அமர்ந்திருந்தார்கள்.

நிகிதா மிகவும் சந்தோஷமாகவும், அதைவிட பெருமையாகவும் உணர்ந்தாள். தான் அழகென்ற கர்வம் இல்லாவிட்டாலும், தானும் ஒரு அழகி என்பதை தன்னை பார்க்கும் ஆண்களின் வியந்த பார்வையில் கண்டு மனதிற்குள் அப்படிப்பட்ட பார்வைகளையே வெறுத்துக் கொண்டிருந்தவள் அவள்.

அவளது வாழ்நாளில் முதல் முறையாக அன்று அவர்களை வாழ்த்த வந்த எந்த ஆண்மகனின் பார்வையும் நிகிதாவை ஆராய முற்படவில்லை. அதையும் மீறி அவளைப் பார்த்த ஆண்களின் பாாவையும் ஒரு கண்ணியமும், பயம் கலந்த மரியாதையும் இருந்தது. அவர்கள் நிகிதாவின் அருகில் கூட வராமல் கரம் குவித்து வணக்கம் செலுத்திவிட்டு வாழ்த்துக்களைக்



கூட தீபனிடம் கூறிவிட்டு மேடையில் இருந்து இறங்கி சென்றார்கள். மற்றவர்களின் இந்த மரியாதைக்கு முழு காரணமும் தீபன்தான் என்பதை உணர்ந்த நிகிதா அவளைத் தன்னுடைய ஆண்மகனாக முழுமையாக ஏற்றுக் கொண்டாள். தீபனின் அருகாமை தனக்கு ஒரு வித பாதுகாப்பு உணர்வையும் தன்னம்பிக்கையையும் தருவதை ஆச்சரியத்துடன் உணர்ந்தாள் அவள்.

''ஹாய் தீபன். மெனிமோர் ஹேப்பி ரிட்டன்ஸ் ஆப் தி டே. மை ஹார்ட்லி கன்கிராட்ஸ் டு யூ அண்ட் யுவர் லவ்லி வொய்ப்'' முதன் முறையாக தன்னை ஆராயும் பார்வையுடன் மேடை ஏறியவளைப் பார்த்த நிகிதா தன்னை அறியாமல் முகச் சிரிப்புடன் தீபனை நெருங்கி நின்று கொண்டாள்.

அவளுடைய இந்த செய்கையானது தீபனின் மனதிற்கு எவ்வளவு இன்பத்தைக கொடுத்ததென்பதை நிகிதா அறியமாட்டாள். தீபனின் கைகள் நிகிதாவின் இடையை வளைத்துக் கொண்டது. அவளை தன்னருகே இயல்பாக அணைத்தவாறு நிற்கச் செய்தவன் தன் முன் நின்றவனை தீர்க்கமாகப் பார்த்தான்.

''ஹலோ வின்செண்ட். என்ன இன்னிக்கு ரொம்ப சந்தோஷமான மூடுல இருக்கறீங்க போல இருக்கு?'' தன்னை நோக்கி கரம் குலுக்க நீண்ட தீபனின் கைகளைப் பற்றாமல் அமைதியுடன் கேட்டான் தீபன்.

''இது என்ன கொஸ்டின் தீபன் சார்? உங்களோட கல்யாணம் ஒண்ணு போதாதா நான் சந்தோஷப்பட?''

“ம்ஹூம்! என்னோட கல்யாணம் உங்களுக்கு அவ்வளவு சந்தோசத்தைக் குடுத்தமாதிரி எனக்குத் தோணலியே?” எச்சரிக்கும் தொனியில் கூறிய தீபனின் வார்த்தைகளால் சிறிது மனதிற்குள் பயமெடுத்தாலும் வெளியே காட்டிக் கொள்ளாமல் சிரித்தான் வின்சென்ட்.

“உங்க வொய்ப் ஸோ பியூட்டிபுல் சார். நான் பார்த்தவுடனே ஷாக் ஆகிட்டேன்” வின்சென்டின் பார்வை மறுபடியும் நிகிதாவின் மேல் படிந்தது.

“ரொம்ப ஷாக் அடிச்சா உயிருக்கே ஆபத்தாகி விடும் வின்சென்ட். அண்டு என்னோட வொய்ப்போட அழகை அடுத்தவர் சொல்லி தெரிந்துக்கொள்ள தீபன் என்றுமே விரும்பியதில்லை.”

“என்ன தீபன் சார்? இதெல்லாம் ஜஸ்ட் பார் ஃபன்னுக்கு சொல்வது தானே?”

“உங்க ஃபன் எனக்குத் தேவையில்லை வின்சென்ட். நீங்க முதலில் உங்க வொய்ப்போட அழகை போய் பார்த்தால் நன்றாக இருக்கும்” ரிசப்ஷனுக்கு வந்த ஆண்மகன்களுடன் நின்று தோள் தட்டிப் பேசிச் சிரித்துக் கொண்டு இருந்த லீமாவை கண்களால் சுட்டிக் காட்டினான் தீபன்.

தன் பார்வையைக் கூடத் தாங்காமல் தீபனிடம் நெருங்கி நின்று கொண்ட நிகிதாவையும், மற்ற ஆண்களின் தோள் தட்டிப் பேசிக்கொண்டு இருந்த தன் மனைவியையும் ஒப்பிட்டுப் பார்த்த வின்சென்ட்டின் முகம் பொறாமையில் கறுத்தது. அவன் பல்லைக் கடித்துக் கொண்டு மேடையை விட்டு இறங்கி மனைவியை நோக்கிப் போனான்.



# 27

மகளின் தலையை தளர்வாகப் பின்னி மல்லிகை மலர்களைச் சூடிவிட்டாள் பார்வதம். மாலை ரிசப்ஷன் முடிந்த உடனே மனைவியையும் மாமனார், மாமியாரையும் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு வந்துவிட்டான் தீபன்.

“என்னங்க மாப்பிள்ளை இது. நாம பாட்டுக்கு வீட்டுக்குப் போய்விட்டால் இங்க யார் இருந்து எல்லாத்தையும் சரிபார்த்து, செட்டில் பண்றது?”

“அதெல்லாம் பார்த்துக் கொள்ள ஆட்கள் இருக்காங்க மாமா. நீங்க கிளம்புங்க.”

“இல்லை மாப்பிள்ளை. நான் மட்டும் வேணும்னா இங்க இருந்துட்டு...” தயங்கிய அருணாச்சலத்தை பார்த்து வாய்விட்டுச் சிரித்தான் தீபன்.

“மாமா இங்க எல்லாத்தையும் மத்தவங்க பார்த்துக்குவாங்க. ஆனா உங்களை எல்லோரையும் நானே பத்திரமா பார்த்துக்கணும்னு நினைக்கிறேன். அதனால என்னோட பேசாம கிளம்புங்க.”

“அப்படி என்ன மாப்பிள்ளை ஆகிறப்போகுது. நான் என்ன பச்சைக் குழந்தையா. அப்படியே ஏதாவது ஒண்ணுன்னாலும் நம்ம ஆட்கள் இருக்காங்களே?”

''என்னுடைய ஆட்கள் நமக்காக உயிரையும் கொடுப் பாங்கதான் மாமா. ஆனா அதற்கான சூழ்நிலையை நாமளே ஏன் உருவாக்கிக் கொடுக்கணும்.''

''நீங்க என்ன மாப்பிள்ளை சொல்றீங்க. அப்படி எதை நினைச்சு பயப்படுறீங்க?''

''பயமா! தீபனுக்குப் பயமென்பதே கிடையாது மாமா. அதனாலேயே எனக்கு எதிரிகள் கொஞ்சம் அதிகம்'' அமர்த்தலாகக் கூறிய மருமகனைப் பார்த்த அருணாச் சலத்துக்கு முதல் முறையாக மகள் குறித்த பயம் வந்தது. அவர் மனைவியைப் பார்த்தார். அவர் பார்வையின் அர்த்தத்தைப் புரிந்துகொண்ட பர்வதம் அமைதியாக இருக்கும்படி பார்வையால் உணர்த்தினாள்.

''என்னடி இது? நாம சரியா விசாரிக்காம பொண்ணைக் கொடுத்துகிட்டோமோ? எனக்கென்னவோ தீபன் பேசு றதைப் பார்த்தால் பயமா இருக்குடி'' தனிமையில் மனைவியிடம் புலம்பினார் அருணாச்சலம்.

''இப்ப என்ன ஆச்சுன்னு இப்படிப் புலம்பறீங்க? மாப்பிள்ளை என்ன குடிகாரரா இல்லை பொம்பளைப் பொறுக்கியா? நேர்மையா உழைச்சு முன்னுக்கு வந்து இத்தனை தொழில்களை திறமையா நடத்திக்கிட்டு இருக்காரு பார்த்தீங்கள்ள. துணிச்சலும் தைரியமும் இருந்தால்தான் இத்தனை தொழில்களைக் கட்டிக் காப்பாத்த முடியும். கோழையா இருந்தா முடியுமா?''

''அதுக்கில்லடி. சுதந்திரமா எங்காவது வெளியில போகக் கூட முடியாம நம்ம பொண்ணு வீட்டுக்குள் ளேயே அடைஞ்சு கிடக்க முடியுமா?''



''அம்மா கூறுகெட்ட தனமா பேசாதீங்க. சுதந்திரமா எங்கயும் போகாமே மாப்பிள்ளை என்ன நாலு சுவத்துக் குள்ள அடைஞ்சா உட்கார்ந்திருக்காரு? இன்னிக்கு வந்த விருந்தாளிகளைப் பார்த்தீங்கள்ள. எல்லாரும் குழந்தை குட்டி பொண்டாட்டின்னு குடும்பத்தோட நிம்மதியா வந்து ரிசப்ஷன்ல கலந்துக்கிட்டாங்கள்ள. எதுனால? மாப் பிள்ளை மேல இருக்கற அன்பு மற்றும் நம்பிக்கையால.

அடுத்த மனுசங்களுக்கே அவ்வளவு பாதுகாப்பையும், அன்பையும் கொடுக்கிற மனுசன் தன் சொந்தப் பொண்டாட்டியை கவனிக்காம விட்டு விடுவாரா? வீணா மனசைப் போட்டு குழப்பிக்காம நிம்மதியா போய் படுங்க'' கண்டிப்பும் கறாருமாக கணவரை விரட் டியவள் நேராக நிகிதாவின் அறைக்குள் நுழைந்தாள்.

ஏதோ சிந்தனையுடன் ஜன்னல் கம்பிகளை பிடித்த வாறு வெளியே வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றிருந்த நிகிதாவை பார்த்தவுடன் அவளது தாயுள்ளம் துன்பத்தால் துவண்டது. நாளையோ, மறுநாளோ அவர் கள் அனைவரும் சென்னை கிளம்பிச் சென்றாக வேண் டும். அதன் பின்பு தான் கண்ணுக்குள் வைத்து வளர்த்த மகள் தனியாக இங்கே இருந்து இந்த வீட்டையும் கணவனையும் கவனித்துக் கொண்டாக வேண்டும்.

ஒரு நாள் கூட பெற்றவர்களைப் பிரிந்து வாழ்ந்து பழகியிராத தன் மகள் இனி பெற்றவர்களை என்றோ ஒருநாள்தான் பார்க்க முடியும் என்ற உண்மை பர்வதத் தின் உள்ளத்தை வேதனைப்படுத்தியது.

''நிகிதா, என்னடா யோசனை?'' மகளின் பின்னிருந்து அவள் தோள்களை அணைத்துக் கொண்டாள் பர்வதம்.

''யோசனை எல்லாம் ஒண்ணும் இல்லம்மா. மனசுக்குத்தான் ஏதோ ரொம்ப கஷ்டமா இருக்கு.''

''இந்த மனக்கஷ்டத்தை பொண்ணா பொறந்த எல்லோருமே ஒரு காலகட்டத்தில் அனுபவிச்சுத்தாம்மா ஆகணும்.''

''அம்மா...'' விசும்பிய மகளை மடியில் சாய்த்துக் கொண்டாள் பார்வதம்.

''ஒண்ணை அடையணும்னா இன்னொன்றை விட்டுக் கொடுத்துதான் ஆகணும் நிகிதா. நீ இப்ப இன்னொருத்தனுக்கு மனைவியா ஆகிட்ட. அதுவும் நம்ம மாப்பிள்ளை சின்ன வயசிலேயே பெத்தவங்களை இழந்துட்டு தனிமரமா வாழ்ந்தவர். அவருக்கு நீதான் தாய்க்குத் தாயா இருந்து இனிமே அவரைக் கவனிச்சுக்கணும். அதோ இன்னொரு விசயம் சொல்றேன் கவனமா மனசில வைச்சுக்க.''

அன்னையின் பேச்சைக் கேட்ட நிகிதா கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்து அமர்ந்தாள்.

''சொல்லுங்கம்மா. உங்க சொல்படியே நான் நடந்துக்கிறேன்.''

''அடுத்தவங்க சொல்லிக் கொடுத்து அதன்படி நடக்கிற வயசெல்லாம் கடந்து வந்துட்ட நிகிதா. இப்ப நீ உன் பொறுப்புகளை ஏத்துக்கிட்டு திறமையா குடித்தனம் பண்றதில தான் எங்களோட சந்தோஷமும் நிம்மதியும் அடங்கியிருக்கு. மாப்பிள்ளை தனியாகவே வாழ்ந்ததினால் சில பிடிவாத குணங்கள் இருக்க வாய்ப்பிருக்கும்மா. நீதான் அதெல்லாம் பொறுத்துப் போகணும். அவரை உன் அன்பால உன் பக்கம் திருப்பிக்கணும்.



அவரோட சந்தோஷத்துலதான் உன்னோட சநதோஷமும், வாழ்க்கையும் அடங்கியிருக்கு. நீ படிச்ச பொண்ணு. நாலு பேர் கூட வேலைபார்த்து மனுசங்களோட குணங்களைப் புரிஞ்சு வெச்சுருக்கிற புத்திசாலி. உனக்கு நான் புதிதாக எந்த அறிவுரையும் சொல்லத் தேவையில்லை'' மகளின் தலையைத் தடவிக் கொடுத்த வண்ணம் மெல்லிய குரலில் கூறினாள் பார்வதம்.

''ஆயிரம் அறிவுரை நீங்க சொன்னாலும் உங்கூட இருக்கறப்ப எனக்கிருந்த தைரியம் இப்ப இல்லம்மா. என்னவோ நடுக்காட்டில தனியா நிக்கற மாதிரி லோன்லியா பீல் பண்றேம்மா.''

''இனிமேல் உனக்கு எல்லாமே மாப்பிள்ளைதான் நிகிதா. அதை முதலில் உன் மனதில் பதிய வெச்சுக்க. இப்ப நாங்க உன்னை தனியா விட்டுட்டு எங்க போகப்போறோம்? இதோ இருக்கற சென்னைக்குத்தான நித்யாவின் படிப்பு முடிஞ்சுருச்சின்னா மேல்படிப்புக்கு இங்க வேணா ஏதாவது காலேஜ்ல அவளை சேர்த்துவிட்டுட்டு இங்கயே கூட வந்திருக்கிறோம். ஆனா நீ மட்டும் தைரியமா இருக்கணும். என்னடா நான் சொல்றது உனக்குப் புரியுதா இல்லையா?''

''புரியுதும்மா.''

''மறுபடியும் சொல்றேன். மாப்பிள்ளை கூட சந்தோஷமா நிம்மதியா நீ நல்ல முறையில் வாழ்ந்தாத்தான் எங்களுக்குப் பெருமை'' மகளின் கன்னம் தொட்டு முத்தமிட்டார் பார்வதம்.

# 28

அறைக்குள் நுழைந்து கதவடைத்த நிகிதா கையில் இருந்த பால் நிறைந்த பிளாஸ்க்கை அருகில் இருந்த டேபிளின் மேல் வைத்துவிட்டு கணவனை ஏறிட்டாள்.

வெற்று மார்பும், கைலியுமாக நிச்சித்தையாக கைகளை மடித்து தலைவைத்துப் படுத்திருந்த தீபனின் கோலத்தில் சிறிது நாணம் ஏற்பட பார்வையைத் திருப்பிக் கொண்டாள் நிகிதா.

'பார்க்கக்கூட பிடிக்காமல் திரும்புகிறாள் பார். அப்புறம் எதுக்கு ரிசப்ஷன் மேடையில் மேல வந்து ஒட்டிக்கிட்டு நின்றாளாம்' மனதிற்குள் பல்லைக் கடித்தான் தீபன்.

'அம்மா கவர்ச்சி போஸ் கொடுத்துக்கிட்டுப் படுத் திருக்கிறதைப் பார். பக்கத்தில போனால் என்னைப் பிடிக்காதுன்னு ஒரு டயலாக் வேற' நாணத்தில் சிவந் தாள் நிகிதா.

கல்யாணம் முடிந்ததில் இருந்து நிகிதா அவனிடம் காட்டிய நெருக்கத்தில் திணறிப் போய் இருந்தான் தீபன். அவனுடைய பழிவாங்கும் எண்ணமெல்லாம் எங்கோ பறந்தோடிவிட நிகிதாவின் அருகாமைக்காகவும், தேவைக்காகவும் தீபனின் உடலும் உள்ளமும் ஏங்கத் தொடங்கியது. அதிலும் அன்று காலை அவனை



அணைத்து படுத்திருந்த நிகிதாவின் நெருக்கம் அவனது ஆண்மைத் தீயை கொழுந்துவிட்டு எரிய வைத்துக் கொண்டிருந்தது.

அதன் வெம்மை தாளாமல் தவித்தவனின் ஆண்மையை மேடையில் நிகிதா அவனிடம் காட்டிய நெருக்கம் மேலும் தூண்டியது. நிகிதாவிற்காகத் தவித்த அவனது ஆண் உள்ளம் அவளை ஆண்டுவிடத் துடித்துக் கொண்டு இருந்தது. ஆனால் தான் தொட்ட இடத்தைக் கழுவ வேண்டும் என்று கூறியவருடன் குடும்பம் நடத்துவதா என்று தீபனின் ஆணவம் அவனைத் தடுத்துக் கொண்டு இருந்தது.

அவனது உள்ளப் போராட்டம் தெரியாத நிகிதா அவனை தன் விழிக்கும் கொண்டு வரும் வகை தெரியாமல் திகைத்துப் போய் நின்றிருந்தான். தன் உள்ளத்துக் காதலை தீபனிடம் தெரிவிக்க விடாமல் அவளது பெண்மை தடுத்தது. இருவரும் இருவேறு சிந்தனைகளுடன் ஒருவரை ஒருவர் நாடிய போதும் வாய்விட்டுச் சொல்லும் வகையறியாமல் திகைப்பில் இருந்தனர்.

''என்னங்க...''

''.....''

''என்னங்க... உங்களைத்தான்.''

''.....''

''உங்களைத் தான் கூப்பிட்டுக் கொண்டிருக்கிறேன் காது கேட்காத மாதிரி இருக்கீங்க'' கணவனின் தோள் தொட்ட நிகிதாவின் கையைத் தட்டி விட்டான் தீபன்.

''தொட்டுப் பேசற வேலையெல்லாம் வெச்சுக்காத.''

''ஏன்? நான் தொட்டுப் பேசினால் என்ன?''

''நான் தொட்டால் உனக்கு மட்டும் பிடிக்குதா? அதே போலத்தான் இதுவும். நீ தொட்டால் எனக்கும் பிடிக்கலை.''

''பிடிக்காதவர் எதுக்கு என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்களாம்? அதுவும் நித்யா வேரைச் சொல்லி மிரட்டினீங்களே?''

''அப்ப என்னோட மிரட்டலுக்குப் பயந்துதான் நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்ட... இல்ல?'' அதட்டலாகக் கேட்டான் தீபன். இந்த இரண்டு நாட்கள் நிகிதா காட்டிய நெருக்கம் உண்மையா இல்லையா என்று அவனது உண்ணம் அவனைக் கேள்வி கேட்டது.

''சொல்லுடி. என்னோட மிரட்டலுக்கும் பயந்து தான என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்ட?''

''அது மிரட்டின உங்களுக்குத்தான் தெரியும்.''

''நான் கேட்டது உன்னைப் பத்தி'' அழுத்தமாகக் கேட்ட தீபனை எண்ணி கோபம் வந்தது நிகிதாவிற்கு.

''நான் மிரட்டலுக்கு பணியணும்னுதான நீங்க எதிர்பார்த்தீங்க. இப்ப என்னமோ நான் தப்புப் பண்ணின மாதிரி என்னைக் கேள்வி கேக்குறீங்க. நீங்க நியாயமானவரா இருந்திருந்தா என்கிட்ட வந்து பிடிச்சிருக்கான்னு கேட்டுட்டுல்ல கல்யாணம் பண்ணியிருக்கணும்.''

''தீபன் யாரிடமும் போய் பிச்சை கேட்டுப் பழக்கம் இல்லை.''



''என்னுடைய விருப்பம் உங்களுக்கு பிச்சையாத் தோணுதா. அது என்னுடைய உரிமை இல்லையா?''

''என்னடி பெரிய உரிமை? நான் பாட்டுக்குப் பீச்சுல உட்கார்ந்துட்டு இருந்தவன் மேல பந்தைத் தூக்கிப் போட்டு விளையாடிவிட்டு, போதாக்குறைக்கு கன்னத்தில அறை வேற கொடுத்துட்டு நீ பேசாம போயிடு. நான் வாயில் கையை வெச்சுக்கிட்டு பச்சப்புள்ளையாட்டம் உட்கார்ந்து இருக்கணுமா? தீபன் மேல கையை வெச்சா என்னாகும்னு உனக்குக் காட்டத்தான்டி உன்னைக் கல்யாணம் பண்ணிக்க முடிவெடுத்தேன். என்னை யாருன்னு நினைச்ச?'' கோபத்தில் என்ன பேசுகிறோம் என்று தெரியாமல் வார்த்தைகளை விட்டு விட்டான் தீபன்.

அப்ப என்னை விரும்பி நீங்க கல்யாணம் பண்ணிக்கலை? வழி வாங்கத்தான் பண்ணியிருக்கீங்க.''

''ஆமான்டி. இப்ப அதுக்கு என்னாங்கிற?''

''நீங்க பழிவாங்குறதுக்கு வேற இளிச்சவாய்ச் சிறுக்கி எவளையாவது பாருங்க. நிகிதா அதுக்கு சரிவர மாட்டா. உங்களுக்கு மட்டும் தான் சுயமரியாதை இருக்கா? எனக்கில்லையா? பத்துப் பேர் பார்க்க என் கையைப் பிடிச்சு இழுப்பீங்க... நான் பல்லைக் காட்டி ஈன்னு இளிச்சுக்கிட்டு நிக்கணுமா?''

''அதுக்காக என்னை அறைஞ்சுடுவியா?''

''உங்க நல்ல நேரம், அதோட விட்டுட்டேன். இல்லேன்னா தொட்ட கையை ஒடிச்சிருப்பேன்'' தெனாவெட்டாக கூறிய நிகிதாவை கூர்ந்து பார்த்தான் தீபன்.

"அப்ப தொட்டால் கையை ஒடிச்சுடுவ..."

"நான் அது... வந்து... நான் அன்னிக்கு நடந்ததைச் சொன்னேன்."

"இன்னிக்கு நடந்தா... சொல்லுடி... இன்னிக்கு நடந்தா என்ன செய்வ?" கூறிக்கொண்டே தீபன் மெதுவாக நிகிதாவை அணுகினான்.

"வேண்டாங்க... இது சரியில்ல" பின்வாங்கிய நிகிதாவின் கரம் பற்றி இழுத்தான் தீபன். இழுத்தவுடன் தன்மேல் பூமாலையாய் சரிந்த நிகிதாவின் காதோரமாய்.

"எனக்கு நான் சொல்வது தான் சரி" என்று கூறிக்கொண்டே அவளை அள்ளிக் கட்டிலில் கிடத்தி நிகிதாவின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் அவள் மேல் பரவிப் படர்ந்தான் தீபன். இரண்டு நாட்களாகத் தவித்த தன் ஆண்மையை திருப்திபடுத்தும் வகையறியாமல், கோபத்தைக் கேடயமாக்கி அதற்குள் குளிர்காய நினைக்கும் அவனது நிலையைத் தடுக்கும் வகை அறியாமலும், அவன் தொட்டவுடன் பாகாய் உருகத் தயாராக இருந்த தன் உடலை எண்ணிய தவிப்பாலும் நிகிதா அவனுடன் போராட விரும்பாமல் தீபனின் விருப்பங்களுக்கு நாணத்துடன் இசைந்து கொடுத்தாள்.

நிகிதாவின் இணக்கத்தை எண்ணி வியந்தாலும் அவளை விட்டு விலக முடியாமல் மேலும் தாபத்துடன் முன்னேறத் துவங்கினான் தீபன். இத்தனை வருடங்களாக அறியத் துடித்த அனைத்தையும் அறிந்து கொண்டு முழுமையாக அவளை ஆண்டு முடித்தபின் தீபன் திருப்தியுடன் நிகிதாவின் நெற்றியில் முத்தமிட்டு



விலகினான். அவன் முகம் பார்க்க நாணிய நிகிதா அவனுக்கு முதுகு பாட்டி திரும்பி படுத்தாள்.

"ஏன்டி, இப்பவும் என் முகம் பார்க்கப் பிடிக்கலியா" பின்னிருந்து அணைத்துக் கேள்வி கேட்ட தீபனுக்கு பதிலளிக்காமல் தலையணையில் முகம் புதைத்தாள் நிகிதா.

நடந்தவை எல்லாவற்றையும் அவள் நினைத்து இருந்தால் தடுத்திருக்கலாம். ஆனால் அனைத்தையும் அவளும் விரும்பியே ஏற்றுக் கொண்டாள் என்பதை அறியாத தீபன் குற்ற உணர்ச்சி மேலோங்க அவளை விட்டு விலகிப் படுத்துக் கொண்டான்.

# 29

காலை எழுந்தவுடன் தீபனின் விழிகள் ஆவலுடன் நிகிதாவைத் தேடியது. அறையில் அவளைக் காணாத ஏமாற்றத்துடன் படுக்கையில் இருந்து எழுந்தான் தீபன். இரவின் நினைவில் அவனது உடல் சிலிர்க்க, மனம் அவளை உடனே பார்க்க விரும்பியது. அறையை விட்டு வெளியேறி படியிறங்கிய தீபனின் உள்ளம் நிகிதா தன்மேல் கோபமாக இருப்பாளோ என்ற எண்ணத்தில் அஞ்சியது.

"அம்மா நிகிதா. மாப்பிள்ளைக்குக் காபி குடு" மருமகளைப் பார்த்த அருணாச்சலம் கிச்சனை நோக்கி குரல் கொடுத்தார்.

''இந்தாங்கண்ணா காபி. அண்ணி உள்ளே வேலையா இருக்காங்க'' காபியை நீட்டிய வள்ளியை ஏமாற்றமாக பார்த்த தீபனை புருவங்கள் உயர யோசனையாகப் பார்த்தாள் நித்யா.

''என்ன மாமா டல்லா இருக்கீங்க? உடம்பு சரி யில்லையா?'' கேட்ட நித்யாவிற்கு சிரிப்பைப் பதிலாக கொடுத்தான் தீபன்.

அக்காவுக்கும், மாமாவிற்கும் இடையே எதுவோ சரியில்லை என்ற எச்சரிக்கை தோன்றியது நித்யாவின் உள்ளத்தில். அவன் கிச்சனில் இருந்த நித்யாவிடம் போய் மெல்லிய குரலில் கடிந்து கொண்டு ஆரம்பித்தாள்.

''இப்ப இங்க நீதான் எல்லா வேலையும் பார்த்தாக ணும்னு கட்டாயம் எதுவும் இருக்காக்கா?'' கோபமாக கேட்ட தங்கையை வியப்புடன் பார்த்தாள் நிகிதா.

''இல்லையே! ஏன்டி அப்படிக் கேட்கிற?''

''அப்புறம் எதுக்கு மாமாவுக்கு காபி குடுக்கக்கூட நேரமில்லாதவள் போல கிச்சனில் வந்து நிக்கிற?''

''ஏன்டி அதுக்காக நான் கிச்சன் பக்கமே வரக்கூடாதா? அதான் காபியை வள்ளிகிட்ட குடுத்துவிட்டேன்ல?''

''அது உன் வேலை அக்கா. அதை நீதான் செய்யணும்.''

''இத்தனை வருசமா இதுதானே நடந்தது? நான் இங்க வந்து ரெண்டே நாள்தான்டி ஆகுது.''

''ரெண்டு நிமிசம் ஆனாலும் அந்த உரிமை உனக்கு மட்டும்தான் இருக்குக்கா.''

''பெரிய கிழவி மாதிரி பேசாதேடி. போ... நீ போய் ஹால்ல உட்காரு.''



''சில நேரங்களில் சின்னப் பிள்ளைகளுக்குப் புரியறது கூட பெரியவங்களுக்குப் புரியமாட்டேங்குதே...''

''இப்ப என்னை என்னதான்டி செய்யச் சொல்ற?''

''மாமாகிட்டப் போ. அவரிடம் நாலு வார்த்தை பேசிட்டு வாக்கா. அவரைப் பார்த்தால் பாவமா இருக் குக்கா. உன்னை ரொம்ப மிஸ் பண்ணுறார்க்கா'' கூறிய நித்யா அக்காவின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு ஹாலுக்கு வந்தாள்.

தங்கையின் பின்னால் தயக்கத்துடன் வந்த நிகிதாவின் முகத்தை ஆவலுடன் பார்வையிட்டான் தீபன். வெட் கத்தால் அவன் முகம் பார்க்க முடியாமல் தரையைப் பார்த்துக் கொண்டிருந்தாள் நிகிதா. தன் முகம் பார்க்கப் பிடிக்காமல் தரையைப் பார்க்கும் மனைவியை நோக்கிய தீபனின் முகம் தாங்க முடியாத வேதனையைப் பிரதி பலித்தது.

இந்த நாடகத்தை வேடிக்கை பார்த்தவாறு அமைதி யாக இருந்த நித்யா இதனை முடிவுக்குக் கொண்டு வர மனதிற்குள் முடிவெடுத்துக் கொண்டாள்.

''நாங்க இன்னிக்கு நைட்டே சென்னை கிளம்ப வேண்டும் மாப்பிள்ளை'' கூறிய அருணாச்சலத்தை நிமிர்ந்து பார்த்த தீபனின் உள்ளம் நிகிதாவும் அவர்கள் உடன் கிளம்பிச் சென்று விடுவாளோ என்று அச்சம் கொண்டது.

''அதுக்குள்ள என்ன மாமா அவசரம்? இன்னும் ரெண்டு நாள் கழிச்சு கிளம்பலாமே?''

''இல்லை மாப்பிள்ளை. அங்க சென்னையில் எல்லாம் போட்டது போட்டபடி கிடக்கும். நாங்க போய் அத்

தனையையும் சரிபண்ணவே ரெண்டு நாள் ஆகிவிடும். அதுக்குள்ளே நீங்களும் மறுவீடு வந்தீங்கன்னா கையோடு பலகாரக் குடம் கொண்டு வந்துடலாம்.''

''பலகாரக் குடமா... அது எதுக்கு'' கேட்ட தீபனின் கேள்விக்கு வந்த சிரிப்பை மரியாதையுடன் அடக்கிக் கொண்டாள் பர்வதம்.

''அது ஒண்ணும் இல்லீங்க தம்பி. இங்க உங்களுக்குத் தேவையான சாமான் செட்டோட கொஞ்சம் பலகாரமும் செய்து கொடுத்து விடுவோம். அதை நீங்க உங்களுக்குத் தெரிஞ்ச எல்லோருக்கும் கொடுத்து விடலாம்'' பேசிய பர்வதத்தை இடைமறித்தான் தீபன்.

''அதெல்லாம் ஒண்ணும் வேணாம் அத்தை. இங்க எங்களுக்கு வேண்டியது எல்லாம் இருக்கு. அந்தப் பாத்திரம், பலகாரம் எல்லாத்தையும் பத்திரமா அங்கயே வெச்சுடுங்க. நித்யா கல்யாணத்துக்கு நம்ம எல்லோரும் சேர்ந்து அதையெல்லாம் அவ வீட்டுல கொண்டுபோய் வெச்சுட்டு வந்திரலாம்'' கூறிய தீபனைப் பார்த்துப் பழிப்புக் காட்டிச் சிரித்தாள் நித்யா.

''அதுவும் சரிதான் மாப்பிள்ளை. இந்த வாயாடிக்கு ஊசிப்போன பலகாரம்தான் லாயக்கு.''

''புது மாப்பிள்ளையைப் பார்த்த ஆணவத்துல ஆடாதீங்கப்பா. நாளையில் இருந்து நீங்க என் கூடத்தான் இருந்தாகணும். ஞாபகம் இருக்கட்டும்.''

''என்ன நித்யா நீ? இதுக்கெல்லாம் கோபித்துக் கொள்ளலாமா? நாமென்ன அப்படியா பழகியிருந்தோம்'' பயந்தவர் போல நடித்த தந்தையை பார்த்து சிணுங்கினாள் நித்யா.



''சரிசரி விடு நித்யா. நாம பேசி ஒரு முடிவுக்கு வரலாம். வேணும்னா இப்படிச் செய்யலாமா? அந்தப் பலகாரத்தை எல்லாம் உனக்கு வர்ற மாப்பிள்ளைக்குக் கொடுத்திடலாம். என்ன சொல்ற'' நித்யாவிடம் கூறிய தீபன் வாய்விட்டுச் சிரித்தான்.

''அஸ்கு புஸ்கு. அதுக்கெல்லாம் வேற ஆளைப் பாருங்க. நான் என்ன உங்க பொண்டாட்டி நிகிதா மாதிரியா? எனக்கு வர வேண்டிய சீர் வரிசையை எல்லாம் லிஸ்ட் போட்டு எழுதி வைச்சுக்கிட்டு வசூல் பண்ணிரமாட்டேன்.''

''லிஸ்டா... வசூல் பண்ணுவியா... ஹா... ஹா... ஹா...'' வயிற்றைப் பிடித்துக் கொண்டு குலுங்கிச் சிரித்த தீபனை பாசத்துடன் பார்த்தாள் நித்யா.

அன்பிற்கு குழந்தை போல அடிபணியும் தீபனை ஏங்கவிடும் நிகிதாவின் மேல் கோபம் கோபமாக வந்தது அவளுக்கு. இந்த மாதிரி ஒரு கணவனை அடைய நிகிதா மிகவும் புண்ணியம் பண்ணியிருக்க வேண்டும் என்று தோன்றியது நித்யாவிற்கு.



## 30

''நான் உள்ளே வரலாமா மாமா?'' மெதுவாக தலையை நீட்டிக் கேட்ட நித்யாவை பார்த்த தீபன் புருவங்களை உயர்த்தினான்.

''இது என்ன கேள்வி நித்யா? நீ உள்ளே வர என்னிடம் பர்மிஷன் கேட்கணுமா என்ன... வாவா.''

அறைக்குள் வந்த நித்யா அறைச்சுற்றி கண்களை ஓட்டினாள். முன்புறமாய் ஒரு ஹாலும் அதைத்தாண்டி பெட்ரூமும், அதற்கு சைடிலேயே உடைமாற்றும் அறையோடு கூடிய பாத்ரூமுமாக ஒரு குட்டி பிளாட் போல கச்சிதமாக இருந்தது அந்தப் பகுதி.

''உங்க ரூம் ஒரு குட்டி பிளாட் போல இருக்கே அத்தான். ரொம்ப அழகா இருக்கு. ஒவ்வொரு பொருளுமே பயங்கர வேலைப்பாட்டோட அருமையா இருக்கு.''

''அது பயங்கர வேலைப்பாடு இல்லை நித்யா. அழகான வேலைப்பாடு.''

''அதைத்தான் மாமா சொன்னேன் நான்.''

''சரி சரி உட்காரு. என்ன திடீர்னு மாமாவை பார்க்க வந்திருக்க? இப்பத்தான கீழ பேசிக்கிட்டு இருந்தோம்?''

''இல்ல மாமா. நான் உங்ககிட்ட கொஞ்சம் தனியா பேசணும். அதான்...''

''என்கிட்ட தனியா பேச என்ன இருக்கு நித்யா? உனக்கு ஏதாவது தேவையா? தாராளமா கேளு. அது எதுவாக இருந்தாலும் வாங்கிக் கொடுக்கிறேன்.''

''எனக்கு எதுவும் வேண்டாம் மாமா. நான் உங்ககிட்ட பேச வந்தது அக்காவைப் பத்தி...''

''நிகிதாவைப் பத்தியா? அவளைப் பத்தி நாம தனியாப் பேச என்ன இருக்கு நித்யா? அத்தோட என் பொண்டாட்டியைப் பத்தி அடுத்தவங்க சொல்லி



தெரிஞ்சுக்க வேண்டிய அவசியம் இல்லை நித்யா'' கண்டிப்புடன் வெளிவந்தது தீபனின் குரல்.

''ஸாரி மாமா. நான் சொல்வதைக் கொஞ்சம் பொறுமையாக் கேளுங்களேன். ப்ளீஸ்...''

''சரி சொல்லு...''

''அக்கா ரொம்ப நல்லவ மாமா. அவ மனசு ரொம்ப சாப்ட்.''

''அதுதான் தெரியுமே. இத சொல்லவா வந்த.''

''சொல்றதை முழுசாகக் கேளுங்க மாமா. உங்க பொண்டாட்டி மனசு சாப்ட்டுன்னு தெரிஞ்சாப் போதுமா. அவ மனசில என்ன இருக்குன்னு தெரிஞ்சுக்க வேணாமா?''

''என்ன நித்யா சொல்ற? அவ வேற யாரையாச்சும் லவ்...'' வார்த்தையை முடிக்க முடியாமல் கோபத்தில் முகம் சிவந்த தீபனைப் பார்த்த நித்யா தன் தலையில் மெதுவாக அடித்துக் கொண்டாள்.

''பேருதான் பெரிய' பிஸினஸ்மேன். ஆனா நீங்க சரியான மக்கு மாமா. உங்க பொண்டாட்டி நிகிதா உங்களைத்தான் லவ் பண்றா'' கூறிய நித்யாவின் வார்த்தைகளை நம்பாமல் பார்த்தான் தீபன்.

''யாரு?... உங்க அக்கா?... என்னை...? லவ் பண்ணிறக் கிண்ணிறப் போறா. இதை வேற யாருகிட்டயாவது போய் சொல்லு நித்யா. அவங்கதான் நம்புவாங்க.''

''பார்த்தீங்களா? நீங்க இப்படிப் பேசிவிடுவீங்கன்னு தான் அவ தன் காதலை சொல்லாம மறைச்சு வெச்சுருக்கா. நீ பேசினத என்னாலேயே தாங்க முடியலியே.

இந்த வார்த்தைகளைக் கேட்டா அவ எவ்வளவு துடிச்சுப் போயிருவா?''

''நித்யா...?''

''நான் சொல்றதெல்லாம் சத்தியமான உண்மை மாமா. என்னை தயவு செய்து நம்புங்க.''

''இல்லை நித்யா. நீ உங்க அக்காவ இன்னும் சரியா புரிஞ்சுக்கல. அவ என்னோட மிரட்டலுக்காக என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டவ.''

''உங்க மிரட்டலுக்குப் பயந்தா... என் அக்காவா...? நீங்க வேற மாமா, ஜோக்கெல்லாம் அடிச்சுக்கிட்டு'' சிரித்த நித்யாவை கோபமாகப் பார்த்தான் தீபன்.

''உங்க அக்காவே என்கிட்ட சொன்னா நித்யா. நீ போய் அவளையே கேட்டுப்பாரு.''

''நீங்க சொல்றதெல்லாம் நடக்க கண்டிப்பா சான்ஸே இல்ல மாமா. நிகிதா சரியான ராங்கி ரங்கம்மா மாமா. அவபோயி உங்க மிரட்டலுக்கு பயந்தாளா? அதெல்லாம் சும்மா...'' சிரித்தாள் நித்யா.

''மாமா, உங்களை மாதிரி பெரிய பிஸினஸ்மேன் களுக்கு மட்டும் எதிரிங்க அதிகம் இல்லை. எங்க அக் காவைப்போல ரொம்ப அழகான பொண்ணுங்களுக்கும் எதிரிகள் அதிகம்தான். அதிலும் எங்க நிகிதா யாராவது ஜொள்ளுவிட்டாலே முறைக்க ஆரம்பிச்சுடுவா. அப் படிப்பட்டவ, எத்தனை பேரை சமாளிக்கணும் தெரி யுமா? ஆனா, தில்லா அத்தனை பேரையும் எதிர்த்து நின்று சமாளிச்சுட்டு வந்திடுவா. யாரும் அவளை



மிரட்டவெல்லாம் முடியாது. அவ மனசு விரும்பினதால மட்டும்தான் உங்களை அவ கல்யாணம் பண்ணிக்க சம்மதம் சொன்னா.''

''அப்புறம் எதுக்கு அப்படி...''

''வேற என்ன மாமா சொல்வா? நீங்க அவகிட்ட ஒருமுறையாவது என்னை பிடிச்சிருக்கான்னு கேட்டீங் களா? கேட்டிருந்தால் அவ தன் காதலை உங்க கிட்ட சொல்லியிருப்பா. நீங்கதான் அதுக்கான முயற்சி கூட பண்ணலியே...''

'என்கிட்ட பிடிச்சிருக்கான்னு கேட்டுட்டுல்ல கல் யாணம் பண்ணியிருக்கணும்' என்று சீறிய நிகிதாவின் உருவம் மனக்கண்ணில் தோன்றியது தீபனுக்கு. அவன் தலையை பிடித்துக்கொண்டு சோபாவில் சிலையாக அமர்ந்து விட்டான்.

''மாமா. அக்கா எவ்வளவு தைரியசாலியே உள்ளுக் குள்ள அவ்வளவு மென்மையானவ. அவ உங்கமேல உயிரையே வெச்சிருக்கா. ஆனா அதை தானா வந்து உங்ககிட்ட சொல்ல தயங்குறா. அன்னிக்கு பீச்சுல உங் களைப் பார்த்துட்டு வந்த அன்னிக்கு நைட்டெல்லாம் தூங்காம மென்டல் மாதிரி உட்கார்ந்திருந்தா. அவ யார்கிட்டேயும் இந்த மாதிரி சலனப்பட்டு நான் பார்த்ததில்லை. நான் கூட உங்களைக் கல்யாணம் பண்ணிக்க வேண்டாம்னு எவ்வளவோ தடுத்துப் பார்த்தேன். ஆனா அவ பிடிவாதமா மாட்டேன்னுட்டா.''

''நீ அவளைத் தடுத்தியா? எதற்காக நித்யா?''

''என்னை மன்னிச்சுடுங்க மாமா. நீங்க அக்காவ பழிவாங்கத்தான் கல்யாணம் பண்ணிக்க விரும்பறிங்

களோன்னு நான் சந்தேகப்பட்டேன்'' நித்யாவின் வார்த்தைகளைக் கேட்ட தீபனின் உள்ளம் திடுக்கிட்டது. அதைத்தானே அவன் நேற்று நிகிதாவிடம் சொன்னாள் என்று அவள் உள்ளம் புலம்பியது.

''ஆனா அதுக்கு நிகிதா என்ன சொன்னாள் தெரியுமா? அவர் என்மேல உயிரையே வெச்சிருக்கார். என்னோட காதல் அவருக்குத் தெரியாவிட்டால் என்ன? அவரோட காதலை ஆதாரமாகக் கொண்டு வாழ்ந்திடுவேன்னு சொன்னா மாமா. அவ உங்க மேல அவ்வளவு நம்பிக்கை வெச்சிருக்கா. அதனால அவ மனசு நோக நடந்துக்காம அவளைப் புரிஞ்சு நடந்துக்கங்க மாமா. ப்ளீஸ்'' கண்கலங்கக் கேட்ட நித்யாவின் தலையை பாசத்துடன் தடவிக்கொடுத்த தீபனின் கண்களும் கலங்கியது.

''சத்தியமா நித்யா. உங்க அக்கா என்மேல் இவ்வளவு அன்பு வெச்சிருக்கிறது தெரிஞ்சும் அவளை நான் நோகடிப்பேனா. கண்ணின் மணியா வெச்சுப் பாதுகாப்பேன். என்னை நம்பு.''

## 31

பெற்றோரை கையசைத்து வழியனுப்பிவிட்டு உள்ளே வந்த நிகிதாவின் நெஞ்சம் தாங்க முடியாத வேதனையில் துவண்டது. ஆளரவமில்லாத காட்டில்



தனித்து விடப்பட்டவளின் வேதனையோடு கால்கள் நடுங்க ஹால் சோபாவில் அமர்ந்து கண்களை மூடிச் சாய்ந்து கொண்டாள். கண்களில் நிறைந்த கண்ணீர் கன்னங்களில் வழிய அமர்ந்திருந்த அவளது நிராதரவான கோலம் கண்ட தீபன் எதுவும் பேசாமல் அவள் அருகில் அமர்ந்து நிகிதாவின் தோள்களில் கைபோட்டு அருகில் இழுத்து அணைத்துக் கொண்டான்.

பெரும் நிம்மதியோடு தோள் சாய்ந்த நிகிதாவின் உச்சந்தலையில் மென்மையாக முத்தமிட்டான் தீபன். எவ்வளவு நேரம் இருவரும் அப்படியே உட்கார்ந்திருந்தார்களோ அவர்களுக்கே தெரியாது.

''தம்பி, லேட்டாகிருச்சு, டிபன் சாப்பிட வாங்க'' என்ற பொன்னம்மாளின் குரல் இருவரையும் தன் நிலைக்குத் திரும்ப வைத்தது.

''எல்லாத்தையும் டைனிங் டேபிளில் எடுத்து வெச்சுட்டு நீங்க போங்க சித்தி. நாங்க அப்புறம் சாப்பிட்டுக்குறோம்'' மனைவியை விட்டு விலக மனம் இல்லாமல் கூறினான் தீபன்.

''சரிங்க தம்பி'' அவர்களுக்கு இடையூறாய் இருக்க விரும்பாத பொன்னம்மாள் விலகிச் சென்றாள். வெகு நேரம் மனைவியை அணைத்தபடியே அங்கேயே அமர்ந்திருந்த தீபனின் உள்ளம் ஆர்ப்பாட்டம் இல்லாத தெளிந்த நீரோடையாய் அமைதியாகி இருந்தது.

சிறிய வயதில் இருந்து பெற்றோர் இல்லாமல் வளர்ந்த தனக்கே அவர்களது அருகாமையை எண்ணி மனம் ஏங்கும்போது நேற்றுவரை பெற்றோரின்

அரவணைப்பில் இருந்து வெளிவந்து பழக்கம் இல்லாத நிகிதாவிற்கு அவர்களது பிரிவு தரும் வேதனை எப்படி இருக்கும் என்பதை தீபனது உள்ளம் புரிந்து கொண்டது. அவள் தனக்கே உரித்தானவள் என்ற சுயநலம் இருந்த போதிலும் அவளது ஆனந்தமே அவனுக்கு மிகவும் முக்கியமாகப்பட்டது. வீடு முழுவதும் என்றுமில்லாத பேரமைதியுடன் இருப்பது போல அவனுக்கே மிகவும் தனிமையாகத் தோன்றத் துவங்கியது.

''நிகிதா... டேய்... நிமிர்ந்து என்னைப் பாரேன்.''

''.....''

''நிகிதா... இப்ப கண்ணைத் துடைச்சிட்டு நிமிர்ந்து உட்காரப் போகிறாயா இல்லையா? எனக்கு ரொம்ப கஷ்டமா இருக்குடா'' குழைந்தான் தீபன்.

''ஏன், நான் ரொம்ப வெயிட்டா இருக்கேனா?'' கணவனை விட்டு விலகாமல் கேலியாகக் கேட்டாள் நிகிதா.

''வெயிட்டா...? பூமாலை போல மென்மையாய் இருக்க.''

''அப்புறம் ஏன் விலகச் சொல்றீங்க'' சிணுங்காமல் கேட்ட மனைவியின் கன்னத்தில் ஆசையுடன் முத்தமிட்டான் தீபன்.

''இப்படியே உட்கார்ந்திருந்தால் போதுமா? எனக்கு பசிக்குதுடி'' தனக்குப் பசிக்காவிட்டாலும் மனைவிக்காகப் பொய் சொன்னான் தீபன்.

அவசரமாக விலகி எழுந்தவள் வேகமாக டைனிங் டேபிளுக்கு கணவனை இழுத்துச் சென்று அமரவைத்து



அவன் முன்னால் இருந்த தட்டில் உணவை பரிமாறிய நிகிதாவின் செயல் தீபனுக்கு அவனுடைய தாயின் செயலைப் போல தோன்றியது. அவன் நிகிதாவின் கரம் பற்றித் தன் அருகில் அமரவைத்தான்.

''எனக்கு வேணும்கிறத நான் போட்டுக்கறேன். நீயும் என் கூடவே உட்கார்ந்து சாப்பிடு'' அவள் முன் தட்டை நகர்த்திய தீபன் மற்றொரு தட்டில் தனக்கு உணவினை வைத்துக் கொண்டு நிகிதாவைப் பார்த்தான்.

''நீங்க சாப்பிடுங்க. எனக்கு பசியில்லை. நான் வெறும் பால் மட்டும் குடிக்கிறேனே'' சாப்பிட்டு பிளேட்டை தள்ளிய மனைவியின் கரம்பற்றித் தடுத்தான் தீபன். அவளை அருகில் இழுத்து ஒவ்வொரு கவளமாக உணவை ஊட்டிவிடத் தொடங்கிய தீபனைப் பார்த்த நிகிதா, தானும் அவனுக்கு சாப்பாட்டை எடுத்து ஊட்டத் தொடங்கினாள். இருவரும் மனமும் வயிறும் நிறைய உணவை உண்டபின் தீபன் வேகமாக தங்கள் அறைக்குச் சென்றுவிட நிகிதா டிவியை ஆன் பண்ணி விட்டு சோபாவில் சாய்ந்து கொண்டாள்.

திரையில் தோன்றிய காட்சியில் மனம் லயிக்காமல் நிகிதாவின் உள்ளம் நித்யாவையும், பெற்றோரையும் சுற்றி சுற்றி வலம் வரத் துவங்கியது. என்னதான் சமாதானம் சொல்லிக் கொண்டாலும் அலைபாயும் மனதை அடக்கும் வகையறியாமல் நிகிதா திகைப்புடன் அமர்ந்திருந்தாள்.

''நிகிதா... தூக்கம் வரவில்லையா? மேலே வா'' அழைத்த தீபனின் குரலுக்கு இயந்திரம் போல எழுந்து

மாடியேறிய மனைவியைப் பார்த்த தீபனின் மனம் இளகியது.

மனைவியின் இடையணைத்து அறைக்குள் அழைத்துச் சென்றவன் அவளை தன் கையணைப்பி லேயே கட்டிலில் அமரச் செய்து அருகில் அமர்ந்து மடியில் மனைவியைச் சாய்த்துக் கொண்டான் தீபன். கணவனின் அணைப்பில் மனவேதனை குறைவதை வியப்புடன் உணர்ந்த நிகிதா அவனது அணைப்பில் மேலும் விரும்பி அடங்கிக் கொண்டாள்.

''நிகிதா, நீ என்னை லவ் பண்ணினாயாடி?'' மெது வாக முத்தமிட்டபடிக் கேட்ட கணவனின் குரலில் சிலிர்த்தாள் நிகிதா.

''என்ன...! திடீர்னு சாருக்கு என் மனதைத் தெரிந்து கொள்ள ஆசை வந்திருக்கு?''

''ஐ ஆம் சாரிடா. எனக்கு ஆரம்பத்திலேயே உன்னிடம் உன் விருப்பத்தைக் கேட்கத்தான் ஆசை நிகிதா. ஆனால் நான் கேட்டு நீ மறுத்து விட்டால் என்ன பண்ணுவது என்றுதான்...''

''மறுத்துவிட்டால் உங்கள் ஈகோ தாங்கிக் கொள்ளாது என்பதால்தானே?''

''ஈகோவெல்லாம் இல்லைடி. உன்னை முதன் முதலா பார்த்தவுடனே எனக்கு உன்மேல் ஈர்ப்பு வந்துருச்சுடி. அதனாலதான் நான் உன்னை விழுகாமல் பிடிக்கிற சாக்கில் தொட்டேன். ஆனால் நீ அன்னிக்கு பேசின பேச்சுக்களைக் கேட்டுத்தான்...'' அன்றைய நினைவில் முகம் கருத்து விலகின தீபனை இழுத்து அணைத்துக் கொண்டாள் நிகிதா.



''உங்களுக்கு ஒண்ணு தெரியுமா? நான் சுத்த சைவம்.''

''அப்படியா, அப்ப என்பாடு திண்டாட்டம்தான்.''

''அதோட மீன் வாடையென்றால் சுத்தமா எனக்கு ஒத்துக்காது. பக்கத்து வீட்டில் மீன் பொறிச்சாலே ஜன் னல் எல்லாம் மூடிட்டு வீட்டுக்குள்ளேயே உட்கார்ந்து வாந்தி எடுத்திட்டு இருப்பேன்.''

''என்னடி சொல்ற...?'' நிகிதா சொல்வதன் அர்த்தம் பாதி புரிந்தும் புரியாமலும் விழித்தான் தீபன்.

''என் மக்குப் புருஷா... அன்னிக்கு நீங்க மீன் சாப்பிட்ட கையோட தொட்டதால்தான் நான் வாந்தியெடுத்து விலகி நின்னேன். அது புரியாம நீங்க மேல மேல பேசி சண்டையிழுத்து...'' வாக்கியத்தை முடிக்காமல் கண வனின் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள் அவள்.

''ஏய்... இங்க பாருடி... ஏய்... நீ இத்தனை விசயம் இருந்தும் என்னிடம் சொல்லாமல் மறைச்சு என்னை அலைக் கழிச்சுட்ட இல்ல'' இது புரியாம நான் உன்னை விட்டு விலக முடியாமலும், உன் பக்கம் வர முடியா மலும் துடித்தேன்டி.''

''ஆமாம் பக்கம் முடியாமல் துடித்தவர்தான் நேத்து அப்படி...'' வெட்கத்தில் சிவந்த மனைவியை இழுத்து அணைத்து மனம் விட்டுச் சிரித்தான் தீபன்.

''அதுவும் கூட உன்னை சேர துடித்த ஆசையை கட்டுப்படுத்த முடியாமல்தான்டா. ஆனால் இப்பத்தான் எனக்கு உன்னைப்பத்தி முழுமையா தெரிஞ்சுருச்சே. இனி எந்தத் தடையும் இல்லைதானே'' மனைவியின் மனதைத் தெரிந்துகொண்ட கர்வத்துடன் அவளை முழுமையாகத் தெரிந்து கொள்ள ஆவேசத்துடன்

அருகில் இழுத்துப் படர்ந்தான் தீபன். கணவனின் ஆவேசத்திற்கு முழு மனத்துடன் ஆசையாக ஒத்துழைத்து அவனது ஆனந்தத்தை முழுமையாக அவனுக்குத் தந்தாள் அவனது மனைவி. காலைவரை தொடர்ந்த தீபனின் தேடல் விடிகாலைப் பொழுதில் முடிவடைய ஆனந்த அயர்ச்சியுடன் மனைவியை அணைத்தபடி உறங்க சென்றான் தீபன்.

## 32

அடுத்தடுத்து வந்த நாட்கள் மிகவும் ஆனந்தமாகவும் அமைதியாகவும் கழிந்தன தீபனுக்கும் நிகிதாவிற்கும். காலை எழுந்தவுடன் மனைவியை கொஞ்ச ஆரம்பிக்கும் தீபன் அலுவலகம் செல்லும் வரை கொஞ்சிக் கொண் டிருப்பான். மாலை அலுவல் முடிந்து வந்தவுடன் மனை வியை அழைத்துக் கொண்டு வெளியில் எங்காவது சென்று இரவில்தான் வீட்டிற்குத் திரும்புவான். பகல் முழுவதும் வீட்டை பராமரிப்பது தொடர்பாக நிகிதா வுக்கு வேலை சரியாக இருக்கும்படி ஏதாவது ஒன்றைச் செய்து கொண்டிருப்பாள் நிகிதா.

நிகிதாவின் வரவுக்கு பின் வீடே தனி அழகுடன் மிளிர் வதைக் கண்டு மனமும், இதயமும் நிறைந்து வாழ்த்தும் உள்ளத்துடன் அவளைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கொண்டார்கள் பொன்னம்மாவும் வள்ளியும்.



இந்நிலையில்தான் நிகிதா தாயானாள். தன் மனைவி கருவுற்ற செய்தியைக் கேட்டதில் இருந்து அவளைவிட்டு விலகாமல், தொழில்களைக் கவனிக்க நம்பிக்கையான ஆட்களை நியமித்துவிட்டு மனைவியின் அருகிலேயே இருந்து அவளைத் தாங்கினான் தீபன்.

ஆயிரம் பேர் சுற்றி இருந்தாலும் கண்ணின் மணி போல கவனித்துக் கொண்டாலும் தாயாகப் போகும் ஒரு பெண்ணிற்கு தன் தாயின் நினைவு வருவதுதான் இயற்கை. நிகிதாவும் சோர்ந்து காணப்படுவதை உணர்ந்த தீபன் சில ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினான்.

சில நாட்களாக கணவன் தன் அருகில் இருந்து கவ னித்துக் கொள்ளாமல் வேலை வேலை என்று வெளி யில் சுற்றிவிட்டு இருட்டி வெகுநேரம் சென்ற பிறகே வீட்டிற்கு திரும்புவதை உணர்ந்து நிகிதாவின் நெஞ்சம் கோபத்தில் குமுறிக்கொண்டு இருந்தது.

''நிகிதா... சாப்பிட்டாயா? மாத்திரை எல்லாம் கரெக்ட் டயத்திற்குப் போட்டுக் கொண்டாயா இல்லையா?'' அருகில் அமர்ந்த கணவனை முறைத்தாள் நிகிதா.

''ரொம்ப அக்கறை இருக்கிற மாதிரி நடிக்க வேண் டாம். என்னை பார்த்துக்கொள்ள எனக்குத் தெரியும்.''

''என்னடி தெரியும் உனக்கு? இப்ப எதுக்கு இவ்வளவு கோபப்படற?''

''கோபப்படாம பின்ன கொஞ்சச் சொல்லுறீங் களாக்கும்.''

''ஏன்டி? என்னைக் கொஞ்ச மாட்டியா? அதுக்குள்ள உனக்கு எல்லாம் அலுத்துப் போச்சா?'' மனைவியை அணைத்துக் கொஞ்சிய தீபனின் மார்பில் முகம் புதைத்துக் கதறினாள் நிகிதா. அவளது கண்ணீர் கண்டு பதறிவிட்டான் தீபன்.

''நிகிதா... இங்கபாரும்மா... என் செல்லமில்ல நிமிர்ந்து என்னைப் பாரேன்... நிகிதா.''

''.....''

''இங்க பாருடி. நீ அழுதால் நான் தாங்க மாட்டேன்னு உனக்குத் தெரியாதா. இனிமேல் நீ இப்படி கண்ணீர் விட்டியானா நான் உயிரோட இருக்கறதுக்கு அர்த்தமே இல்லை நிகிதா'' கோபமாகப் பேசிய தீபனின் வார்த்தை களைக் கேட்ட நிகிதா அவசரமாக கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''இப்ப என்ன ஆச்சுன்னு இப்படி அழுகிற? முதல்ல சொல்லிவிட்டு அப்புறம் அழு'' மனைவியை அணைத்த வண்ணம் ஆதரவுடன் கேட்டான் தீபன்.

''இப்பல்லாம் என்னை உங்களுக்குப் பிடிக்கல இல்ல.''

''என்னடி சொல்ற? உன்னைப் பிடிக்காமல் போகுமா என்ன?''

''அப்புறம் எதுக்காக இப்படி என்னை விட்டுவிட்டு விலகிப் போறீங்க. பெத்தவங்க பக்கத்தில இல்லாத இந்த நிலைமையில நீங்கதான எனக்குத் துணை?''

''அதுக்கான ஏற்பாடுகளைச் செய்யத் தான்டி நான் வெளியில அலைஞ்சுட்டு இருந்தேன். நானே உன்கிட்ட இன்னிக்கு சொல்லலாம்னு இருந்தேன். அதுக்குள்ள நீ அழுது ஆர்ப்பாட்டம் செய்துட்ட.''

''ஏற்பாடா!''

''ஆமான்டி என் அழகுப் பொண்டாட்டி. நீ உங்க அம்மா அப்பாவை நினைச்சா ஏங்குறது எனக்குத் தெரியும்டி. நான்தான் விதிவசத்தால என் பெத்தவங்க ளோட பாசத்தையும், அரவணைப்பையும் இழந்துட்டேன். எல்லாரும் இருந்தும் நீ எதுக்காக இப்படி ஏங்கணும்?''



''அதுக்கு...?''

''அதுக்குத்தான் நான் நமக்காக சென்னையில் ஒரு பங்களாவ விலைக்கு வாங்கியிருக்கேன். நாம அடுத்த வாரமே அங்கு குடிபோகப் போகிறோம்.''

''நிஜமாக வாங்க...!'' ஆனந்தத்துடன் தீபனை நோக்கிய நிகிதாவின் முகம் மறுபடியும் மாறியது.

''இப்ப என்னடி ஆச்சு? உனக்கு இதில சந்தோஷம் இல்லையா நிகிதா?''

''எனக்கு ரொம்பச் சந்தோஷம்தாங்க. உங்களைக் கல்யாணம் செய்துக்க நான் போன ஜென்மத்துல புண்ணியம் பண்ணியிருக்கணும்.''

''ஐஸ் வெச்சது போதும். நீ இப்ப முகம் மாறினதுக்கு என்ன காரணம்னு சொல்லு.''

''அது வேற ஒண்ணும் இல்லீங்க. இங்க இருக்கற பிஸினஸ். அப்புறம் இந்த வீடு... இதை எல்லாம் விக்கப் போறீங்களா?'' வெகுளியான வேதனையோடு கேட்ட மனைவியை அணைத்துச் சிரித்தான் தீபன்.

''நீ எந்தக் காலத்தில இருக்க நிகிதா? நான் ஏன் இதையெல்லாம் விக்கணும். தீபனுக்கு இருக்கிற ஆள் பலத்துக்கு உலகம் முழுவதும் பிஸினஸ் பண்ணலாம். இங்க இருக்கற பிஸினசையெல்லாம் பார்த்துக்க தேவையான நபர்களை நியமிச்சிட்டேன்டி. வீட்டை

64632



பொன்னம்மாவும் அவ புருசனும் பார்த்துக்குவாங்க. அதனால நீ கவலைப்படாம வயிற்றில இருக்கற நம்ம குழந்தையை மட்டும் நினைச்சுக்கிட்டு ரிலாக்ஸா இரு. எல்லாத்தையும் பார்த்துக்க நான் இருக்கேன்ல'' கேட்ட கணவனின் மார்பில் எல்லையில்லா நிம்மதியுடன் சாய்ந்து கொண்டாள் நிகிதா.

தீபன் சொன்னபடியே மறு வாரமே மனைவியுடன் சென்னையில் குடியேறிவிட்டான். அந்த பங்களாவிற்கு அருகில் இருந்த மற்றொரு பங்களாவை வாங்கி அருணாச்சலம் பெயரில் பதிவு செய்து கொடுத்து அவர்களையும் அருகிலேயே குடி அமர்த்தி நிகிதாவைப் பார்த்துக் கொள்ளச் செய்தான். தீபன் மட்டும் மாத மொருமுறை பிளைட்டில் வந்து பெங்களூரில் இருக்கும் தொழில்களைக் கவனித்து விட்டு மாலை பிளைட்டில் மனைவியிடம் திரும்பி விடுவான்.

பக்கம் வர துடித்த தனது சொர்க்கமான வாழ்வையும், அழகான மனைவியையும் தன் கைப்பிடிக்குள் வைத்துக் கொண்ட தீபன் தானும் அந்த சொர்க்கத்திற்குள் விரும்பித் தஞ்சம் புகுந்து கொண்டான். அவர்கள் வாழ்வும் சொர்க்க புரி போல முழுமையடைந்தது.